# 1

# பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள்

## 1.1 பொதுநோக்கு

**இலங்கையின் உண்மை பொருளாதார வளர்ச்சி 2014ஆம் ஆண்டின் 4.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2015இல் 4.8 சதவீதத்தினைப் பதிவுசெய்தது.** இலங்கையின் பாரம்பரிய ஏற்றுமதிச் சந்தைகளில் காணப்பட்ட கேள்வியின் வளர்ச்சியிலான மெதுவான போக்கு ஏற்றுமதித் துறையின் வளர்ச்சியைப் பாதித்த வேளையில் வலுவடைந்து வந்த ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதாரம் குறுங்கால மூலதன வெளிப்பாய்ச்சலைத் தூண்டியது. இத்தகைய அபிவிருத்திகளின் தாக்கமானது, தாழ்ந்த பன்னாட்டு பண்ட விலைகளினால் ஓரளவிற்கு எதிரீடு செய்யப்பட்டது. இருப்பினும்கூட, குறிப்பாக அரச துறை ஊழியர்களிடையேயான வருமான அதிகரிப்பின் காரணமாக உள்நாட்டு நுகர்வு மீளெழுச்சியுற்றது. வேளாண்மை மற்றும் பணிகள் துறையுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் முறையே 5.5 சதவீதத்தினாலும் 5.3 சதவீதத்தினாலும் அதிகரித்த வேளையில், கைத்தொழில் தொடர்பான நடவடிக்கைகள் 2015இல் 3.0 சதவீதத்தினால் அதிகரித்தன. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான பணவீக்கம், பண்ட விலைகள் குறைவடைந்தமையின் பிரதான காரணமாக 2015 யூலை - செத்தெம்பர் காலப்பகுதியில் எதிர்க்கணியமான பிரிவில் காணப்பட்டது. 1995 மார்ச்சிற்குப் பின்னர் பணவீக்கம் எதிர்க்கணியமாக மாறியது இதுவே முதற்றடவையாகும். எனினும், 2015 இறுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முதன்மைப் பணவீக்கம் 2014 இறுதியின் 2.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2.8 சதவீதத்தினைப் பதிவு செய்தது. இதன்படி, கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் கூடையிலிருந்து வலு மற்றும் தெரிவுசெய்யப்பட்ட உணவு வகைகளை நீக்கியதன் பின்னர் கணிப்பிடப்படும் மையப் பணவீக்கம், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 2015 பெப்புருவரியில் 0.8 சதவீதத்திலிருந்து வளர்ச்சியடைந்து ஆண்டின் இறுதியில் 4.5 சதவீதத்தினை அடைந்தது. இதற்கு, வங்கிக் கொடுகடனின் அதிகரித்த வளர்ச்சி அதேபோன்று அரச ஊழியர்களுக்கும் பொருளாதாரத்திலுள்ள ஏனைய ஊழியர்களுக்கும் வழங்கப்பட்ட உயர்ந்த கூலிகள் என்பன தூண்டுதலாக அமைந்தன. அதேவேளை, தாழ்ந்த எண்ணெய் விலைகளிலிருந்து கணிசமான நன்மைகளும் சுற்றுலாத் துறையில் தொடர்ச்சியாக சாதகமான போக்குகளும் காணப்பட்டமைக்கிடையிலும் தொழிலாளர் பணவனுப்பல்கள் உட்பட, தேறிய வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களில் மெதுவான தன்மை மற்றும் மூலதன வெளிப்பாய்ச்சல் என்பன சென்மதி நிலுவையில் திரண்ட பற்றாக்குறையினை உருவாக்கின. அரசின் வரி மற்றும் வரியல்லா அரசிறைகளில் காணப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினை மாற்றுவதற்கான முயற்சிகள் மிதமான வெற்றியையளித்தனவெனினும், அரச வரவு செலவுத்திட்டத்தின் செலவினப் பக்கத்தில் அளவுக்கு மீறிய செலவின் காரணமாக வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை இலக்கிடப்பட்ட பற்றாக்குறையான 4.4 சதவீதத்திற்கெதிராக மொ.உ.உற்பத்தியின் 7.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. 2015இன் இறுதியில் மத்திய அரச படுகடன் மொ.உ.உற்பத்தியின் 76.0 சதவீதத்திற்கு வளர்ச்சியடைந்தது. 2015 சனவரியில் சனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட புதிய கூட்டு அரசாங்கம் 2015 ஓகத்தில் நடத்தப்பட்ட பொதுத் தேர்தலுக்கு முன்னர் 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன்

அட்டவணை 1.1

## பேரண்டப் பொருளாதார செயலாற்றம் (2011 - 2015)

| குறிகாட்டி | அலகு | 2011 | 2012 | 2013 | 2014(அ) | 2015(ஆ) |
|---|---|---|---|---|---|---|
| **உண்மைத்துறையும் பணவீக்கமும்** | | | | | | |
| உண்மை மொ.உ.உ வளர்ச்சி (இ) | % | 8.4 | 9.1 | 3.4 | 4.9 (ஆ) | 4.8 |
| சந்தை விலைகளில் மொ.உ.உ (இ) | ரூ.பில் | 7,219 | 8,732 | 9,592 | 10,448 (ஆ) | 11,183 |
| தலைக்குரிய மொ.உ.உ (இ) | ஐ.அ.டொ | 3,129 | 3,351 | 3,610 | 3,853 (ஆ) | 3,924 |
| வருடாந்த சராசரி பணவீக்கம் (ஈ) | % | 6.7 | 7.6 | 6.9 | 3.3 | 0.9 |
| **வெளிநாட்டுத்துறை** | | | | | | |
| வர்த்தக நிலுவை (இ) | மொ.உ.உ.இன் % | -14.9 | -13.8 | -10.2 | -10.4 | -10.2 |
| நடைமுறை கணக்கு நிலுவை (இ) | மொ.உ.உ.இன் % | -7.1 | -5.8 | -3.4 | -2.5 | -2.4 |
| திரண்ட நிலுவை | ஐ.அ.டொ.மில் | -1,059 | 151 | 985 | 1,369 | -1,489 |
| வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் | ஐ.அ.டொ.மில் | 6,749 | 7,106 | 7,495 | 8,208 | 7,304 |
| **இறைத்துறை** | | | | | | |
| நடைமுறை கணக்கு நிலுவை | மொ.உ.உ.இன் % | -0.8 | -0.9 | -0.7 | -1.2 | -2.2 |
| திரண்ட நிலுவை | மொ.உ.உ.இன் % | -6.2 | -5.6 | -5.4 | -5.7 | -7.4 |
| மத்திய அரச படுகடன் | மொ.உ.உ.இன் % | 71.1 | 68.7 | 70.8 | 70.7 | 76.0 |
| நிதியியல் துறை (உ) | | | | | | |
| விரிந்த பண வளர்ச்சி ($M_2b$) | % | 19.1 | 17.6 | 16.7 | 13.4 | 17.8 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி ($M_2b$ **இல்**) | % | 34.5 | 17.6 | 7.5 | 8.8 | 25.1 |


(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் மொ.உ.உ. மதிப்பீடு 2010 அடியாண்டை அடிப்படையாகக் கொண்டது
(ஈ) கொ.நு.வி.சு (2006/07=100)ஐ அடிப்படையாகக் கொண்டது
(உ) ஆண்டு இறுதிப் பெறுமதிகளின் அடிப்படையில் ஆண்டுக்காண்டு வளர்ச்சி

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

மீது கவனத்தினைச் செலுத்தியது. தளம்பலுற்ற உலகளாவிய பொருளாதார நிலைமைகளுக்கான கொள்கைப் பதிலிறுப்புக்கள் 2015 ஓகத்தில் பொதுத் தேர்தல் நடத்தப்பட்ட பின்னர் படிப்படியாக மாற்றமடைவதற்கு காலத்தினை எடுத்தது. விலை மற்றும் நிதியியல் உறுதிப்பாடு என்பன மீது அதிகரித்துவரும் கேள்வி அழுத்தங்களின் மோசமான தாக்கத்தை கட்டுப்படுத்தும் பொருட்டும் சென்மதி நிலுவையின் மீதான அழுத்தங்களை தணிப்பதற்கு உதவும் விதத்திலும் மத்திய வங்கி, செலாவணி கட்டுப்பாட்டு முகாமைத்துவத்தில் பெருமளவு நெகிழ்ச்சித்தன்மையினை வழங்கியமை தெரிவுசெய்யப்பட்ட கேள்வி முகாமைத்துவ சாதனமொன்றாக பெறுமதி விகிதத்திற்கான கடனின் புதிய பேரண்ட முன்மதியுடைய ஒழுங்குமுறையொன்றினை நடைமுறைப்படுத்தியமை, நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டின் மேல் நோக்கிய சீராக்கமொன்றினூடாக நாணயக் கொள்கை இறுக்கமாக்கப்பட்டமை மற்றும் மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்கள் பின்னர் அதிகரிக்கப்பட்டமை என்பனவற்றினூடாக மத்திய வங்கி நேரகாலத்துடன் சீர்செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஏற்றுமதியினால் வழிநடத்தப்படும் பொருளாதார வளர்ச்சியின் மீது புதிதாகக் கவனம் செலுத்தப்பட்டமை மற்றும் அரச படுகடனின் ஊசலாடும் தன்மையினை உள்ளடக்குவதற்காக அரச அரசிறையின் சேகரிப்புக்களுக்குப் பக்கபலமாக இருந்தமை என்பன அரசின் நடுத்தர கால பொருளாதார உபாயத்தின் முக்கிய தூண்டுதல் காரணிகளாக விளங்கியதுடன், இதனை அடையும் விதத்தில் அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட அமைப்பியல் சீர்திருத்தங்கள் பன்னாட்டு நாணய நிதியத்தினால் அங்கீகரிக்கப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

**பொருத்தமான கொள்கைகளின் காரணமாக, நடுத்தர காலத்தில் பொருளாதாரம் உயர் வளர்ச்சிப் பாதைக்கு திரும்புமென எதிர்பார்க்கப்படுகிறது.** மொ.உ.உற்பத்தியின் விகிதமாக குறைவடைகின்ற அரசின் அரசிறை மற்றும் மிகையான அரசின் செலவினம், மொ.உ.உற்பத்தியின் விகிதமாக வீழ்ச்சியடைகின்ற ஏற்றுமதி மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல் போதுமானதாக இல்லாமை என்பன உட்பட பொருளாதாரத்தினால் எதிர்நோக்கப்படும் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட தடைகளைக் கட்டுப்படுத்துவது நடுத்தர காலத்தில் நீடித்து நிலைத்திருக்கும் பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்கு முக்கிய உள்ளீடுகளாக இருக்கும். மேலும், அரசாங்கத்தின் கவனத்தினை தேவைப்படுத்தும் மற்றைய அமைப்பியல் மற்றும் தோற்றம்பெற்றுவரும் சவால்கள் உயர் தகைமை வாய்ந்த மனித மூலதனத்திற்கான வளர்ந்துவரும் கேள்விக்கு ஆதரவளிக்கும் விதத்தில் தேவையான தேர்ச்சிகளின் அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்காக கூடியளவு வினைத்திறன் மிக்க முறைமைகளை நடைமுறைக்கிடுதல்; வீதிப் போக்குவரத்து நெரிசலின் காரணமாக ஏற்படும் பொருளாதார இழப்புக்களைக் கட்டுப்படுத்துவதற்காக பொதுப் போக்குவரத்தினை மேம்படுத்துதல்; புதுப்பிக்கத்தக்க வலு அபிவிருத்தி மீதான தேசிய கொள்கையினை வலுப்படுத்தல் மற்றும் வலுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்; வலு மற்றும் பொதுப் பயன்பாட்டு வசதிகளுக்காக வீரியம் மிக்க சந்தையை அடிப்படையாகக் கொண்ட விலையிடல் சூத்திரத்தினை அறிமுகப்படுத்தல்; குறைந்த உற்பத்தித்திறன், பன்முகப்படுத்தல் போதாமை, உணவுப் பாதுகாப்பின்மை மற்றும்

**வரைபடம் 1.1** காலாண்டுக்கான உண்மை மொ.உ.உற்பத்தியின் வளர்ச்சி (ஆண்டுக்காண்டு)




நீர் முகாமைத்துவத்தில் காணப்படும் வினைத்திறனற்றதன்மை என்பன உள்ளிட்ட வேளாண்மையில் காணப்படும் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துதல்; அரச மூலவளங்கள் மீது தடைகள் காணப்படுகின்றமைக்கிடையில் சமூக பொருளாதார உட்கட்டமைப்பினையும் இலாபம் தரத்தக்க வாழ்வாதார வாய்ப்புக்களையும் இயலுமைப்படுத்தலை உருவாக்கல்; அரச துறை ஓய்வூதியத் திட்டத்தின் வலுவான தன்மையினை உறுதிப்படுத்துகின்ற வேளையில் முழுத் தொழிற்படையும் உள்ளடக்கப்படுகின்றமையினை உறுதிப்படுத்தும் விதத்தில் சந்தைசார்ந்த ஓய்வூதிய, ஓய்வுகாலத் திட்டங்களை அறிமுகப்படுத்துதல்; நிதியியல் இடையீடுகளின் வினைத்திறனை உயர்த்துவதனூடாக நிதியியல் ஆழத்தினை வசதிப்படுத்துதல், பல்வேறுபட்ட நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் முறைசார்ந்த நிதியினை அணுகக்கூடிய தன்மைகளை மேம்படுத்துதல் அதேபோன்று நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலப்பகுதியில் உத்வேகம் மிக்க நீடித்த வளர்ச்சியைப் பெற வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கொள்கை தாங்கிருப்புக்களைக் கட்டியெழுப்புதல் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கின்றன.

## 1.2 2015இன் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள், உறுதிப்பாடு மற்றும் கொள்கை பதிலிறுப்புக்கள்

### உண்மைத் துறை அபிவிருத்திகள் மற்றும் பணவீக்கம்


தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட தற்காலிக மதிப்பீடுகளின்படி உண்மை நியதிகளில் 2015ஆம் ஆண்டுப் பகுதியில் பொருளாதாரம் 2014இன் 4.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 4.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.[1] நிதியியல் பணிகள் (15.8 சதவீதம்), உண்மைச் சொத்து நடவடிக்கைகள் (9.6 சதவீதம்), போக்குவரத்து நடவடிக்கைகள் (5.5 சதவீதம்) மற்றும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் (4.7 சதவீதம்) என்பனவற்றின் வளர்ச்சியினால் பங்களிக்கப்பட்டு மொ.உ. உற்பத்தியில் 56.6 சதவீதத்திற்கு வகைகூறிய பணிகள் நடவடிக்கைகள் 5.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. கட்டடவாக்கம் (-0.9 சதவீதம்), சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் (-0.9 சதவீதம்) என்பனவற்றின் நடவடிக்கைகளில் சிறிதளவு மெதுவானதன்மை காணப்பட்ட போதும் மொ.உ.உற்பத்தியின் 26.2 சதவீதத்திற்கு வகைகூறிய கைத்தொழில் நடவடிக்கைகள் 3.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு தயாரிப்பு நடவடிக்கைகளில் (4.7 சதவீதம்) காணப்பட்ட வளர்ச்சியே முக்கிய ஆதரவாக அமைந்தது. மொ.உ.உற்பத்தியின் 7.9 சதவீதத்திற்கு வகைகூறிய வேளாண்மை நடவடிக்கைகள் 5.5 சதவீதத்தினால் விரிவடைந்தமைக்கு அரிசி (23.3 சதவீதம்) மற்றும் காய்கறிகள் (24.9 சதவீதம்) என்பனவற்றின் பயிர்ச்செய்கையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சி முக்கிய காரணமாக அமைந்த போதும் மீன்பிடி (-2.7 சதவீதம்), இறப்பர் (-10.1 சதவீதம்) மற்றும் தேயிலை (-2.6 சதவீதம்) என்பனவற்றின் பயிர்ச்செய்கை சுருக்கமடைந்தது.

செலவின அணுகுமுறைகளின்படி 2015இல் உண்மை மொ.உ. உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு **நுகர்வுக் கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பு பெரும் தூண்டுதலாக அமைந்த வேளையில் முதலீட்டு நடவடிக்கைகள் மிதமான பங்களிப்பினை வழங்கின.** அரச துறை நுகர்வுச் செலவினம் உயர்ந்த வீதத்தில் வளர்ச்சியடைந்து 2015இல் அரச துறை ஊழியர்களின்

1. 2015 யூலையில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களமானது தேசிய கணக்குகள் புள்ளிவிபரத்திற்கான அடிப்படை ஆண்டினை 2002இலிருந்து 2010இற்கு மாற்றிய அதேவேளை தேசிய கணக்கீட்டிற்காக ஐக்கிய நாடுகள் முறைமையின் 2008 நியமத்தை பின்பற்றியிருந்தது. மேம்பட்ட தொகுப்புச் செயன்முறையானது கடந்த தசாப்தங்களில் இலங்கையின் பொருளாதார கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களை உள்ளடக்குவதுடன் தேசிய கணக்கீட்டு முறைமைக்குள் புதிய பொருளாதார நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துகின்றது. மீள்தளமிடப்பட்ட மொ. உ. உற்பத்தி மதிப்பீடுகள் பேரிணப் பொருளதார குறிகாட்டிகள் மீது வேறுபட்ட தாக்கங்களைக் கொண்டிருந்தன. இவ்வறிக்கையில் 2015ஆம் ஆண்டிற்கான இலங்கை பொருளாதாரத்தின் நிலை தொடர்பான பகுப்பாய்வானது புதிய மொ. உ. உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டதுடன் அவை தற்காலிகமானவையாகும்.

வரைபடம் 1.2

**சேமிப்பும் முதலீடும் (மொ.உ.உ. இன் சதவீதமாக)**




சம்பளங்கள் மற்றும் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பினை முக்கியமாகப் பிரதிபலித்தது. தனியார் துறை நுகர்வுச் செலவினமும் இவ்வாண்டுப் பகுதியில் வளர்ச்சியடைந்தமைக்கு குறைந்த வட்டி வீதச் சூழலும் அதிகரித்த உண்மைக் கூலிகளும் முக்கிய காரணங்களாக அமைந்தன. எனினும், மொத்த மூலதன உருவாக்கத்தினால் அளவிடப்பட்டவாறு முதலீட்டு நடவடிக்கைகள் 2015ஆம் ஆண்டுப் பகுதியில் குறைவடைந்தன. அதேவேளை, முக்கியமாக நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளுக்கான, அதிகரித்த கேள்வி மற்றும் இலங்கையின் முக்கிய ஏற்றுமதி நாடுகளிலிருந்தான நலிவடைந்த கேள்வி என்பனவற்றின் இணைந்த விளைவாக இவ்வாண்டுப் பகுதியில் உண்மை நியதிகளில் தேறிய வெளிநாட்டுக் கேள்வி தேய்வடைந்தது.

**உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2014இன் மொ.உ.உற்பத்தியின் 24.0 சதவீதத்திலிருந்து 2015இல் மொ.உ.உற்பத்தியின் 22.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன.** தனியார் சேமிப்புக்கள் பெரும்பாலும் மாற்றமின்றிக் காணப்பட்டதனால், எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க அரசின் அரசிறை குறைவாக இருந்தமைக்கிடையில் அரச குறைச் சேமிப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்புடன் இணைந்த அளவுக்கு மீறிய மீண்டெழும் செலவினம் இவ்வாண்டுப் பகுதியில் உள்நாட்டுச் சேமிப்பில் மோசமான தன்மையொன்றைத் தோற்றுவித்தது. இது முதலீடுகள் மீதான வருவாய்களில் ஏற்பட்ட குறைப்பு, அதிகரித்த வெளிப்பாய்ச்சல்களின் காரணமாக வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் மோசமடைந்ததுடன் இணைந்து 2015இல் தேசிய சேமிப்புக்களை குறைவடையச் செய்தபோதும் பணவனுப்பல்கள் ரூபா நியதிகளில் சிறிதளவிற்கு அதிகரித்தன. இதன்படி, தேசிய சேமிப்புக்கள் முன்னைய ஆண்டின் மொ.உ.உற்பத்தியின் 29.5 சதவீதத்திலிருந்து 2015இல் மொ.உ.உற்பத்தியின் 27.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக முதலீடுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக தேசிய சேமிப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியிலும் பார்க்க உயர்வானவையாக இருந்தமையினால் சேமிப்புக்கள் - முதலீட்டு இடைவெளி 2015இல் குறுக்கமடைந்தது.

அட்டவணை 1.2

**நடைமுறை சந்தை விலைகளில் கூட்டுக் கேள்வியும் சேமிப்பு முதலீட்டு இடைவெளியும் (அ) (ஆ)**

| விடயம் | ரூ. பில்லியன் | | வளர்ச்சி (%) | | மொ.உ.உ. இன் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 |
| **1. உள்நாட்டுக் கேள்வி** | **11,285.0** | **12,013.7** | **8.3** | **6.5** | **108.0** | **107.4** |
| 1.1 நுகர்வு | 7,943.8 | 8,652.2 | 9.9 | 8.9 | 76.0 | 77.4 |
| தனியார் | 7,074.7 | 7,666.4 | 9.1 | 8.4 | 67.7 | 68.6 |
| அரசு | 869.1 | 985.8 | 16.6 | 13.4 | 8.3 | 8.8 |
| 1.2 முதலீடு (மொத்த உள்நாட்டு மூலதன உருவாக்கம்) | 3,341.2 | 3,361.5 | 4.8 | 0.6 | 32.0 | 30.1 |
| **2. தேறிய வெளிநாட்டுக் கேள்வி** | **-836.5** | **-830.5** | **-1.2** | **0.7** | **-8.0** | **-7.4** |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 2,185.0 | 2,295.4 | 12.1 | 5.1 | 20.9 | 20.5 |
| பொருட்களினதும் பணிகளினதும் இறக்குமதிகள் | 3,021.5 | 3,125.9 | 8.9 | 3.5 | 28.9 | 28.0 |
| **3. மொத்தக் கேள்வி (மொ.உ.உ.) (1 + 2)** | **10,448.5** | **11,183.2** | **8.9** | **7.0** | **100.0** | **100.0** |
| **4. உள்நாட்டுச் சேமிப்புக்கள் (3 - 1.1)** | **2,504.7** | **2,531.0** | **6.0** | **1.1** | **24.0** | **22.6** |
| தனியார் | 2,632.4 | 2,777.8 | 8.3 | 5.5 | 25.2 | 24.8 |
| அரசு | -127.7 | -246.8 | -88.5 | -93.3 | -1.2 | -2.2 |
| **5. வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் (இ)** | **-236.7** | **-251.3** | **-4.7** | **-6.2** | **-2.3** | **-2.2** |
| **6. வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் (இ)** | **813.1** | **833.5** | **11.6** | **2.5** | **7.8** | **7.5** |
| **7. தேசிய சேமிப்புக்கள் (4 + 5 + 6)** | **3,081.1** | **3,113.2** | **7.5** | **1.0** | **29.5** | **27.8** |
| **8. சேமிப்பு முதலீட்டு இடைவெளி** | | | | | | |
| உள்நாட்டுச் சேமிப்புக்கள் - முதலீடு (4 - 1.2) | -836.5 | -830.5 | | | -8.0 | -7.4 |
| தேசிய சேமிப்புக்கள் - முதலீடு (7 - 1.2) | -260.0 | -248.3 | | | -2.5 | -2.2 |
| **9. வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு நிலுவை (2 + 5 + 6) (இ)** | **-260.0** | **-248.3** | | | **-2.5** | **-2.2** |

(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் மொ.உ.உ. மதிப்பீடு 2010 அடியாண்டை அடிப்படையாகக் கொண்டது.
(ஆ) தற்காலிகமானது
(இ) சென்மதி நிலுவை மதிப்பீடுகளின் வேறுபாடுகளிற்கு தொகுப்பில் ஏற்படுகின்ற காலதாமதமே காரணமாகும்.

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 1.3 நிலையான விலைகளில் (2010) கைத்தொழில் மூலத்தின்படி மொத்தத் தேசிய வருமானம் (அ) (ஆ)

| பொருளாதார நடவடிக்கை | பெறுமதி (ரூ. மில்லியன்) | | மொ.உ.உ. இன் பங்கு (%) | | மாற்றத்தின் வீதம் (%) | | மாற்றத்திற்கான பங்களிப்பு (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2014(இ) | 2015 | 2014(இ) | 2015 | 2014(இ) | 2015 | 2014(இ) | 2015 |
| **வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி** | **641,493** | **676,899** | **7.8** | **7.9** | **4.9** | **5.5** | **7.8** | **9.0** |
| வேளாண்மை மற்றும் காட்டுத்தொழில் | 520,835 | 559,445 | 6.3 | 6.5 | 5.1 | 7.4 | 6.7 | 9.8 |
| மீன்பிடித் தொழில் | 120,658 | 117,453 | 1.5 | 1.4 | 3.7 | -2.7 | 1.1 | -0.8 |
| **கைத்தொழில்** | **2,194,167** | **2,259,223** | **26.7** | **26.2** | **3.5** | **3.0** | **19.6** | **16.5** |
| சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 202,905 | 201,036 | 2.5 | 2.3 | 2.2 | -0.9 | 1.2 | -0.5 |
| தயாரிப்பு | 1,292,994 | 1,354,083 | 15.7 | 15.7 | 2.3 | 4.7 | 7.6 | 15.5 |
| மின்வலு, எரிவாயு, நீர் மற்றும் கழிவு கையாளல் | 108,157 | 119,105 | 1.3 | 1.4 | 4.7 | 10.1 | 1.3 | 2.8 |
| கட்டடவாக்கம் | 590,111 | 584,999 | 7.2 | 6.8 | 6.6 | -0.9 | 9.6 | -1.3 |
| **பணிகள்** | **4,634,805** | **4,881,273** | **56.3** | **56.6** | **5.2** | **5.3** | **59.9** | **62.6** |
| மொத்த மற்றும் சில்லறை வியாபாரம்<br>போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல்<br>குடியிருப்பு மற்றும் உணவுப் பணிகள் நடவடிக்கை | 1,914,236 | 2,002,655 | 23.3 | 23.2 | 4.0 | 4.6 | 19.3 | 22.5 |
| தகவல் மற்றும் தொடர்பூட்டல் | 44,102 | 49,613 | 0.5 | 0.6 | 11.6 | 12.5 | 1.2 | 1.4 |
| நிதியியல், காப்புறுதி மற்றும் இரட்டை வதிவுரிமை உள்ளடங்கலாக உண்மைச் சொத்து நடவடிக்கைகள் | 945,090 | 1,061,757 | 11.5 | 12.3 | 8.1 | 12.3 | 18.6 | 29.6 |
| தொழிற்தகமை பணிகள் மற்றும் ஏனைய தனியார் பணிகள் நடவடிக்கைகள் | 1,007,434 | 1,020,397 | 12.2 | 11.8 | 4.3 | 1.3 | 11.0 | 3.3 |
| பொது நிர்வாகம், பாதுகாப்பு, கல்வி, மனிதநலம் மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் | 723,943 | 746,852 | 8.8 | 8.7 | 5.5 | 3.2 | 9.8 | 5.8 |
| **அடிப்படை விலையில் மொத்தப் பெறுமதி கூட்டல்** | **7,470,465** | **7,817,394** | **90.8** | **90.7** | **4.7** | **4.6** | **87.3** | **88.1** |
| மானியங்கள் நீங்கலாக உற்பத்தி மீதான வரி | 758,521 | 805,431 | 9.2 | 9.3 | 6.9 | 6.2 | 12.7 | 11.9 |
| **சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **8,228,986** | **8,622,825** | **100.0** | **100.0** | **4.9** | **4.8** | **100.0** | **100.0** |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் | -189,495 | -196,496 | | | -2.9 | -3.7 | | |
| **சந்தை விலையில் மொத்த தேசிய வருமானம்** | **8,039,492** | **8,426,330** | | | **4.9** | **4.8** | | |

(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் மொ.உ.உ. மதிப்பீடு 2010 அடியாண்டை அடிப்படையாகக் கொண்டது.
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**வேளாண்மைத்துறை வளர்ச்சி உத்வேகத்தினை விரைவுபடுத்தி மொ.உ.உற்பத்தியில் அதன் பங்கினை 2015இல் 7.9 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்துக் கொண்டது.** வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளிலிருந்தான பெறுமதிகூட்டல் முன்னைய ஆண்டின் 4.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 5.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இது, பெரும்பாலும் 23.3 சதவீத உயர்ந்த வளர்ச்சியைப் பதிவுசெய்த அரிசி உற்பத்தியில் ஏற்பட்ட விரிவினால் தூண்டப்பட்டதாகும். 2014இல் மிக மோசமான வானிலை நிலைமைகளினால் பாதிக்கப்பட்ட நெல் உற்பத்தி 2014/2015 பெரும்போகம், 2015 சிறுபோகம் ஆகிய இரு காலப்பகுதிகளிலும் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு சாதகமான வானிலை நிலைமைகள் மற்றும் நெல்லின் அதிகரித்த கொள்விலை என்பன ஆதரவாக அமைந்தன. தெங்கு (5.1 சதவீத வளர்ச்சி), பழவர்க்கங்கள் (16.5 சதவீத வளர்ச்சி) மற்றும் காய்கறிகள் (24.9 சதவீத வளர்ச்சி) என்பனவற்றை உள்ளடக்கிய மற்றைய பல முக்கிய துணைத் துறைகளிலிருந்தான பெறுமதிகூட்டல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015இல் அதிகரித்தமைக்கு சாதகமான வானிலை நிலைமைகளே காரணமாக அமைந்தன. எனினும், தேயிலைத் பயிர்ச்செய்கை தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக சுருக்கமடைந்து 2.6 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு முக்கிய ஏற்றுமதி நாடுகளிலிருந்தான குறைந்த கேள்வி உட்பட வழங்கல்பக்கக் காரணிகளும் அதேபோன்று கேள்வி நிலைமைகளுக்கான பதிலிறுப்புக்களுமே காரணமாக அமைந்தன. இறப்பர் பயிர்ச்செய்கையும் 10.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு இறப்பரின் உலகளாவிய விலைகள் வீழ்ச்சியடைந்தமையின் விளைவாக சிறுஉடமையாளர்களின் பாலெடுக்கும் தொழிற்பாடுகள் மெதுவடைந்தமையே ஓரளவிற்குக் காரணமாகும். உடன்பாலுக்கான சாதகமான உற்பத்தியாளர் விலைகள் மற்றும் பால் தொழிற்சாலைகளின் அதிகரித்த இயலளவு என்பனவற்றின் காரணமாக பால் உற்பத்தி அதிகரித்தமையுடன் விலங்கு உற்பத்தி நடவடிக்கைகள் 2015இல் வளர்ச்சியடைந்தது. எனினும், மீன்பிடித் துறையிலிருந்தான பெறுமதிகூட்டல்கள் நன்னீர் மீன்பிடி அதேபோன்று கடல் மீன்பிடி என்பனவற்றிலிருந்தான தாழ்ந்த உற்பத்தியின் காரணமாக சுருக்கமடைந்தது.

**2015இல் வேளாண்மைத் துறையின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு பங்களிக்கக்கூடிய பல்வேறு வழிமுறைகளை அரசாங்கம் அறிமுகப்படுத்தியது.** நெல் மற்றும் உடன்பாலின் கொள்வனவு விலைகளில் செய்யப்பட்ட அதிகரிப்பு இத்துறைகளின் அதிகரித்த உற்பத்திகளுக்குப் பங்களித்திருக்கிறது. தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு துறைகளின் மீள்நடுகை மற்றும் புதுநடுகைகளை ஊக்குவிப்பதற்கான உதவுதொகை நிகழ்ச்சித்திட்டங்கள் இத்துறைகளின் உற்பத்தித்திறனை அதிகரிக்க இலக்கிடப்பட்டன. தேயிலையின் சராசரி மிகச்

சிறந்த இலை நியமத்தை தரமுயர்த்துவதற்காக "பீ - லீவ் - 60" நிகழ்ச்சித்திட்டத்தை இலங்கை தேயிலைச் சபை தொடர்ந்ததுடன் தரமான பச்சையிலையை வழங்கும் சிறு உடமையாளர்களுக்காக உதவுத்தொகைத் திட்டமொன்றை 2015 மாச்சில் அறிமுகப்படுத்தியது. மேலும், தேயிலை தொழிற்சாலை உற்பத்தியாளர்களினால் முகங்கொடுக்கப்பட்ட நிதியியல் இடர்பாடுகளிலிருந்து மீண்டெழும் நோக்கில் அரசாங்கத்தால் குறுங்கால தொழில் மூலதனக் கடன் திட்டம் அமுலாக்கப்பட்டதுடன் இத்திட்டத்திற்காக மத்திய வங்கியினால் 2 சதவீத மானிய வட்டி வீதமும் வழங்கப்படுகின்றது. 2015இல் இலங்கையில் ஒட்டுமொத்த மீன் வகைகளின் ஏற்றுமதிகளைப் பாதிக்கின்ற இலங்கையிலிருந்தான மீன் ஏற்றுமதிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைகளை விலக்கும் பொருட்டு ஐரோப்பிய ஒன்றியத்தினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பயிர்களை பன்முகப்படுத்தல் மற்றும் உற்பத்தித்திறன் மேம்பாடுகளூடாக இன்றியமையாத உணவுப் பண்டங்களில் சுயநிறைவினை நாடு அடைவதனை இயலச்செய்யும் நோக்குடன் 2016இற்கான வரவு செலவுத்திட்டத்தில் வேளாண்மைக் கொள்கைகள் முன்மொழியப்பட்ட வேளையில், ஏற்றுமதிச் சந்தைகளை அணுகுவதன் மூலம் வாழ்வாதாரத்திற்கான வேளாண்மையிலிருந்து வேளாண்மை - வியாபாரத்தினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தினை நோக்கி நகர எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி, வரவு செலவுத்திட்டத்தில் நெல், சோளம், எள்ளு, மிளகு, உழுந்து போன்றவற்றிற்கு அதி நவீனத்துவம் மிக்க தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய களஞ்சியசாலைகளையும் காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்களுக்கு குளிரூட்டப்பட்ட அறைகளையும் நிறுவுதல், உள்ளூர் மீன்பிடித்துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல், வேளாண் விலங்கு வளர்ப்பு மற்றும் மீன்களைப் பதனிடும் பூங்காக்களை உருவாக்குதல் அதேபோன்று வேளாண்மை பொறிகள் மற்றும் கருவிகள் தொடர்பான இறக்குமதித் தீர்வைகளை அகற்றுதல் உட்பட பல கொள்கை வழிமுறைகள் முன்மொழியப்பட்டன. ஏற்கனவேயுள்ள வளமாக்கி உதவுதொகைக்குப் பதிலாக காசுக் கொடைகளை வழங்குவது வேளாண்மையாளர்கள் பயிர்செய்கை உள்ளீடுகளைத் தெரிவுசெய்வதற்கு பெருமளவு நெகிழ்ச்சித்தன்மையை வழங்குவதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதேநேரம் வேளாண்மைத் துறையில் அதிகளவு நச்சுத்தன்மை கொண்ட வேளாண் இரசாயனங்கள் பயன்படுத்தப்படுவதனைத் தடுக்கும் நோக்குடன் 2016 மாச்சு தொடக்கப்பகுதியில் "ஆரோக்கியமான வேளாண்மை - நலம் நிறைந்த மக்கள் - நச்சுத்தன்மையற்ற தேசம்" என்ற தொனிப்பொருளின் கீழ் மூன்றாண்டு தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது. மேலும், இலங்கையின் வேளாண்மையினை உலகளாவிய ரீதியில் போட்டித்தன்மையுடையதாக்கும் பொருட்டு 23 பாரிய வேளாண்மை அபிவிருத்தி வலயங்களை நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. மேற்குப் பிராந்தியத்தில் பெருநகர முதன்மைத் திட்டத்தின் ஒரு பகுதியாக பெருந்தோட்ட நகரம் மற்றும் காட்டு நகரம் என்பன உட்பட 13 திட்டமிடப்பட்ட பிரதேசங்களை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**2015இல் கைத்தொழில் துறையின் வளர்ச்சி 3.0 சதவீதத்திற்கு கீழ்நோக்கி மெதுவடைந்து கைத்தொழிலின் மொ.உ.உற்பத்தியில் அதன் பங்கினை 26.2 சதவீதத்திற்கு சிறிதளவால் குறைவடையச் செய்தது.** கட்டடவாக்கம், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளில் ஏற்பட்ட சுருக்கம் கைத்தொழில் துறையின் மெதுவான வளர்ச்சிக்கு பெருமளவிற்குப் பங்களித்தது. எனினும், கைத்தொழில் துறையின் முக்கிய கூறான தயாரிப்பு நடவடிக்கைகளின் ஆதரவுடன் இத்துறை 4.7 சதவீதத்தினால் விரிவடைந்தது. இதற்கு உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகளின் பெருமளவு தூண்டுதல்களே காரணமாகும். மேலதிகமாக, இயந்திரம் மற்றும் கருவிகள், உலோகம் மற்றும் உலோக உற்பத்திகள், மற்றும் தளபாடங்கள் என்பவற்றின் தயாரிப்பும் தயாரிப்பு யெற்பாடுகளின் வளர்ச்சி உத்வேகத்திற்கு ஆதரவளித்தது. அதேவேளை, மின்வலு, நீர் மற்றும் கழிவுச் சுத்திகரிப்பு நடவடிக்கைகளும் கைத்தொழிலின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு சாதகமாகப் பங்களித்தன. புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் என்பன தொடர்பான உற்பத்திகளிலான பெறுமதிகூட்டல்கள் 2015 காலப்பகுதியில் வளர்ச்சியைப் பதிவுசெய்தன.


**பிரதேசக் கைத்தொழில் அபிவிருத்தி முயற்சிகளை மேம்படுத்துவதற்காக இறைச் சலுகைகள், தொழில்நுட்ப உதவி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைத் தரமுயர்த்தல் என்பனவற்றின் மூலம் கைத்தொழில் அபிவிருத்தியை நோக்கிய அரசின் ஊக்குவிப்புக்கள் தொடர்ந்தன.** 20 மாவட்டங்களில் நடவடிக்கைத் திட்டமொன்றினை அபிவிருத்தி செய்வது உட்பட சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் அபிவிருத்திக்காக தேசிய கொள்கை கட்டமைப்பொன்று கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சினால் வடிவமைக்கப்பட்டது. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான கடன்வழங்கலை உயர்த்துவதற்காக வர்த்தக வங்கிகளை ஊக்குவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பின்தங்கிய பிரதேசங்களை, முக்கியமாக வடக்கு மற்றும் கிழக்கினைக் கவனத்தில் கொண்டு கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் பிரதேச கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கைத்தொழில் பேட்டைகளை அபிவிருத்தி செய்து தரமுயர்த்தும்

வேலைகள் தொடர்ந்தன. இதன்படி, மற்றைய பல கைத்தொழில் நகரங்களை பல்வேறு மாவட்டங்களிலும் பரந்துள்ள சிறப்பியல்பு வாய்ந்த பொருளாதார வலயங்களாக அபிவிருத்தி செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் பரந்தளவு குறிக்கோள்களுடன் இசைந்துசெல்லும் விதத்தில், அறிவினை அடிப்படையாகக் கொண்ட புத்தாக்கத்தினால் தூண்டப்படுகின்ற பொருளாதாரமொன்றிற்கு நாடு மாற்றமடைவதனை இயலச்செய்யும் விதத்தில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் நகரமொன்றினை உருவாக்குவதற்கு மேற்குப் பிராந்திய பொருளாதார முதன்மைத் திட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்டுள்ளது. இறை ஊக்குவிப்புக்கள் பெறுமதிகூட்டலை அதிகரித்தல், தனியார் துறைப் பங்கேற்பு, சுற்றாடல் ரீதியாக தாக்குப்பிடிக்கக்கூடிய உற்பத்திகள் மற்றும் வெளியிலிருந்து வியாபாரப் பணிகளை பெற்றுக்கொள்ளுதல், தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்பம் போன்ற அறிவினை அடிப்படையாகக் கொண்ட துறைகளை ஊக்குவித்தல் அதேபோன்று நடுத்தர காலத்தில் நுண்பாக நிறுவனங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை ஊக்குவித்தல் என்பனவற்றை இலக்காகக் கொண்டிருந்தன.


**மொ.உ.உற்பத்தியில் 56.6 சதவீதத்திற்கு வகைகூறும் பணிகள் துறை பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் 2014இன் 5.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 5.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** நிதியியல் பணி நடவடிக்கைகளிலான 15.8 சதவீதம் கொண்ட உத்வேகம் மிக்க வளர்ச்சி தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையினால் நன்மையடைந்து பணிகள் துறையின் வளர்ச்சிக்கு பெருமளவிற்குப் பங்களித்தது. அதேவேளை, இரண்டு முக்கிய பணிகள் துறைகளான மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகள் முறையே 4.7 சதவீதத்தினாலும் 5.5 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன. மேலும், தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டப்படுத்தல், தொலைத்தொடர்பூட்டல் மற்றும் வாழிடங்களின் சொத்துடமையையும் காப்புறுதிப் பணிகளையும் உள்ளடக்கிய உண்மைச் சொத்து நடவடிக்கைகள் 2015இல் குறிப்பிடத்தக்களவிற்கு வளர்ச்சியடைந்தமைக்கு பணிகள் நடவடிக்கைகளில் காணப்பட்ட உத்வேகமே ஆதரவளித்தது. எனினும், கல்விப் பணிகள், தொழில்சார் நிபுணத்துவப் பணிகள், அஞ்சல் மற்றும் கூரியர் நடவடிக்கைகள் மற்றும் தங்குமிட வசதிகள், உணவு மற்றும் குடிபானப் பணிகள் என்பனவற்றில் பின்னடைவுகள் அவதானிக்கப்பட்டமையானது பணிகள் நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியைப் பாதித்தது.

**2015இல் தொழிலின்மை வீதம் 2014இல் பதிவுசெய்யப்பட்ட 4.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 4.6 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கிடையிலும் தொழிற்படையின் பங்கேற்பு குறிப்பாக பெண்களின் பங்கேற்பு சிறிதளவு அதிகரிப்பினைக் காட்டியது.** பெண்களின் தொழிலின்மை வீதம் 6.5 சதவீதத்திலிருந்து 7.6 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் ஆண்களின் தொழிலின்மை வீதம் 2014இன் 3.1 சதவீதத்திலிருந்து 2015இல் 3.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இளைஞர்களிடையேயான தொழிலின்மையின் அதிகரிப்பு முக்கியமாக க.பொ.த. உயர்தரம் மற்றும் அதற்கு மேல் தகைமையுடையோர்களிடையேயும் குறிப்பிடத்தக்களவில் காணப்பட்டது. 2015இல் தொழிற்படைப் பங்கேற்பு வீதம் 2014இன் 53.3 சதவீதத்திலிருந்து 53.8 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு தொழிற்படையிலுள்ள கிராமியத் துறைப் பெண்களின் அதிகரித்த பங்கேற்பே காரணமாகும். பொருளாதாரத்தின் அனைத்து மூன்று துறைகளிலுமிருந்து கிடைத்த சாதகமான பங்களிப்புக்களின் காரணமாக 2015 காலப்பகுதியில் தொழிற்படையின் உற்பத்தித்திறன் அதிகரித்தது. அதேவேளை வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காகச் சென்றவர்களின் மொத்த எண்ணிக்கையில் 12.4 சதவீதம் கொண்ட கடுமையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இதற்கு உக்கிரமடைந்த புவிசார் அரசியல் பதட்டங்களும் மத்திய கிழக்கின் பொருளாதார நடவடிக்கை மெதுவடைந்தமையும் பகுதியளவில் காரணமாக

வரைபடம் 1.3 ஆண்டுக்கான தொழிலின்மை வீதம்




வரைபடம் 1.4 ஆண்டுக்காண்டு முதன்மைப் பணவீக்கம்




பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள்

விளங்கியது. இது, தொழிலின்மை வீதம் அதேபோன்று தொழிற்படைப் பங்கேற்பு வீதம் என்பவற்றின் மீது தாக்கத்தைக் கொண்டிருந்தது.

**கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட பணவீக்கம் (2006/07=100) நடு ஒற்றை இலக்க மட்டத்திற்குக் கீழே விளங்கியமைக்கு பல முக்கிய நுகர்வுப் பண்டங்களின் விலைகள் கீழ் நோக்கிச் சீராக்கப்பட்டமையும் உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சந்தைகளில் காணப்பட்ட சாதகமான வழங்கல்பக்க அபிவிருத்திகளும் அதேபோன்று கட்டுப்படுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்களும் ஆதரவாக அமைந்தன.** கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம் 2015 சனவரியின் 3.2 சதவீதத்திலிருந்து 2015 பெப்புருவரியில் 0.6 சதவீதத்திற்கு கடுமையாக வீழ்ச்சியடைந்தமைக்கு 2015இற்கான இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட விலைத் திருத்தங்களே காரணமாகும். அதன் பின்னர் ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் 2015 செத்தெம்பர் வரை 1 சதவீதத்திற்கும் குறைவாகக் காணப்பட்ட வேளையில் 2015 யூலை - செத்தெம்பர் காலப்பகுதியில் எதிர்மறையான பணவீக்கத்தினைப் பதிவுசெய்தது. 2015இன் நான்காம் காலாண்டில் பணவீக்கம் உயர்வடையத் தொடங்கியதுடன் 2015இன் இறுதியளவில் 2.8 சதவீதத்தினைப் பதிவுசெய்தது. ஆண்டுச் சராசரி முதன்மைப் பணவீக்கம் 2014இன் 3.3 சதவீதத்திலிருந்து 2015இல் 0.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பொருளாதாரத்தில் கேள்வி அழுத்தங்கள் படிப்படியாக கட்டியெழுப்பப்படுவதைக் காட்டும் விதத்தில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு மையப் பணவீக்கம் 2014இன் இறுதியின் 3.2 சதவீதத்திலிருந்து 2015 இறுதியில் 4.5 சதவீதத்திற்கு அதிகரித்த போதும் ஆண்டுச் சராசரி நியதிகளில் மையப் பணவீக்கம் 2014இன் 3.5 சதவீதத்திலிருந்து 2015இல் 3.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, 2015இல் தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணொன்றினை (2013=100) அறிமுகப்படுத்தியதுடன் இது அனைத்து மாவட்டங்களினதும் விலை அசைவுகளையும் குடியிருப்பாளர் வருமானம் மற்றும் செலவின அளவீடு 2012/13இல் கண்டறியப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நுகர்வு மாதிரியில் ஏற்பட்ட மாற்றங்களையும் உள்ளடக்கியிருக்கிறது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட பணவீக்கம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 4.2 சதவீதத்திலும் 2015இன் இறுதியில் ஆண்டுச் சராசரி அடிப்படையில் 3.8 சதவீதத்திலும் காணப்பட்டது. 2015இல் கூலிப் பணவீக்கம் குறிப்பாக அரச துறையில் உயர்வாகக் காணப்பட்டதுடன் அரச துறையின் கூலி வீதச் சுட்டெண்ணின் மாற்றத்தினால் பிரதிபலிக்கப்பட்டவாறு பெயரளவு நியதிகளில் 31.7 சதவீதத்தினாலும் உண்மை நியதிகளில் 27.0 சதவீதத்தினையும் பதிவுசெய்தது.

## வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள்

**இலங்கையின் வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் மாற்றமடைந்துவரும் உலகளாவிய பொருளாதாரச் சூழலினதும் அதேபோன்று உள்நாட்டுப் பொருளாதாரத்தில் இடம்பெற்றுவரும் பல்வேறு நடவடிக்கைகளினதும் தாக்கத்தினைப் பிரதிபலித்தது.** எரிபொருள் இறக்குமதி மீதான குறைந்த செலவினத்தின் நன்மைக்கிடையிலும் வணிக வர்த்தகப் பற்றாக்குறை முன்னைய ஆண்டினைவிட 1.7 சதவீதத்தினால் சிறிதளவு விரிவடைந்தமைக்கு எண்ணெயல்லா இறக்குமதிகளிலான அதிகரிப்பும் ஏற்றுமதி வருவாய்களிலான மெதுவடைவுமே காரணமாகும். சுற்றுலாவருகைகளில் காணப்பட்ட தொடர்ச்சியான அதிகரிப்பு மற்றும் சுற்றுலாப் பயணிகளின் அதிகரித்த செலவிடல் என்பன சுற்றுலாவிலிருந்தான வருவாய்களில் அதிகரிப்பினைத் தோற்றுவித்து இவ்வாண்டுப் பகுதியில் பணிகள் கணக்கின் மேம்பட்ட செயலாற்றத்திற்கு கணிசமானளவிற்குப் பங்களித்தது. 2015இல் முதலாந்தர வருமானக் கணக்குகளின் பற்றாக்குறை தொடர்ந்தும் விரிவடைந்தது. எனினும், இரண்டாந்தர வருமான மற்றும் பணிகள் கணக்கிலுள்ள மிகைகள் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கிலுள்ள பாரிய பற்றாக்குறைகளைத் தணிப்பதற்கு உதவின. உண்மையான நியதிகளில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2015இல் சிறிதளவால் விரிவடைந்த போதும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2014இன் மொ.உ.உற்பத்தியின் 2.5 சதவீதத்திலிருந்து 2015இல் மொ.உ.உற்பத்தியின் 2.4 சதவீதத்திற்கு சிறிதளவில் குறைவடைந்தது. நடைமுறைக் கணக்கின் மிதமான செயலாற்றம் அரசாங்கம், வங்கித்தொழில் மற்றும் தனியார் துறைகள் என்பனவற்றிற்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் கடன்கள் வடிவிலமைந்த நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் அரச பிணையங்கள் சந்தையிலிருந்து வெளிநாட்டு முதலீடுகள் மீளப்பெறப்பட்டமை இணைந்து ஐ.அ.டொலர் 1,489 மில்லியன் கொண்ட சென்மதி நிலுவைப் பற்றாக்குறையொன்றினைப் பதிவுசெய்வதற்கு வழிவகுத்தது. சென்மதி நிலுவையின் தேய்வுடன் சேர்ந்து நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2014 இறுதியில் ஐ.அ.டொலர் 8.2 பில்லியனிலிருந்து 2015 இறுதியில் ஐ.அ.டொலர் 7.3 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்த அதேவேளை ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் பரந்தளவிற்கு உறுதியாகக் காணப்பட்ட ரூபா சந்தைச் சக்திகளின் அடிப்படையில் செலாவணி வீதத்தினை நிர்ணயிப்பதில் கூடியளவிற்கு நெகிழ்ச்சித்தன்மையை அனுமதிக்கும் மத்திய வங்கியின் தீர்மானத்தின் காரணமாக

செத்தெம்பர் தொடக்கத்திலிருந்து விரைவான வேகத்தில் தேய்வடைந்தது. இதன்படி, 2015 இறுதியில் ரூபாவானது ஐ.அ.டொலருக்கெதிராக 9.03 சதவீதத் தேய்வினைப் பதிவு செய்தது.

**2015இல் பெயரளவு நியதிகளில் வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 1.7 சதவீதத்தினால் விரிவடைந்து மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக இருந்த போதிலும் இது சிறிதளவு வீழ்ச்சியடைந்தது.** இறக்குமதிகள் மீதான செலவினம் மெதுவடைந்த போதும் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட பெருமளவு வீழ்ச்சி 2015இல் வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைவதற்குக் காரணமாகியது. இதன்படி, வர்த்தகப் பற்றாக்குறை 2014இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 8,287 மில்லியனிலிருந்து 2015இல் ஐ.அ.டொலர் 8,430 மில்லியனுக்கு விரிவடைந்தது. இருப்பினும், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வர்த்தக நிலுவைப் பற்றாக்குறை 2014இன் 10.4 சதவீதத்திலிருந்து 2015இல் 10.2 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

**2014இல் ஆரோக்கியமான வீதத்தில் வளர்ச்சியடைந்த ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2015இல் அனைத்து முக்கிய ஏற்றுமதி வகைகளிலும் ஏற்பட்ட வீழ்ச்சியைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 5.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது.** பன்னாட்டு பண்டங்களின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி, முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் மெதுவான வளர்ச்சி வேகம், இலங்கையின் முக்கிய ஏற்றுமதி நாடுகள் பலவற்றிலும் காணப்பட்ட புவிசார் அரசியலின் நிச்சயமற்றதன்மை மற்றும் இலங்கையிலிருந்தான மீன் இறக்குமதிகள் மீது ஐரோப்பிய ஒன்றியத்தினால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் என்பன ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட கணிசமான குறைப்பிற்குப் பங்களித்தன. வாசனைத்திரவியங்கள் (42.7 சதவீதம்) மற்றும் போக்குவரத்துக் கருவிகள் (60.5 சதவீதம்) என்பனவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைப் பதிவுசெய்த போதும் தேயிலை (17.7 சதவீதம்), இறப்பர் உற்பத்திகள் (14.5 சதவீதம்), புடவை மற்றும் ஆடைகள் (2.2 சதவீதம்) மற்றும் கடலுணவு (35.5 சதவீதம்) என்பனவற்றிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சி ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட ஒட்டுமொத்த வீழ்ச்சிக்குப் பங்களித்தன. உலகளாவிய அபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கான ஏற்றுமதிகள் முறையே 13.4 சதவீதத்தினாலும் 11.8 சதவீதத்தினாலும் சுருக்கமடைந்த வேளையில் ஐக்கிய அமெரிக்காவிற்கான ஏற்றுமதி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2.9 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், சராசரியாக ஏற்றுமதி அளவுகள் 2015இல் 4.6 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் ஏற்றுமதி விலைகள், ஐ.அ.டொலர் நியதிகளில் 9.8 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தன.

**2015ஆம் ஆண்டுப் பகுதியில் எண்ணெய் அல்லா இறக்குமதிகளின் மீதான செலவினம் 9.6 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்த போதும் இறக்குமதிகள் மீதான ஒட்டுமொத்தச் செலவினம் 2.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** இவ்வாண்டுப் பகுதியில் எரிபொருள் இறக்குமதி மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1.9 பில்லியனால் ஐ.அ.டொலர் 2.7 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு பன்னாட்டு எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியும் எண்ணெயை அடிப்படையாகக் கொண்ட வெப்ப வலு உருவாக்கத்தில் தங்கியிருந்தமை மற்றும் இறக்குமதிகளின் அளவுகள் என்பன குறைவடைந்தமையுமே காரணங்களாகும். எனினும், தனியாள் உந்து ஊர்திகள் மற்றும் ஏனைய நீண்ட கால நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி மீதான உயர்ந்த செலவினம், எண்ணெய் அல்லா இறக்குமதிகளின் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு பெருமளவிற்குப் பங்களித்தது. அரச ஊழியர்களுக்கான சலுகை ரீதியான உந்து ஊர்திகள் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டமை, 1000 சீசீ இற்குக் குறைவான இயந்திர இயலளவையுடைய உந்து ஊர்திகள் மீதான வரிகள் குறைக்கப்பட்டமை, யப்பானிய யென் தேய்வடைந்தமை, குறைந்த வட்டி வீதங்களில் இறக்குமதி கொடுகடன் வசதி கிடைக்கத்தக்கதாக இருந்தமை மற்றும் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரித்தமை என்பன உந்து ஊர்திகளின் மீதான உயர்ந்த செலவினத்திற்கு காரணங்களாக எடுத்துக்காட்டப்படலாம். எனினும், ஆண்டின் இறுதியில் மத்திய வங்கியினாலும் அரசாங்கத்தினாலும் எடுக்கப்பட்ட கொள்கை வழிமுறைகள் நுகர்வுப் பொருட்களின் மீதான குறிப்பாக உந்து ஊர்திகள் மீதான இறக்குமதிச் செலவினம் மெதுவடைய வழிவகுத்தது. சராசரியாக இறக்குமதி அளவுகள் 2015இல் 10.6 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் ஐ.அ.டொலர் நியதிகளில் இறக்குமதி விலைகள் 11.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.


**வணிக வர்த்தக நிலுவையிலும் முதலாந்தர வருமானக் கணக்கிலுமுள்ள பற்றாக்குறை விரிவடைந்த போதும் பணிகள் மற்றும் இரண்டாந்தர வருமானக் கணக்குகளில் காணப்பட்ட மிகைகளின் விளைவாக 2015இல் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2014இலிருந்தும் பெருமளவிற்கு மாற்றமடையவில்லை.** பயணம் மற்றும் சுற்றுலா துணைத் துறைகளின் செழிப்பு மற்றும் போக்குவரத்து, தொலைத் தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகள் துணைத் துறைகளின் திருப்திகரமான செயலாற்றம் என்பன இவ்வாண்டுப் பகுதியில் பணிகள் கணக்கின் முன்னேற்றத்திற்குப் பங்களித்தது. சுற்றுலாவருகைகளினதும் தங்கியிருக்கும் சராசரிக் காலம் மற்றும் செலவிடல் என்பனவற்றிலும் ஏற்பட்ட அதிகரிப்பு இவ்வாண்டுப் பகுதியில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்

22.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைய காரணமாகின. வெளியிலிருந்து வியாபாரப் பணிகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் வெளியிலிருந்து அறிவுப் பணிகளைப் பெற்றுக்கொள்ளல் ஆகிய தொழில்துறைகளில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட விரிவாக்கம் தொலைத்தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகளின் துணைத் துறையின் மேம்பட்ட செயலாற்றத்திற்குப் பங்களித்தன. அதேவேளை, இவ்வாண்டுப் பகுதியில் ஒதுக்குச் சொத்துக்களின் முதலீடுகளிலிருந்தான வருவாய்கள் குறைவடைந்தமை, அதிகரித்த வட்டிக் கொடுப்பனவுகள், பங்கிலாபங்கள் மற்றும் வேறு முதலீடுகளின் வருவாய்களின் வெளிப்பாய்ச்சல் என்பனவற்றின் விளைவாக முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை மேலும் விரிவடைந்தது. தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் அரசாங்க மாற்றல்களில் ஏற்பட்ட மெதுவான தன்மை, இரண்டாந்தர வருமானக் கணக்கின் குறைந்த மிகைக்கு வழிவகுத்தது. வெளிநாட்டுச் செலாவணியின் பாரம்பரிய மூலமாக விளங்கும் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2014இல் அவதானிக்கப்பட்ட 9.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் 0.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சிக்கு பன்னாட்டு எண்ணெய் விலைகளின் தாழ்ந்த மட்டம் மற்றும் வீட்டுப் பணிப்பெண்கள் உட்பட ஓரளவு தேர்ச்சிபெற்ற மற்றும் தேர்ச்சியற்ற வகைகளின் கீழ் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவற்றின் காரணமாக மத்திய கிழக்கிலுள்ள எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் வருமானம் வீழ்ச்சியடைந்தமை பெருமளவிற்குப் பங்களித்தது. வர்த்தகம், பணிகள், முதலாந்தர மற்றும் இரண்டாந்தர வருமானக் கணக்குகளில் ஏற்பட்ட இவ்வபிவிருத்திகளின் காரணமாக நடைமுறைக் கணக்கு 2014இன் ஐ.அ.டொலர் 1,988 மில்லியன் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2015இல் ஐ.அ.டொலர் 2,009 மில்லியன் பற்றாக்குறையைப் பதிவுசெய்தது. எனினும், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை முன்னைய ஆண்டின் 2.5 சதவீதத்திலிருந்து 2015இல் 2.4 சதவீதத்திற்கு சிறிதளவால் குறுக்கமடைந்தது.

**சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கிலுள்ள தேறிய நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் சொத்துக்களின் தேறிய கையேற்பு ஆகிய இரண்டும் 2015இல் ஒப்பீட்டு ரீதியில் குறைவாகக் காணப்பட்டன.** இவ்வாண்டுப் பகுதியில் நிதியியல் கணக்கிற்கான முக்கிய உட்பாய்ச்சல்கள் மொத்தமாக ஐ.அ.டொலர் 2,150 மில்லியன் கொண்ட இரண்டு நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கல்களிலிருந்தான பெறுகைகளையும் இந்திய ஒதுக்கு வங்கியுடன் செய்துகொள்ளப்பட்ட பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் ஒழுங்குகளின் கீழான ஐ.அ.டொலர் 1,500 மில்லியன் கொண்ட பெறுகைகளையும் உள்ளடக்கியிருந்தன. அரசாங்கம், வங்கித்தொழில் மற்றும் தனியார் துறைகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகள், சொத்துப்பட்டியல் முதலீடுகள் மற்றும் கடன் உட்பாய்ச்சல்கள் என்பன நிதியியல் கணக்கிற்கு சிறிதளவு ஆதரவினை வழங்கியுள்ளன. இதற்கு உலகளாவிய பொருளாதாரச் சூழ்நிலையில் காணப்பட்ட சாதகமற்ற அபிவிருத்திகள் மற்றும் இரண்டு முக்கிய தேசிய தேர்தல்களின் பின்னணியில் உள்நாட்டுத் துறையின் மீது எச்சரிக்கையுடன் கூடிய முதலீட்டாளர் மனோபாவம் என்பன பகுதியளவிற்குக் காரணமாக அமைந்தன. அதேவேளை, ஐக்கிய அமெரிக்க பெடரல் ஒதுக்கின் வட்டி வீதங்கள் உயருமென்ற எதிர்பார்ப்பும் அதனைத் தொடர்ந்த அதிகரிப்பும் தோற்றம்பெற்றுவரும் சந்தைகளிலிருந்து வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தமது முதலீடுகளை மீளப்பெறத் தூண்டின. இதன்படி, இவ்வாண்டுப் பகுதியில் அரச பிணையங்கள் சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 1,093 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சல் காணப்பட்டது. மேலும், அட்டவணையிடப்பட்ட படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் மற்றும் முதிர்ச்சியடைந்த நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் தீர்ப்பனவுகள் என்பன நிதியியல் கணக்கின் மீது எதிர்மறையான தாக்கத்தைக் கொண்டிருந்தன.

**2014இல் ஒட்டுமொத்த மிகையைப் பதிவுசெய்த சென்மதி நிலுவை 2015இல் பற்றாக்குறையைப் பதிவுசெய்தமைக்கு நிதியியல் கணக்கிற்கு எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க குறைந்த உட்பாய்ச்சல்கள் ஏற்பட்டமையே முக்கிய காரணமாகும்.** 2015இல் சென்மதி நிலுவை 2014இன் ஐ.அ.டொலர் 1,369 மில்லியன் கொண்ட மிகையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,489 மில்லியன் கொண்ட திரண்ட பற்றாக்குறையைப் பதிவுசெய்தது. இதன் விளைவாக, இலங்கையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2014 இறுதியின் ஐ.அ.டொலர் 8.2 பில்லியனிலிருந்து 2015 இறுதியில் ஐ.அ.டொலர் 7.3 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. மொத்த அலுவல்சார்

வரைபடம் 1.5
சென்மதி நிலுவை



ஒதுக்குகள் குறைவடைந்தமைக்கு அட்டவணையிடப்பட்ட வெளிநாட்டு நாணய படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள், முதிர்ச்சியடைந்த நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் தீர்ப்பனவுகள், துணைநில் ஒழுங்குகளின் பேரிலான பன்னாட்டு நாணய நிதியத்திற்கான கொடுப்பனவுகள், மற்றும் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கு திரவத்தன்மை நிரம்பல் செய்யப்பட்டமை என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன. 2015 இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் மட்டம், பொருட்களின் 4.6 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகவும் பொருட்கள் மற்றும் பணிகளின் 3.8 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகவும் காணப்பட்டது. அதேவேளை, மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2014 இறுதியின் ஐ.அ.டொலர் 9.9 பில்லியனிலிருந்து 2015 இறுதியில் ஐ.அ.டொலர் 9.3 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்து பொருட்களின் 5.9 மாத இறக்குமதிகளுக்கும் பொருட்கள் மற்றும் பணிகளின் 4.9 மாத இறக்குமதிகளுக்கும் சமமானதாகக் காணப்பட்டது. மொத்த அலுவல்சார் ஒதுக்குச் சொத்துக்களின் நிலைமை 2015 இறுதியில் நாட்டின் குறுங்கால படுகடன் மற்றும் பொறுப்புக்களில் 60 சதவீதத்தினை உள்ளடக்கியிருந்தன.

**அரச மற்றும் தனியார் துறைகளின் வெளிநாட்டுப் படுகடனை உள்ளடக்கிய நாட்டின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் 2015இல் அதிகரித்தது.** பெயரளவு நியதிகளில் நாட்டின் மொத்த வெளிநாட்டு படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பானது வெளிநாட்டுக் கடன்களின் பேரிலான உட்பாய்ச்சல்களின் மிதமான மட்டம் மற்றும் ஆண்டு முழுவதுமான படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளின் பேரிலான குறிப்பிடத்தக்க வெளிப்பாய்ச்சல் என்பனவற்றின் இணைந்த விளைவாகும். நாட்டின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் இருப்பு 2014 இறுதியின் ஐ.அ.டொலர் 42.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015 இறுதியில் ஐ.அ.டொலர் 44.8 பில்லியனாகக் காணப்பட்டது. மேலும், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்த வெளிநாட்டுப் படுகடன் 2014 இறுதியின் 53.6 சதவீதத்திலிருந்து 2015 இறுதியில் 54.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. அதேவேளை, இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் கடப்பாடுகளின் மீதான படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் மூலதனம் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் விளைவாக 2014இன் ஐ.அ.டொலர் 3,479 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 4,683 மில்லியனுக்கு கணிசமாக அதிகரித்தது. படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளின் அதிகரித்த மட்டம் மற்றும் பொருட்களின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பன பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளின் சதவீதமாக படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2014இன் 20.8 சதவீதத்திலிருந்து 2015இல் 27.7 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரிப்பதற்கு வழிவகுத்தது.

**2015 செத்தெம்பர் தொடக்கத்தில் செலாவணி வீதத்தை நிர்ணயிப்பதில் பெருமளவு நெகிழ்ச்சித்தன்மையை அனுமதிப்பதற்கு மத்திய வங்கி தீர்மானித்தது.** நடைமுறை மற்றும் நிதியியல் கணக்குகளுக்கான உட்பாய்ச்சல்கள் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க குறைவாக இருந்தமை, அதிகரித்த இறக்குமதிகள், படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் மற்றும் அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான வெளிநாட்டு முதலீடுகள் மாற்றமடைந்தமை என்பனவற்றின் பேரிலான வெளிநாட்டுச் செலாவணியின் உயர்ந்தளவு வெளிப்பாய்ச்சல் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் கணிசமானளவு அழுத்தத்தினைத் தோற்றுவித்தன. இப்பின்னணியில், மத்திய வங்கி ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் செலாவணி வீதத்தின் மிகையான தளம்பல்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கு தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 1.9 பில்லியனை நிரம்பல் செய்தது. இதன் விளைவாக செலாவணி வீதத்தினை நிர்ணயிப்பதில் பெருமளவு நெகிழ்ச்சித்தன்மையை அனுமதிப்பதற்கு 2015 செத்தெம்பர் 03ஆம் நாளன்று மத்திய வங்கி கொள்கை தீர்மானமெடுக்கும் வரை ரூ.2.57 சதவீதத்தினால் சிறிதளவில் தேய்வடைந்தது. இத்தீர்மானத்தினைத் தொடர்ந்து ஆண்டின் இறுதிவரை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 6.64 சதவீதம் கொண்ட தேய்வினைப் பதிவுசெய்து இவ்வாண்டுப் பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக 9.03 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த தேய்வொன்றினைத் தோற்றுவித்தது. ஐ.அ. டொலருக்கெிராக இலங்கை ரூபாவின் பெயரளவுத் தேய்வுடனும் பெரும்பாலான வர்த்தகப் பங்காளர்களுடன் ஒப்பிடுகையில் உள்நாட்டுப் பணவீக்கத்தின் ஒப்பீட்டு ரீதியான குறைந்த மட்டங்களுடனும் இசைந்துசெல்லும் விதத்தில் 2015 இறுதியளவில் 5 நாணய மற்றும் 24 நாணய உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டிகள் முறையே 3.07 சதவீதத்தினாலும் 2.26 சதவீதத்தினாலும் தேய்வடைந்தன.

## இறைத் துறை அபிவிருத்திகள்

**2015ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு செலவுத்திட்டம் இவ்வாண்டுப் பகுதியில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை பெருமளவிற்கு குறைக்குமென எதிர்பார்க்கப்பட்ட போதும் பெரும் எண்ணிக்கையான நிகழ்வுகள் இறை முகாமைத்துவத்திற்கு சவால் விடுத்து இறைத் திரட்சிப் பாதையின் எதிர்பார்ப்புக்களைத் தடைசெய்தது.** 2015 சனவரியில் இடம்பெற்ற சனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு செலவுத்திட்டம் இறைத் திரட்சிச் செயற்பாட்டில் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை நனவாக்கிக் கொள்ளும் நோக்குடன் பல இறைச் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியது. அரசாங்கம் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை 2014இல் பதிவுசெய்யப்பட்ட

5.7 சதவீதத்திலிருந்து 2015இல் மொ.உ.உற்பத்தியின் 4.4 சதவீதத்திற்கு குறைப்பதற்கு எதிர்பார்த்த வேளையில் 2015ஆம் ஆண்டிற்கான இறை முகாமைத்துவ அறிக்கையின் நடுத்தர கால பேரண்ட இறைக் கட்டமைப்பு 2014 - 2017 இல் எடுத்துக்காட்டப்பட்ட இலக்குகளின்படி மத்திய அரசாங்கத்தின் மொ.உ.உற்பத்தி வீதத்திற்கான படுகடன் 2015இல் 72.0 சதவீதத்தில் பேணப்பட்டது. இருப்பினும்கூட 2015இல் இறைத் துறைச் செயலாற்றம் மோசமடைந்து 2015ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட இலக்குகளிலிருந்தும் பிறழ்வுகளைத் தோற்றுவித்தது. அரச அரசிறையின் சேகரிப்பு எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்கக் குறைவாக இருந்தமை, குறிப்பாக, சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான உயர்ந்தமட்ட மீண்டெழும் செலவினம், நலன்புரிச் செலவினம் மற்றும் மதிப்பீடுகளிலும் பார்க்க உயர்வான வட்டிக் கொடுப்பனவுகள் மீதான செலவு என்பன 2015இல் ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையின் மீது குறிப்பிடத்தக்களவு அழுத்தத்தினைத் தோற்றுவித்தன. மேலும், தவணை கடந்த செலவினங்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டமை மற்றும் வரவு செலவுத்திட்டத்தின் செலவின மற்றும் நிதியிடல் பக்கங்களில் பதிவுசெய்யப்படாத பகிர்ந்தளிப்புக்கள் உள்ளடக்கப்பட்டமை என்பன ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை விரிவடைவதற்குக் காரணமாகின. இதன்படி, வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 2014இன் மொ.உ.உற்பத்தியின் 5.7 சதவீதத்திலிருந்து 2015இல் மொ.உ.உற்பத்தியின் 7.4 சதவீதத்திற்கு அதிகரித்து மொ.உ.உற்பத்தியின் 4.4 சதவீதமென்ற அரசின் ஆரம்ப இலக்கினை குறிப்பிடத்தக்களவிற்கு விஞ்சியது. மேலும், அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து வரவேண்டிய கொடுப்பனவுகள் தீர்ப்பனவு செய்யப்பட்டமையின் விளைவாக அதிகரித்த மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையின் விரிவாக்கத்திற்குப் பங்களித்தன. அரச குறைச் சேமிப்புக்களைப் பிரதிபலிக்கின்ற நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை முன்னைய ஆண்டின் 1.2 சதவீதத்திலிருந்து 2015இல் மொ.உ.உற்பத்தியின் 2.2 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் திரண்ட பற்றாக்குறையிலிருந்து வட்டிக் கொடுப்பனவுகளைக் கழித்த ஆரம்பப் பற்றாக்குறை 2014இன் 1.5 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியின் 2.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையானது, இவ்வாண்டுப் பகுதியில் வெளிநாட்டு நிதியிடலில் காணப்பட்ட மெதுவான தன்மையினைக் கவனத்தில் கொண்டு உள்நாட்டு மூலங்களின் மூலம் பெருமளவிற்கு நிதியிடப்பட்டது. மொ.உ.உற்பத்திக்கான மத்திய அரச படுகடன் விகிதம் 2014இன் 70.7 சதவீதத்திலிருந்து 2015இல் 76.0 சதவீதத்திற்கு அதிகரித்து வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினையும் ஒன்றுசேர்ந்த படுகடனையும் குறைப்பதற்கு வலுவான இறைச் சீர்திருத்தங்களிற்கான அவசியத்தினை தெளிவாக எடுத்துக்காட்டியது.

**மொ.உ.உற்பத்திக்கான அரச அரசிறை விகிதம் 2015இல் முன்னேற்றமொன்றினைக் காட்டியமைக்கு முக்கியமாக பல ஒரே தடவையிலான வரிகள் மற்றும் அதிகரித்த உந்து ஊர்திகள் மீதான அதிகரித்த உற்பத்தித் தீர்வைகள் என்பனவற்றிலிருந்தான அரசிறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தினால் கிடைத்த நன்மைகளே முக்கிய காரணமாகும்.** மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்த அரச அரசிறை 2014இன் 11.4 சதவீதத்திலிருந்து 2015இல் 13.0 சதவீதத்திற்கு அதிகரித்த போதும் இது 2015இற்கான இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 13.3 சதவீதம் கொண்ட ஆண்டு இலக்கிலும் பார்க்க குறைவாகவே காணப்பட்டது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வரியல்லா அரசிறை 2014இன் 1.4 சதவீதத்திலிருந்து 2015இல் 0.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வரி அரசிறை 2014இன் 10.1 சதவீதத்திலிருந்து 2015இல் 12.1 சதவீதத்திற்கு அதிகரித்தது. கலால் தீர்வை, கம்பனி மற்றும் கம்பனியல்லா வருமான வரிகள், இறக்குமதித் தீர்வைகள், செஸ் தீர்வை, சிறப்புப் பண்டத் தீர்வை மற்றும் தொலைத் தொடர்பூட்டல் தீர்வை என்பனவற்றிலிருந்தான அரசிறையில் அதிகரிப்புக் காணப்பட்ட போதும், உள்நாட்டு நடவடிக்கைகள் மற்றும் இறக்குமதிகள், துறைமுகங்கள் மற்றும் வானூர்திநிலைய அபிவிருத்தித் தீர்வை மற்றும் பிடித்துவைத்தல் வரி என்பனவற்றிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்கள் வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தன. வரி அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு வரி முறைமைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காகவும் வரித் தளத்தினை விரிவாக்குவதற்காகவும் இவ்வாண்டுப் பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட பல கொள்கை வழிமுறைகளும் காரணமாகும். இவ்வாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய வழிமுறைகள் அனைத்து வகை ஊழியர்களுக்கும் தாழ்ந்த வரி வீதமொன்றினைப் பிரயோகிப்பதன் மூலம் தனியாள் வருமான வரியினை ஒழுங்குமுறைப்படுத்தியமை, ஒரு சில ஒரே தடவையிலான வரிகள் உட்பட பல புதிய வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டமை, அரசிறை முகவராண்மைகளில் வரி நிருவாகத்தினை வலுப்படுத்திய அதேவேளையில் வரி இணங்குவிப்புக்களை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.


**பெயரளவு நியதிகளில் மொத்த அரசிறை 2014இன் ரூ.1,195.2 பில்லியனிலிருந்து 2015இல் ரூ.1,454.9 பில்லியனுக்கு 21.7 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு கலால் தீர்வைகள், வருமான வரிகள் மற்றும் இறக்குமதித் தீர்வைகளிலிருந்தான**

**அரசிறைச் சேகரிப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.** கலால் தீர்வைகளிலிருந்தான அரசிறை 2015இல் மொத்த வரி அரசிறையில் தனிப்பெரும் பங்களிப்பாளராக விளங்கி உந்து ஊர்திகள், குடிவகை மற்றும் சிகரெட்டுக்கள் மீதான கலப்பான உயர்ந்த கலால் வரி வீதங்கள் விதிக்கப்பட்டதன் தாக்கத்தினைப் பிரதிபலித்தது. இதன்படி, கலால் தீர்வைகள் மொத்த வரி அரசிறையில் 36.7 சதவீதத்திற்குப் பங்களித்து இவ்வாண்டில் மொத்த அரசிறையில் 34.2 சதவீதத்திற்கு வகைகூறியது. அதேவேளையில், ரூ.50.0 பில்லியனை உருவாக்கிய மிகை இலாப வரி போன்ற இவ்வாண்டுப் பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரே தடவையிலான வரியிலிருந்து சேகரிக்கப்பட்ட அரசிறையும் வரி அரசிறையின் அதிகரிப்பிற்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்பினை வழங்கியது. இவ்வாண்டுப் பகுதியில் கட்டணம் மற்றும் விதிப்புக்களிலிருந்தான அரசிறை அதிகரித்த போதும் வரியல்லா அரசிறை ரூ.99.1 பில்லியனாக அமைந்து 31.6 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளிலிருந்தான குறைந்த இலாபம் மற்றும் பங்கிலாப மாற்றல்களும் வட்டி மற்றும் வாடகையிலிருந்தான அரசிறையில் ஏற்பட்ட வீழ்ச்சியும் பெருமளவிற்குக் காரணங்களாகும்.

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்தச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2014இல் 17.2 சதவீதத்திலிருந்து 2015இல் 20.5 சதவீதத்திற்கு அதிகரித்து மீண்டெழும் செலவினம் மற்றும் அரச முதலீடுகள் ஆகிய இரண்டிலும் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு ஏற்பட்டமையைப் பிரதிபலித்தது.** இவ்வாண்டுப் பகுதியில் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மீண்டெழும் செலவினம் 2014இன் 12.7 சதவீதத்திலிருந்து 15.2 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு சம்பளங்கள் மற்றும் கூலிகள், வட்டிக் கொடுப்பனவுகள், நடைமுறை மாற்றல்கள் மற்றும் உதவுதொகைகள் என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்புக்களே காரணமாகும். பெயரளவு நியதிகளில் மீண்டெழும் செலவினம் 2014இன் ரூ.1,322.9 பில்லியனிலிருந்து 2015இல் ரூ.1,701.7 பில்லியனுக்கு 28.6 சதவீதத்தினால் அதிகரித்து வரவு செலவுத்திட்ட இலக்கான ரூ.1,552.0 பில்லியனை விஞ்சியது. 2015இல் பெயரளவு நியதிகளில் மத்திய அரசாங்க ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் கூலிகள் 27.4 சதவீதத்தினால் ரூ.561.7 பில்லியனுக்கு அதிகரித்து அரச செலவினத்தின் மீது குறிப்பிடத்தக்க மேல் நோக்கிய அழுத்தத்தினை தோற்றுவித்தது. 2015இல் உயர்ந்த கடன்பாடுகள் மற்றும் மற்றைய வெளிநாட்டு நாணயங்களுக்கெதிராக ரூபா தேய்வடைந்தமை என்பனவற்றின் காரணமாக வட்டிச் செலவினமும் பெயரளவு நியதிகளில் 16.8 சதவீதத்தினால் ரூ.509.7 பில்லியனுக்கு அதிகரித்தது. அதேவேளை, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2014இன் 4.5 சதவீதத்திலிருந்து 2015இல் 5.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. இதன்படி, பெயரளவு நியதிகளில் இது முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.473.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப் பகுதியில் ரூ.588.7 பில்லியனுக்கு 24.5 சதவீதத்தினால் அதிகரித்தது. இப்போக்கினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் அரச முதலீடுகளும் 2014இன் மொ.உ.உற்பத்தியின் 4.7 சதவீதத்திலிருந்து 2015இல் மொ.உ.உற்பத்தியில் 5.4 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் பெயரளவு நியதிகளில் அரச முதலீடுகள் 2014இன் ரூ.486.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015இல் ரூ.602.8 பில்லியனுக்கு 23.9 சதவீதத்தினால் அதிகரித்தது.

**2015இல் மொ.உ.உற்பத்தியில் 7.4 சதவீதம் கொண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதியிடுவதற்கு அரசாங்கம் முக்கியமாக உள்நாட்டு மூலங்களில் குறிப்பாக வங்கியல்லாத் துறையின் நிதியிடலில் தங்கியிருந்தது.** தேறிய உள்நாட்டு நிதியிடல் 2014இன் ரூ.378.7 பில்லியனிலிருந்து 2015இல் ரூ.592.7 பில்லியனுக்கு அதிகரித்து ஆண்டு மதிப்பீடான ரூ.208.0 பில்லியனிலிருந்து குறிப்பிடத்தக்க பிறழ்வுகளைப் பதிவுசெய்தது. மொத்த தேறிய உள்நாட்டு நிதியிடலில் ரூ.300.9 பில்லியன் கொண்ட 50.8 சதவீதம் வங்கியல்லாத் துறையிலிருந்து திரட்டப்பட்டது. அதேவேளை வங்கித்தொழில் துறையிலிருந்தான அரசின் கடன்பாடுகளும் 2014இன் ரூ.126.9 பில்லியனிலிருந்து இவ்வாண்டுப் பகுதியில் ரூ.291.8 பில்லியனுக்கு அதிகரித்தது. இதுவும் 2015ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட ரூ.70.0 பில்லியன் கொண்ட ஆண்டு மதிப்பீடுகளிலும் பார்க்க குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வானதாக இருந்தது. திறைசேரி முறிகளின் மூலமான வர்த்தக வங்கிகளிலிருந்தான கடன்பாடுகள் இவ்வாண்டுப் பகுதியில் தேறிய மீள்கொடுப்பனவுகளைப் பதிவுசெய்த போதும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் என்பனவற்றின் வடிவிலான

வரைபடம் 1.6 அரசிறை, செலவினம் மற்றும் திரண்ட இறைப் பற்றாக்குறை (மொ.உ.உ. இன் சதவீதமாக)



சிறப்புக்குறிப்பு 01

## உறுதிப்பாடு மற்றும் மீளெழுச்சிக்கான இறை இடைவெளி

### அறிமுகம்

பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டுக்கு உதவுதல் மற்றும் அதிர்வுகளை எதிர்கொள்வதற்கும் பொருளாதாரத்தின் மீளெழுச்சியை மேம்படுத்துவதற்கும் இறை இடைவெளியை உருவாக்கல் குறிப்பாக நிதியியல் நெருக்கடிக்குப் பின்பு பல இறை அதிகாரசபைகளின் கவனத்தைச் சம்பாதித்தது. முன்னேற்றமடைந்த மற்றும் தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்கள் இரண்டிலும் தடையுடனான இறைச் சூழல்கள் நிச்சயமற்ற உலக அபிவிருத்திகளிலிருந்து தோற்றம் பெற்றுவரும் அழுத்தங்கள், அதிகரித்துச் செல்லும் படுகடன் பணி கடப்பாடுகள் மற்றும் குடியியல் மாற்றல்கள் இறைத் தொழிற்பாடுகளின் நீடித்து நிலைத்திருக்கும் தன்மைக்கு தொடர்ந்து சவால் விடுவதால் அரச வரவுசெலவுத் திட்டத்தின் இடைவெளியை உருவாக்குவதில் தூண்டப்பட்ட ஆவலைக் கொண்டிருந்தன. இலங்கை போன்ற தோற்றம் பெற்றுவரும் மத்திய வருமானத்தைக் கொண்ட நாடுகளிலான வரவுசெலவுத் திட்ட செயல்முறைகள் அரசின் எதிர்கால இறைநிலைமைக்கு தேவையற்ற இடர்நேர்வின்றி விரைந்த அபிவிருத்திக்கான தேவையைப் பொறுத்தமட்டில் அழுத்தத்தின் கீழ் வந்துள்ளன. இது இலங்கையில் போதுமான இறை இடைவெளியைப் பேணுவது தொடர்பான கேள்வியை எழுப்புகிறது.

ஹெலர் (2005) இறை இடைவெளியை அதன் "நிதியியல் நிலைமையை அல்லது பொருளாதாரத்தின் உறுதிப்பாட்டிற்கு நீடித்து நிலைத்திருக்கும் தன்மையை கஷ்டத்துக்குள்ளாகாதவாறு விருப்பமான நோக்கத்துக்காக மூலவளங்களை வழங்குவதற்கு அரசை அனுமதிக்கும் வரவுசெலவுத் திட்ட வாய்ப்பு"[1] என வரைவிலக்கணம் செய்கிறார். வேறு கருத்தில் கூறுவதாயின், இறை இடைவெளி என்பது, பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டை மோசமாகப் பாதிக்காத விதத்தில், அரசின் செலவிடல், அரசிறை மற்றும் கடன்பாட்டுத் தேர்வுகள் தொடர்பாகத் தீர்மானிப்பதற்கு அரசுக்கு நெகிழ்ச்சித்தன்மையை வழங்குவதற்கு மேலதிக மூலவளங்களின் கிடைப்பனவைக் குறிக்கிறது. இறை இடைவெளியின் முக்கிய தீர்மானக் காரணிகள் அரச செலவினத்தின் உள்ளடக்கம் மற்றும் போக்கு, வரிவிதிப்பதற்கான மனோபாவம், கடன்படுவதற்கான மனோபாவம் மற்றும் பொருளாதார வளர்ச்சியை உள்ளடக்குகிறது. எனவே, இறை இடைவெளி அரசிறையை அதிகரிப்பதன் மூலம், செலவினத்தை அல்லது உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்தான கடன்பெறும் மூலவளங்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் உருவாக்கப்பட்டு வளர்ச்சியை விரைவுபடுத்துகிறது. இறை இடைவெளியை உருவாக்கல் இறையின் நீடித்து நிலைத்திருக்கும் தன்மையுடன் எந்தவிதத்திலும் விட்டுக்கொடுக்க முடியாது. அரசு அதன் செலவின நிகழ்ச்சித்திட்டம் மற்றும் அதன் படுகடனின் வட்டியைச் செலுத்துவதை நிதியிடுவதற்கு குறுகிய கால மற்றும் நீண்ட காலத்தில் அதன் இயலளவைக் கட்டாயம் உறுதிப்படுத்த வேண்டும்.

### இலங்கையின் அரச வரவுசெலவுத் திட்டத்தின் அமைப்பு


இறுக்கமான மூலவளத் தடைகளின் சூழலில் செலவினக் கோரல்களுக்குப் பேட்டியிடுதல் அண்மைக் காலத்தில் இலங்கையின் வரவுசெலவுத் திட்டத் தொழிற்பாடுகளை விவரித்தது. குறைந்த அரசிறைத் திரட்டல் மற்றும் நிதியியல் நிலைமைகளை இறுக்கல் என்பனவற்றைக் கவனத்திற்கொண்டு செலவினத்துக்கான தேவையின் அழுத்தம் அடுத்தடுத்து வந்த அரசுகள் உயர் வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறைகளை அறிவித்தன. 2010 - 2015 காலப்பகுதிக்கான இலங்கையின் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை சராசரியாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 6 சதவீதத்தில் காணப்பட்டது. அரசின் அரசிறை மற்றும் செலவினத்தின் அமைப்பின் மீதான பரீட்சிப்பு, இறை அதிகார சபைகளுக்கு சவாலாக அமைகின்ற சில கரிசனைகளை முன்வைக்கிறது. 2010 - 2015 காலப்பகுதியில் அரச செலவினம் சராசரியாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 18.8 சதவீதத்தில் பேணப்பட்டது. அரசின் தற்போதைய செலவினங்கள் இக்காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 13.7 சதவீதமான அளவில் தயக்கமான நிலையில் காணப்பட்டபோதும் வட்டிக் கொடுப்பனவுகள், வரவுசெலவுத் திட்டத்தின் நிர்ணயிக்கப்படாத செலவிடும் கூறு மற்றும் சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான செலவினம், நடைமுறைச் செலவினத்தின் பங்குகள் நியதிகளில் நிலையாக தொடர்ந்து விளங்கி மீண்டெழும் செலவினத்தின் மூன்றில் இரண்டு பங்குக்கும் கூடுதலான அளவுக்கு வகை கூறியது. சம்பளங்கள் மற்றும் கூலிகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் 2010 - 2015 காலப்பகுதியில் சராசரியாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் முறையே 4.7 சதவீதத்துக்கும் 4.4 சதவீதத்துக்கும் வகைகூறின. குடும்ப அலகுகளுக்கான மாற்றல்கள் மற்றும் முக்கிய கூறான வறுமை ஒழிப்பை உள்ளடக்கும் வரவுசெலவுத் திட்டத்தின் மாற்றல் கொடுப்பனவுகள் மற்றும் நலன்புரிச் செலவினமும் இக்காலப் பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3.0 சதவீதத்திற்கு வகைகூறியது.

மேற்கூறிய பின்னணியில், ஏனைய அழுத்தமான தேவைகளை உள்ளடக்குவதற்கு வரவுசெலவுத் திட்டத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள தாமதம் தொடர்ந்தும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகிறது. இப்பின்னணியில் இறை அதிகாரசபைகள் முகம் கொடுக்கும் சிக்கலான நிலைமை கல்வி மற்றும் நலம் போன்ற முன்னுரிமை வாய்ந்த துறைகளில் அரசால் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தை அவதானிக்கும் போது தெளிவாகத் தெரிகிறது. தொழிற்பாட்டு அடிப்படையில் செலவினத்தின் பரீட்சிப்பு வரவுசெலவுத் திட்டத்தினூடாக அளிக்கப்பட்ட மொத்த நிதியங்களில் சராசரியாக 16 சதவீதத்தை மட்டுமே கல்வி மற்றும் நலத் துறைகள் பெற்றதைக் காட்டுகின்றது. 2015இல் முன்னேற்றம் காணப்பட்ட போதிலும் 2010 இலிருந்து 2015 வரையான காலப்பகுதியில் இவை முறையே மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.7 சதவீதத்துக்கும் 1.3 சதவீதத்துக்கும் வகைகூறின. கல்வி மற்றும் நலத்திலான செலவினம் மனித மூலதனத்துக்கான உயர் இலாபங்கள் வழியில் நீண்ட காலத்தில் நன்மைகளை உருவாக்குவதால் நலம் மற்றும் கல்விச் செலவினத்தை அதிகரிப்பதற்கு வாதம் முன்வைக்கப்படலாம். எனினும், தேர்ச்சி ஆற்றலை மட்டுப்படுத்திய வரவுசெலவுத் திட்டத்தின் தற்போதைய செலவின அமைப்பைக் கருத்திற் கொள்கையில் இந்நோக்கத்துக்காக இறை இடைவெளி இயலச்செய்வதை உருவாக்குவதற்கு இது அரசுக்குத் தேவையானதாகும்.

அரசிறையைப் பொறுத்தமட்டில், அரசின் அரசிறைச் சேகரிப்பு மொத்த செலவினத்தை விட மிகவும் குறைவாக விளங்கி மீண்டெழும் செலவினத்தைக் கூட ஈடுசெய்யப் போதுமானதாக இருக்கவில்லை.

1. Heller, P. (2005) 'Understanding Fiscal Space', Policy Discussion Paper PDP/05/4, Washington, DC: Fiscal Affairs Department, IMF

வரைபடம் சி.கு 1.1 அரசிறை மற்றும் செலவினத்தின் செயலாற்றம்




மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அரசிறை 2010 - 2015 காலப்பகுதியில் 12.4 சதவீதமளவில் குறைவாக விளங்கியது. குறைந்த வருமானச் சேகரிப்பு பெரும்பாலும் நாட்டில் நலிவான வரி சேகரிப்பால் ஏற்பட்டது. வரி அரசிறை/ மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதமும் இவ்வாண்டில் ஒரு முறை மட்டும் செலுத்தப்பட்ட பல வரிகளின் விதிப்பனவின் பகுதிக்காரணத்தால் 2015இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 12.1 சதவீதத்துக்கு உயரமுன்பு 2014இல் 10.1 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது. இலங்கையின் வரிச் செயலாற்றம் அதன் பிராந்திய முன்னோடிகளுடன் ஒப்பிடுகையில் நலிவானதாக தொடர்ந்து விளங்கியது. பல்வேறு விலக்களிப்புக்கள் காரணமாக வரி முறைமையின் குறைந்த மீள் தன்மை, வரி தவிர்ப்பு மற்றும் நலிவான வரி நிருவாகம் குறைந்த அரசிறைச் செயலாற்றத்துக்கான சில காரணங்களாகும்.

உயர் செலவின மட்டங்கள் மற்றும் வரவுசெலவுத் திட்ட உயர் பற்றாக்குறையுடன் தொடர்புபடுகின்ற குறைந்த அரசிறைத் திரட்டல் உயர் அரச படுகடன் மட்டங்களை விளைவித்து, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அரச படுகடன் 2015இல் 76 சதவீதத்துக்கு அதிகரித்தது. இது அதிகரித்த படுகடன் பணிக் கொடுப்பனவுகளை தேவைப்படுத்தியதுடன் இது இறைத் தொழிற்பாடுகளுக்கு அழுத்தத்தை ஏற்படுத்தியது. தற்போது படுகடன் பணிக் கொடுப்பனவுகள் வரி மற்றும் வரியல்லா மூலங்களூடாக அரசால் உருவாக்கப்பட்ட அரசிறையின் 90 சதவீதத்தை ஈர்த்துக் கொண்டது. பணவீக்கமல்லாத மூலங்களிலிருந்து உள்நாட்டில் கடன் பெறுவதில் சிக்கலான தன்மை இல்லாததால் வெளிநாட்டு படுகடனின் உயர் மட்டங்கள் வெளிநாட்டு அதிர்வுகளுக்கு நாட்டின் பாதிப்புக்குள்ளாகும் தன்மையை அதிகரிக்கிறது.


### முன்னோக்கிய பாதை

தேர்ச்சியுள்ள இறைத் தொழிற்பாடுகளுக்கு வாய்ப்பு இல்லாமை அரச வரவுசெலவுத் திட்டத்தினுள் சமுதாயத்தின் பல்வேறு துறைகளிலிருந்தான புதிய கேள்விகளை உள்ளடக்குவது மிகவும் கடினமான பணியாக வந்துள்ளது. மேலதிக கடன்பாடுகளைப் பெற்றுக்கொள்வதில் அரசின் ஆற்றலின்மையைக் கவனத்திற்கொண்டு வரிச் சீர்திருத்தங்கள் மற்றும் செலவின அமைப்புக்களூடாக இறை இடைவெளி கட்டாயம் உருவாக்கப்பட வேண்டும். வரி இடைவெளியை உருவாக்குதல் தற்போதைய வரி அமைப்பின் ஒருங்கிணைந்த புத்தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அரசிறை திரட்டல் முயற்சிகளை மேம்படுத்துவதன் மூலம் ஆகக்குறைந்தது இலங்கையின் பிராந்திய முன்னோடிகளுடன் இணைந்து செல்லும் விதத்தில் இறைக் கொள்கை வரி/ மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தை அதிகரிப்பதை நோக்காகக் கொண்டிருக்க வேண்டும். வரிச் சீர்திருத்தங்கள் வரித்தளத்தை விரிவாக்கும் நோக்கு மற்றும் அதிகரித்துச் செல்லும் இணங்குவிப்புடன் மேற்கொள்ள வேண்டும். செலவினத்தைப் பொறுத்தமட்டில், இறை இடைவெளியை கவனத்தில் கொள்ளல் நடுத்தரகால செலவின கட்டமைப்பின் பின்னணியில் மேற்கொள்ளப்படவேண்டும். இது அரசின் செலவின முன்னுரிமைகளில் ஒருங்கிணைந்த தோற்றத்தைக் கொண்டிருக்கிறது. அதேவேளை, நாட்டால் உறப்படும் செலவினம் தொடர்பாக பணத்துக்கான பெறுமதியைப் பெறுவதற்கு செலவின முகாமைத்துவத்தினை வினைத்திறன் மேம்படுத்தப்படவேண்டும். இப்பின்னணியில், ஒவ்வொரு செலவின விடயமும் பொருளாதார, அரசியல், சமூக மற்றும் அரசின் ஏனைய பரிந்துரை நியதிகளில் கவனமாக மீளாய்வு செய்யப்படவேண்டும். இதற்கும் மேலாக, கிரமமான வரவுசெலவுத் திட்டத்துக்கு வெளியே மேற்கொள்ளப்படும் மேலெழுந்தவாரியான செலவிடல் தீர்மானங்கள் வரையறுக்கப்படவேண்டும். ஏனெனில் இவை இறை இடைவெளியைக் கட்டுப்படுத்தும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் நிதியியல் சாத்தியத்தை மேம்படுத்துதல் மற்றும் வரவுசெலவுத் திட்டம் மீது அவை தங்கியிருப்பதைக் குறைப்பதன் மூலம் அரசு அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் செயலாற்றத்தையும் முன்னேற்ற வேண்டும். உற்பத்தித்திறனை முன்னேற்றுவதற்கும் வளர்ச்சியை அதிகரிப்பதற்கும் தொழில் சந்தைச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். அத்தியாவசிய சீர்திருத்தங்களுக்குச் சாத்தியமான தடை விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களூடாக தொழில் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்து ஆர்வலர்களுடன் அரசின் உரிய பங்கேற்றல் மூலம் குறைக்கப்படவேண்டும்.

கடன்பாடுகள் அதிகரித்தன. மத்திய வங்கியிலிருந்தான தேறிய கடன்பாடுகளும் முக்கியமாக திறைசேரி உண்டியல்களின் ஊடாக அதிகரித்தன. ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் வெளிநாட்டு உடமைகளில் குறிப்பிடத்தக்க வெளிப்பாய்ச்சல் காணப்பட்ட போதும் வெளிநாட்டு மூலங்களிலிருந்தான தேறிய நிதியிடல் 2015ஆம் ஆண்டில் இரண்டு நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் வழங்கப்பட்டமையுடன் 2014இன் ரூ.212.5 பில்லியனிலிருந்து 2015இல் ரூ.236.8 பில்லியனுக்கு அதிகரித்தமையே காரணமாகும்.

**மொ.உ.உற்பத்தியின் விகிதமாக மொத்த அரச படுகடன் 2014 இறுதியின் 70.7 சதவீதத்திலிருந்து 2015 இறுதியில் 76.0 சதவீதத்திற்கு அதிகரித்து இவ்வாண்டுப் பகுதியில் இறைத் துறையின் பலயீனமான செயலாற்றத்தினையும் ஒப்பீட்டு ரீதியில் குறைந்தளவு பெயரளவு மொ.உ.உற்பத்தி வளர்ச்சியையும் பிரதிபலித்தது.** பெயரளவு நியதிகளில் மொத்த வெளிநின்ற அரச படுகடன் 2014 இறுதியின் ரூ.7,390.9 பில்லியனிலிருந்து 2015 இறுதியில் ரூ.8,503.2 பில்லியனுக்கு அதிகரித்தது. அரசிறைச் சேகரிப்புக்கள் தேவையான அளவிற்குக் குறைவாக இருந்தமையின் விளைவாக தேவைப்படுத்தப்பட்ட

வரைபடம் 1.7 மத்திய அரச படுகடன் (மொ.உ.உ. இன் சதவீதமாக)




கடன்பாடுகளின் அதிகரித்த மட்டம் மற்றும் முக்கிய வெளிநாட்டு நாணயங்களுக்கெதிராக ரூபா குறிப்பிடத்தக்களவிற்கு தேய்வடைந்தமை என்பன அரச படுகடனின் கணிசமான இவ்வதிகரிப்பிற்கு பெருமளவிற்குப் பங்களித்தன.

**அண்மைய கடந்த காலங்களில் காணப்பட்ட இறைச் செயலாற்றம் வரவு செலவுத்திட்டத்தில் கடுமையான அமைப்பியல் பலயீனங்களைப் பிரதிபலித்தது.** சிக்கலான வரிமுறைகள், ஒப்பீட்டு ரீதியில் குறைந்த அரசிறைத் தளம், பலயீனமான வரி இணங்குவிப்புக்கள் அதேபோன்று வரி நிருவாகத்தினை மேம்படுத்துவதற்கான தேவை என்பன அரசிறை உருவாக்கத்தினை மோசமாகப் பாதித்தன. வரவு செலவுத்திட்டத்தில் அரசிறைக் கணக்கின் (நடைமுறைக் கணக்கு) பற்றாக்குறையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் நாட்டின் அரசிறை அரசின் பேணல் செலவினத்தினை நிதியிடுவதற்குக் கூடப் போதுமானதாக இருக்கவில்லை. இது, அரசாங்கம் அதன் நாளாந்தத் தொழிற்பாடுகளுக்குக் கூட கடன்பாடுகளை நாடுவதற்கு நிர்ப்பந்தித்தது. இவ்வமைப்பியல் பலயீனமானது அபிவிருத்தித் தேவைகளுக்குப் போதுமான நிதியங்களை வழிப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் இயலாற்றலைக் கட்டுப்படுத்தியது. அழுத்தத்தினைத் தோற்றுவிக்கும் மூலவளங்களின் தேவை கடன்பாடுகளினூடாக அதிகரித்த செலவிடல்களுக்குக் காரணமாகி இறை இலக்குகள் விரும்பத்தக்க மட்டங்களிலிருந்து பிறழ்வதற்கு வழிவகுத்தது. இது அரசிறை வீழ்ச்சி, அளவுக்கு மிஞ்சிய செலவினம், உயர்ந்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை, அரச படுகடன் மற்றும் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளிலான அதிகரிப்பு என்பனவற்றின் விஷவட்டமொன்றிற்கு வழிவகுத்து அரச முதலீடுகள் மீதான செலவினத்தினையும் ஏனைய இன்றியமையாத செலவினங்களை உயர்த்துவதற்கான இயலாற்றலையும் குறைத்த வேளையில் இறைத்திரட்சியை இடர்ப்பாடான பணியொன்றாக்கியது. எனவே, வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகளை வலுப்படுத்தும் விதத்தில் தேவையான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இவ்விஷவட்டத்தை ஒவ்வொரு புள்ளியிலும் கட்டுப்படுத்துவது இன்றியமையாத தேவையாகவுள்ளது.


## நாணயத் துறை அபிவிருத்திகள்

**தொடர்ச்சியான தாழ்ந்த பணவீக்க சூழலொன்றில் இவ்வாண்டுப் பகுதியில் மத்திய வங்கி தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையொன்றைப் தொடர்ந்து பேணியதெனினும் உயர் கொடுகடன் மற்றும் நாணய விரிவாக்கத்திலிருந்து தோன்றுகின்ற பணவீக்கத்தின் மீதான மிகையான கேள்வி அழுத்தத்தினை முன்கூட்டியே கட்டுப்படுத்தும் நோக்குடன் 2015 இறுதியிலிருந்து நாணயக் கொள்கை படிப்படியாக இறுக்கமாக்குவதற்கு முயற்சிக்கப்பட்டது.** கடந்த சில ஆண்டுகளாக பேணப்பட்டு வந்த தாழ்ந்த வட்டி வீதச் சூழலினால் ஊக்குவிக்கப்பட்ட தனியார் துறைக்கான கொடுகடன் பாய்ச்சலில் ஏற்பட்ட வலுவான அதிகரிப்பினைக் கருத்தில் கொண்டு 2015 மாச்சில் மத்திய வங்கி 2014 செத்தெம்பரிலிருந்து நடைமுறையிலிருந்த திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழான அதன் துணைநில் வைப்பு வசதியை நாடுவதன் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை அகற்றியது. குறுங்கால வட்டி வீதங்களின் மிகையான தளம்பல்களைக் கட்டுப்படுத்துவதற்கான இவ்வழிமுறையின் விளைவாக மத்திய வங்கி 2015 ஏப்பிறலில் அதன் முக்கிய கொள்கை வட்டி வீதங்களான துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 50 அடிப்படைப் புள்ளிகளினால் 6.00 சதவீதத்திற்கும் 7.50 சதவீதத்திற்கும் குறைத்தது. இருந்தபோதிலும், கொடுகடன் மற்றும் நாணயக் கூட்டுக்கள் எறிவுசெய்யப்பட்டதிலும் பார்க்க விரைவான வேகத்தில் தொடர்ந்தும் அதிகரித்தமையினால் மத்திய வங்கி 2015இன் இறுதியிலிருந்து நாணயக் கொள்கையை படிப்படியாக இறுக்கமாக்கத் தொடங்கியது. இதன்படி, வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்களின் மீதான பிரயோகிக்கத்தக்க நியதி ஒதுக்கு விகிதத்தினை 2016 சனவரி 16இல் ஒதுக்குக் காலம் ஆரம்பிக்கப்படுவதிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 1.50 சதவீதப் புள்ளிகளினால் 7.50 சதவீதத்திற்கு உயர்த்தியது. இது நாணயக் கொள்கையின் தளர்த்தல் வட்டம் முடிவடைவதற்கான சமிக்ஞைகளைக் காட்டியது. நாணயக் கொள்கை இறுக்கமாக்குதல் தொடங்குவதற்கு முன்னர்கூட தெரிந்தெடுக்கப்பட்ட துறைகளுக்கான மிகையான கொடுகடன் பாய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்காக 2015இன் இறுதிக் காலாண்டில் பல கொள்கை வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன்படி, உந்து ஊர்திகளின் இறக்குமதிக்காக திறக்கப்பட்ட நாணயக்

கடிதங்களின் மீது குறைந்தபட்சக் காசு அளவுத் தேவைப்பாடு விதிக்கப்பட்டது. இது, உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டிற்கான நோக்கத்திற்காக வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான பேரண்ட முன்மதியுடைய வழிமுறையொன்றாக பெறுமதிக்கான உயர்ந்தபட்சக் கடன் விகிதத்தின் மூலம் பின்னர் அகற்றப்பட்டது. இவ்வழிமுறைகள் செலாவணி வீதத்தினை நிர்ணயிப்பதில் அனுமதிக்கப்பட்ட பாரிய நெகிழ்ச்சித்தன்மை மற்றும் அரசாங்கத்தினால் செய்யப்பட்ட வரி அமைப்பிற்கான மாற்றங்கள் என்பனவற்றுடன் சேர்ந்து தனியாள் கடன்கள் மற்றும் முற்பணங்களின் மிகையான வளர்ச்சியைக் கட்டுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் பேரண்டப் பொருளாதாரம் மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு வலுப்படுத்தப்படுகிறது. இருப்பினும்கூட தொடர்ச்சியான உயர்ந்த நாணய விரிவாக்கத்தின் காரணமாக கேள்வியினால் உந்தப்பட்ட பணவீக்க அழுத்தங்களின் சாத்தியமான அதிகரிப்புக்களைப் பரிசீலனையில் கொண்டு முன்கூட்டிய வழிமுறையொன்றாக மத்திய வங்கி 2016 பெப்புருவரி 19ஆம் நாளன்று அதன் வியாபாரம் முடிவடைவதிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அதன் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் ஒவ்வொன்றையும் 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 6.50 சதவீதத்திற்கும் 8.00 சதவீதத்திற்கும் உயர்த்தியது.

**உள்நாட்டுப் பணச் சந்தையில் ரூபாத் திரவத்தன்மை 2014இல் அவதானிக்கப்பட்ட மட்டத்திலும் பார்க்க குறைவானதாக இருந்தபோதும் 2015ஆம் ஆண்டு முழுவதும் தொடர்ந்தும் மிகையானதாகக் காணப்பட்டது.** திறைசேரி உண்டியல்களின் கொள்வனவு மற்றும் மத்திய வங்கியினால் அரசிற்கு வழங்கப்பட்ட தற்காலிக முற்பணங்கள் என்பனவற்றின் காரணமாக இவ்வாண்டின் தொடக்கப் பகுதியில் மிகையான திரவத்தன்மை மிக உயர்வாகக் காணப்பட்டது. எனினும், 2015 ஓகத்து வரை படிப்படியாக வீழ்ச்சியடைந்த மிகையான திரவத்தன்மையானது உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கான வெளிநாட்டுச் செலாவணியின் தொடர்ச்சியான நிரம்பல், வெளிநாட்டுக் கடன்களின் மீள்கொடுப்பனவுகள், மத்திய வங்கியினால் வைத்திருக்கப்பட்ட திறைசேரி உண்டியல்களின் முன்கூட்டிய இளைப்பாறுதல்கள் மற்றும் உடனடி விற்பனைகள் அதேபோன்று குறிப்பாக, பொதுத் தேர்தல் காலப்பகுதியில் உயர்ந்தளவு நாணய வெளியீடு என்பனவற்றைப் பிரதிபலித்தது. குறுங்கால வட்டி வீதங்களில் உறுதிப்பாட்டினைப் பேணும் நோக்குடன் ஓரிரவுவின் மீதான உள்நாட்டுப் பணச் சந்தையிலும் குறுங்கால மற்றும் நீண்ட கால அடிப்படையிலும் மிகையான திரவத்தன்மையினை மத்திய வங்கி கட்டுப்படுத்தியது. இருப்பினும்கூட, 2015 செத்தெம்பரிலிருந்து பணச் சந்தையின் மிகையான திரவத்தன்மை அதிகரித்தமைக்கு

வரைபடம் 1.8 துணைநில் வீத வீச்சு மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்கள்





மத்திய வங்கியினால் இலங்கை அபிவிருத்தி முறிகள் கொள்வனவு செய்யப்பட்டமை முதலாந்தரச் சந்தையில் மத்திய வங்கியினால் திறைசேரி முறிகள் அதிகளவு கொள்வனவு செய்யப்பட்டமை மற்றும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் பெறுகைகளின் ஒரு பகுதி மத்திய வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்டமை என்பன காரணங்களாக அமைந்தன. 2015ஆம் ஆண்டுப் பகுதியில் ஓரிரவு மிகையான திரவத்தன்மை ரூ.3.3 பில்லியனிலிருந்து ரூ.149.6 பில்லியன் என்ற வீச்சில் காணப்பட்டதுடன் சராசரியாக ரூ.76.6 பில்லியன் காணப்பட்ட வேளையில் மொத்த மிகையான திரவத்தன்மை 2015 இறுதியில் ரூ.105.3 பில்லியனில் காணப்பட்டது.

**இவ்வாண்டுப் பகுதியில் மத்திய வங்கி நாணய இலக்கிடல் மற்றும் நெகிழ்ச்சித்தன்மை கொண்ட பணவீக்க இலக்கிடல் ஆகிய இரு பண்புகளுடன் கூடிய உயர்த்தப்பட்ட நாணயக் கொள்கைக் கட்டமைப்பொன்றிற்குள் நாணயக் கொள்கையை மேற்கொண்டது.** இவ்வுயர்த்தப்பட்ட நாணயக் கொள்கை கட்டமைப்பின் கீழ் மத்திய வங்கி நடுத்தர காலப்பகுதியில் ஒற்றை இலக்கத்தில் பணவீக்கத்தினை நிலைப்படுத்துவதற்கு முயற்சித்த வேளையில் பொருளாதாரத்தின் வளர்ச்சி உத்வேகத்திற்கும் ஆதரவளித்தது. இக்கட்டமைப்பின் தொழிற்பாட்டு அம்சங்களின் நியதிகளில் மத்திய வங்கி குறுங்கால வட்டி வீதங்களை குறிப்பாக, கட்டமைப்பின் தொழிற்பாட்டு இலக்காகவுள்ள சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தினை வழிப்படுத்துவதற்கு விரும்பத்தக்க பாதையுடன் சேர்த்து இதனை கொள்கைக் கருவியொன்றாகப் பயன்படுத்தியது. ஒதுக்குப் பணம் தொழிற்பாட்டு இலக்காக இனிமேல் கருதப்படாத போதும் விரிந்த பணநிரம்பல் ($M_{2b}$) நாணயக் கொள்கைக்கு வழிகாட்டுவதற்கு முக்கிய இடைநிலை மாறியாக தொடர்ந்தும் எடுத்துக்காட்டப்பட்டு வருவதுடன் இது, எதிர்பார்க்கப்பட்ட பணவீக்க இலக்கினையும் மொ.உ.உற்பத்தியின் உண்மை வளர்ச்சியையும் பரிசீலனையில்

கொண்டு தயாரிக்கப்பட்ட மத்திய வங்கியின் வருடாந்த நாணய நிகழ்ச்சித்திட்டத்திலும் முக்கிய வகிபாகமொன்றினை ஆற்றுகிறது. எனினும், இவ்வாண்டுப் பகுதியில் உண்மையான விரிந்த பணத்தின் வளர்ச்சி எறிவுசெய்யப்பட்ட மட்டங்களைகாட்டிலும் கணிசமானளவில் உயர்வாக இருந்தது.

**அரச மற்றும் தனியார் துறை ஆகிய இரண்டிற்குமான கொடுகடன் விரிவடைந்தமையின் காரணமாக 2015ஆம் ஆண்டுப் பகுதியில் விரிந்த பணம் ($M_{2b}$) விரைவாக வளர்ச்சியடைந்தது.** $M_{2b}$ 2014இன் இறுதியின் 13.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015 இறுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 17.8 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் சராசரி விரிந்த பணத்தின் வளர்ச்சி இவ்வாண்டுப் பகுதியில் 15.2 சதவீதமாகக் காணப்பட்டது. வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் இவ்வாண்டுப் பகுதியில் சுருக்கத்தைப் பதிவுசெய்தமையினால் விரிந்த பணத்தில் ஏற்பட்ட விரிவாக்கமே 2015இல் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் அதிகரிப்பதற்குக் முழுக் காரணமாகியதுடன் உள்நாட்டுக் கொடுகடன் விரிவாக்கத்தினால் ஆதரவளிக்கப்பட்டது. வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2015இன் முதல் பத்து மாத காலப்பகுதியில் ரூ.413.6 பில்லியனால் கணிசமாக சுருக்கமடைந்ததுடன் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளிலிருந்தான பெறுகைகள் மத்திய வங்கியினால் பெறப்பட்டதைத் தொடர்ந்து இறுதி இரண்டு மாதங்களிலும் சுருக்கம் மிதமடைந்தது. இதன்படி, 2015 இறுதிப் பகுதியில் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் சுருக்கம் ரூ.313.3 பில்லியனாகக் காணப்பட்டது. இவ்வாண்டுப் பகுதியில் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி அதிகரித்தமையுடன் சேர்ந்து ரூ.111.8 பில்லியனால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, வர்த்தக வங்கிகளின் குறுங்கால வெளிநாட்டுக் கடன்பாடுகள் அதிகரித்தமையும் அதேபோன்று வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் என்பனவற்றின் நிலுவையில் ஏற்பட்ட அதிகரிப்பு போன்ற காரணங்களால் 2015இல் வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ.201.5 பில்லியனால் வீழ்ச்சியடைந்தன. 2015இல் உண்மையான நியதிகளில் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் 26.0 சதவீதத்தினால் அல்லது ரூ.1,003.3 பில்லியனால் விரிவடைந்து அரச மற்றும் தனியார் துறை இரண்டிற்குமான அதிகரித்த கொடுகடன் பாய்ச்சல்களினால் தூண்டப்பட்டது. தேறிய உள்நாட்டுச் சொத்துக்களுக்கிடையே வங்கித்தொழில் முறைமையினால் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட தேறிய கொடுகடன்

வரைபடம் 1.9 — விரிந்த பணம் ($M_{2b}$) மற்றும் தனியார்துறைக் கொடுகடனின் ஆண்டுக்காண்டு வளர்ச்சி





ரூ.323.6 பில்லியனால் கணிசமாக அதிகரித்து அரச வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தினை விஞ்சியது. அரசிற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு வெளிநாட்டு நிதியியல் பாய்ச்சல்களைப் பெறுவதில் தாமதங்கள் காணப்பட்டமைக்கிடையிலும் உள்நாட்டு நிதியிடலின் மீது அரசாங்கம் அதிகளவு தங்கியிருந்தமையும் அரச சேகரிப்பின் தொடர்ச்சியான வீழ்ச்சியும் அதேபோன்று அளவுக்கு மீறிய செலவினமும் காரணங்களாக அமைந்தன. மத்திய வங்கியுடனான திறைசேரி உண்டியல்களின் வைப்புக்கள் அதிகரித்தமையுடன் மத்திய வங்கியின் அரசிற்கான தேறிய கொடுகடன் 2015ஆம் ஆண்டுப் பகுதியில் ரூ.80.3 பில்லியனால் அதிகரித்த அதேவேளை, வர்த்தக வங்கிகளின் அரசிற்கான தேறிய கொடுகடன் ரூ.243.3 பில்லியனால் அதிகரித்தமைக்கு வர்த்தக வங்கிகளினால் திறைசேரி உண்டியல்களிலும் இலங்கை அபிவிருத்தி முறிகளிலும் செய்யப்பட்ட அதிகரித்த முதலீடுகளே காரணமாக விளங்கின. எனினும், இவ்வாண்டுப் பகுதியில் வர்த்தக வங்கிகளினால் திறைசேரி முறிகளில் செய்யப்பட்ட முதலீடுகள் ரூ.52.2 பில்லியன் கொண்ட வீழ்ச்சியைப் (மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் கழித்து) பதிவுசெய்து நீண்ட காலப் பிணையங்களுக்கு வர்த்தக வங்கிகளின் ஆர்வம் குறைவடைந்து விட்டமையைப் பிரதிபலித்தது. அரச வங்கிகளுடனான அரசாங்கத்தின் வெளிநின்ற மேலதிகப் பற்று நிலுவைகளும் 2014 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.114.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015 இறுதியில் ரூ.125.1 பில்லியனுக்கு ரூ.10.5 பில்லியனால் அதிகரித்தது. அதேவேளை, வங்கித்தொழில் துறையிலிருந்து அரச நிறுவனங்களினால் பெறப்பட்ட கொடுகடனில் ஏற்பட்ட விரிவாக்கம் 2014இல் அவதானிக்கப்பட்ட ரூ.80.9 பில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2015இல் ரூ.76.9 பில்லியனுக்கு சிறிதளவால் அதிகரித்தது. சிறிலங்கன் எயார்லையின்ஸ், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நெற் சந்தைப்படுத்தும்

சபை என்பனவற்றிற்கு வழங்கப்பட்ட கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு இவ்வாண்டுப் பகுதியில் அரச நிறுவனங்களுக்கான கொடுகடன் விரிவடைவதற்கு முக்கியமாகப் பங்களித்த வேளையில் இலங்கையின் மின்சபை, இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனம் மற்றும் கொழும்பு வர்த்தக வளமாக்கி என்பன வங்கித்தொழில் துறைக்கான அவற்றின் வெளிநின்ற பொறுப்புக்களின் ஒரு பகுதியை மீளச்செலுத்தின.

**தொடர்ச்சியாகத் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கையின் நிலைக்குப் பதிலிறுத்தும் விதத்தில் வங்கித்தொழில் முறைமையினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் உயர்ந்த வீதத்தில் விரிவடைந்தது.** 2015 இறுதியில் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2014 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 8.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 25.1 சதவீதத்தினால் அதிகரித்தது. உண்மையான நியதிகளில் தனியார் துறைக்கான கொடுகடன் 2014இன் ரூ.223.9 பில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப் பகுதியில் ரூ.691.4 பில்லியனால் அதிகரித்தது. தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் விரைவடைந்தமைக்கு தொடர்ச்சியாக காணப்பட்ட குறைந்த சந்தை வழங்கல் வீதங்களும் அதேபோன்று கடன்பாட்டாளர்களைக் கவர்வதற்கு கடன்வழங்கல் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட தீவிரமான சந்தைப்படுத்தல் பிரச்சாரங்களும் தூண்டுதலாக அமைந்தன. தனியார் துறை கொடுகடனில் ஏற்பட்ட வழமையான விரிவாக்கத்திற்குப் புறம்பாக, ஒரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியை உருவாக்குவதற்காக டிஎவ்சிசி வர்தன வங்கியும் டிஎவ்சிசி பிஎல்சியும் 2015 ஒத்தோபரில் ஒருங்கிணைக்கப்பட்டதன் விளைவாக $M_{2b}$ யில் தனியார் துறைக்கான கொடுகடனில் ஏற்பட்ட ஒட்டுமொத்த விரிவாக்கத்திற்கு சேர்க்கப்பட்ட ரூ.83.0 பில்லியன் கொண்ட கடன்கள் மற்றும் முற்பணங்களின் மேலதிக தொகையினையும் இது உள்ளடக்குகிறது. அதேவேளை, முற்பணங்களின் பிணைய வகை அடிப்படையிலான பகுப்பாய்வின்படி குத்தகைக்குவிடுதல் மற்றும் தவணைக் கொள்வனவு நியதிகளிலான கொடுகடன் முன்னைய ஆண்டின் ரூ.16.4 பில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2015இல் ரூ.65.6 பில்லியனுக்கு கணிசமாக அதிகரித்து உந்து ஊர்திகளுக்கான அதிகரித்த இறக்குமதிக் கேள்வியை எடுத்துக்காட்டியது. அடகு முற்பணங்களில் காணப்பட்ட சுருக்கம் 2014இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.140.0 பில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இல் ரூ.38.2 பில்லியனுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. மேலும், வர்த்தக வங்கிகளின் கடன்கள் மற்றும் முற்பணங்களின் காலாண்டு அளவீட்டின்படி பணிகள் துறை மற்றும் கைத்தொழில் துறைக்கான கொடுகடன் முறையே 34.1 சதவீதத்தினாலும் 25.0 சதவீதத்தினாலும் குறிப்பிடத்தக்களவிற்கு விரிவடைந்து இவ்வாண்டுப் பகுதியில் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளுக்கு கொடுகடன் தொடர்ச்சியாகப் பாய்ந்தமையை எடுத்துக்காட்டியது.

**2015ஆம் ஆண்டுப் பகுதியில் சந்தை வட்டி வீதங்கள் தாழ்வாகக் காணப்பட்ட போதும் இவ்வாண்டின் இறுதிப் பகுதியில் சில மேல் நோக்கிய அசைவுகள் அவதானிக்கப்பட்டன.** துணைநில் வைப்பு வசதியின் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையின் காரணமாக 2014 செத்தெம்பரிலிருந்து துணைநில் வைப்பு வசதி வீதத்திற்கும் கீழாகக் காணப்பட்ட சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணச் சந்தை வீதம் கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டமையின் விளைவாக 2015 மாச்சில் மேல் நோக்கி நகர்ந்தது. 2015 ஏப்பிறலில் கொள்கை வட்டி வீதங்கள் குறைவடைந்தமையுடன் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணச் சந்தை வீதம் வீழ்ச்சியடைந்த போதும் 2015 ஓகத்து வரை கொள்கை வீத வீச்சின் கீழ் எல்லைக்கு அணித்தாக தொடர்ந்தும் காணப்பட்டதுடன் அதன் பின்னர் சில மேல் நோக்கிய போக்குகளைக் காட்டியது. சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணச் சந்தை வீதத்தின் இவ்வசைவு உள்நாட்டுப் பணச்சந்தையின் மிகைத் திரவத்தன்மையில் ஏற்பட்ட வீழ்ச்சியின் முக்கியமானதொரு பிரதிபலிப்பாக இருந்தது. இதன்படி, சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணச் சந்தை வீதம் 2014 இறுதியின் 6.21 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2015 இறுதியில் 6.40 சதவீதமாகக் காணப்பட்டது. அதேவேளை, அரச பிணையங்கள் மீதான விளைவும் 2015ஆம் ஆண்டுப் பகுதியில் கணிசமானளவிற்கு அதிகரித்தது. இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கல்கள் உள்நாட்டுப் படுகடன் சாதனங்களின் மீதான வட்டி வீதத்தின் அழுத்தத்தினை ஓரளவிற்குத் தளர்த்த உதவிய போதும் அரசாங்கத்தின் உயர்ந்த உள்நாட்டு நிதியிடல்

வரைபடம் 1.10 மொ.உ.உற்பத்தியின் விகிதமாக கொடுகடன் மற்றும் வைப்புக்கள்



தேவைப்பாடுகளின் சந்தை எதிர்பார்ப்புக்களுக்கிடையிலும் வெளிநாட்டு நிதியியல் உட்பாய்ச்சல்களில் காணப்பட்ட தாமதம் மற்றும் அரச பிணையங்களை பகிரங்க ஏலங்களினூடாக மட்டுமே வழங்குவது என்ற மத்திய வங்கியின் தீர்மானம் என்பன அரச பிணையங்கள் மீதான விளைவு மீது அதிகரித்த அழுத்தத்தினைத் தோற்றுவித்தன. அதேவேளை, வர்த்தக வங்கிகளினால் வைப்புக்கள் மீது வழங்கப்பட்ட வட்டி வீதங்கள் 2015ஆம் ஆண்டுப் பகுதியில் குறைவாகக் காணப்பட்ட போதும் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து படிப்படியான அதிகரிப்பொன்று காணப்பட்டது. 2015 இறுதியளவில் சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் 6.20 சதவீதமாக விளங்கி 2014 இறுதியில் நிலவிய அதே மட்டத்திற்குத் திரும்பியது. சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் 2014 இறுதியின் 7.33 சதவீதத்திலிருந்து 2015 இறுதியில் 7.57 சதவீதத்திற்கு 24 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரித்தது. வெளிநின்ற கடன் நிலுவைகளினால் நிறையேற்றப்பட்ட அனைத்து முற்பணங்களின் மீதுமான கடன்வழங்கல் வீதங்களை உள்ளடக்கிய சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் 2014 இறுதியில் 11.91 சதவீதத்திலிருந்து 2015 இறுதியில் 11.00 சதவீதத்திற்கு 91 அடிப்படைப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்தது. இருப்பினும், ஆண்டின் இறுதிப் பகுதியில் காணப்பட்ட குறுங்கால கடன்வழங்கல் வீதங்களில் ஏற்பட்ட படிப்படியான உயர்வினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் வாராந்த சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் 2014இன் இறுதியின் 6.26 சதவீதத்திலிருந்து 2015 இறுதியில் 7.53 சதவீதத்திற்கு 127 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரித்தது. வட்டி வீதங்களின் அதிகரித்துச் செல்லும் போக்கு 2016இன் முதற்காலாண்டிலும் தொடர்ந்து காணப்பட்டு மத்திய வங்கியினால் பின்பற்றப்பட்ட இறுக்கமாக்கப்பட்ட நாணயக் கொள்கை வழிமுறைகள், பணச் சந்தையின் மிகைத் திரவத்தன்மை மட்டங்கள் குறைக்கப்பட்டமை மற்றும் அரசாங்கத்தின் தொடர்ச்சியாகக் காணப்பட்ட உயர்ந்த நிதியிடல் தேவைப்பாடுகள் என்பனவற்றை முக்கியமாகப் பிரதிபலித்தன.

## நிதியியல் துறை அபிவிருத்திகள்

**2015இல் நிதியியல் துறை உள்நாட்டு மற்றும் உலகளாவிய நிச்சமற்ற தன்மைகளிலிருந்து தோன்றிய தளம்பல் சந்தை நிலைமைகளுக்கு அதன் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினைக் காட்டியது.** குறைந்த வட்டி வீத அமைப்பு, அதிகரித்த இலாபங்கள் மற்றும் உள்ளக மூலதன உருவாக்கம் என்பனவற்றின் பின்னணிக்கு, எதிராக அதிகரித்த கொடுகடன் கேள்வியினால் ஆதரவளிக்கப்பட்டு வங்கித்தொழில் துறையின் வியாபாரத் தொழிற்பாடுகள் விரிவடைந்து எந்தவொரு மோசமான அதிர்வுகளிலிருந்தும் தோன்றுகின்ற இடர்நேர்வுகளை ஈர்த்துக்கொள்ளும் விதத்தில் இத்துறையில் கிடைக்கத்தக்கவிருந்த பாதுகாப்பினை அதிகரித்தன. வங்கியியல் துறையின் சொத்து தரம் ஆண்டுக்காலத்தில் அதிகரித்தது. நிதி மற்றும் குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையும் உள்நாட்டு நிதியியல் முறைமையின் மொத்தச் சொத்துக்களின் நியதிகளில் அதிகரித்த அதன் தொடர்பான பங்குகளில் பிரதிபலிக்கப்பட்டவாறு மேம்பட்ட செயலாற்றத்தினைப் பதிவுசெய்தது. திரவத்தன்மை அச்சுறுத்தலுக்குள்ளாகிய ஒரு சில நிதிக் கம்பனிகளின் வைப்பாளர்களினதும் முதலீட்டாளர்களினதும் நலன்களைப் பாதுகாப்பதற்காக 2015இல் மத்திய வங்கி தொடர்ந்தும் ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளை மேற்கொண்டது. விரைந்த வியாபார விரிவாக்கம் காணப்பட்டமைக்கிடையிலும் அரச பிணையங்களின் முதனிலை வணிகர்கள் மிதமான தொழிற்பாட்டு பெறுபேறுகளைக் காட்டிய வேளையில், ஒரு முதனிலை வணிகரினால் எதிர்நோக்கப்பட்ட திரவத்தன்மைப் பிரச்சனைகள் முதலீட்டாளர் நம்பிக்கையைப் பேணுவதற்காகவும் அரச பிணையங்கள் சந்தையில் சுமுகமான தொழிற்பாடுகளுக்கு வசதியளிப்பதற்காகவும் ஒழுங்குமுறைப்படுத்தல் தலையீட்டினைத் தேவைப்படுத்தின. தாழ்ந்த சந்தை வட்டி வீதங்களின் மத்தியிலும் ஒப்பந்த ரீதியான சேமிப்பு நிறுவனங்களின் காரணமாக அவை முன்னைய ஆண்டின் நெருக்கமான மட்டமொன்றிற்கு வருமானத்தினை பெற்றுக்கொண்டன. மற்றைய வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களும் கூட வியாபார வளர்ச்சியைப் பதிவுசெய்தனவெனினும் அவற்றின் வியாபார மாதிரிகளையும் நிதியியல் சந்தை நிலைமைகளையும் கவனத்தில் கொள்கையில் கலப்பான தொழிற்பாட்டுச் செயலாற்றமொன்றினையே கொண்டிருந்தன. இவ்வாண்டுப் பகுதியில் உலகளாவிய அபிவிருத்திகளிலிருந்து பகுதியளவில் தோன்றிய நாணய மற்றும் சென்மதி நிலுவை நிலைமைகளின் விளைவாக உள்நாட்டு நிதியியல் சந்தைகள் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த தளம்பல்களுடனேயே தொழிற்பட்டன. அதேவேளை, நாட்டின் பாரிய மற்றும் சில்லறைப் பெறுமதி தேசிய கொடுப்பனவு முறைமைகள் பாரிய தடங்கல்களோ அல்லது உறுதிப்பாட்டு கரிசனைகளோ எதுவுமில்லாமல் சுமுகமாகத் தொழிற்பட்ட வேளையில் நிதியியல் துறையினதும் பொதுமக்களினதும் வளர்ச்சியடைகின்றதும் மாற்றமடைகின்றதுமான கொடுப்பனவுத் தேவைகளுக்கு வசதியளிக்கின்ற விதத்தில் அவற்றின் வினைத்திறனும் பாதுகாப்பும் மேம்படுத்தப்பட்டன.

**வங்கிகளில் திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவத்தினை வலுப்படுத்துவதற்காக ஒழுங்கு முறைப்படுத்தல் வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டமை, வங்கிகள் மற்றும் வங்கித்தொழில் அல்லா நிதியியல் நிறுவனங்களின் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவம், அதிகாரமளிக்கப்படாத நிதியியல் வியாபாரங்களைக்**

**கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்பன புதிய முன்மதியுடைய ஒழுங்குவிதிகள் தொடர்பில் உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் துறைகளின் முக்கிய அபிவிருத்திகளாகக் காணப்பட்டன.** மேலும், பொதுமக்களிடையே இலத்திரனியல் கொடுப்பனவுகளை ஊக்குவிக்கும் நோக்குடன் பாரிய பெறுமதிகள் மற்றும் சில்லறை இலத்திரனியல் நிதிய மாற்றல்கள் மீது அவற்றின் வாடிக்கையாளர்களிடமிருந்து வங்கிகளினால் அறவிடப்படும் கொடுக்கல்வாங்கல் கட்டணங்கள் மீது வரையறைகள் விதிக்கப்பட்டன. கோரலாளர்களைப் பாதுகாப்பதற்காக குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றிற்குள் காப்புறுதி கோரல்களைத் தீர்ப்பனவு செய்யும் விடயத்தில் காப்புறுதித் தொழில்துறைக்கு பல ஒழுங்குவிதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டமை, காப்புறுதி தரகர்களின் ஆற்றல்வாய்ந்த தன்மையை அதிகரிப்பதற்காக குறைந்தபட்சத் தேறிய மூலதன மட்டமொன்று விதிக்கப்பட்டமை, வாடிக்கையாளர் பாதுகாப்பிற்காக காப்புறுதி முகவர்களினால் மேற்கொள்ளப்படும் வியாபாரப் பிரச்சாரங்கள் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டமை மற்றும் காப்புறுதிக் கம்பனிகளின் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளை அதிகரிப்பதற்காக இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட கடன் தீராற்றல் அளவினை (இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மூலதனம்) பின்பற்றுமாறு அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளும் தேவைப்படுத்தப்பட்டமை என்பன 2015இல் அவதானிக்கப்பட்ட விடயங்களாகும். நியதி ஒதுக்கு இடைவெளி, இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வு என்பனவற்றை உள்ளடக்கி மூலதனச் சந்தை அபிவிருத்தி முதன்மைத் திட்டம் வடிவமைக்கப்பட்டமை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளை வகைப்படுத்துவதற்காக உலகளாவிய கைத்தொழில் வகைப்படுத்தல் நியமம் பின்பற்றப்பட்டமை என்பன பட்டியலிடப்பட்ட படுகடன், பங்குரிமை மூலதனம் மற்றும் கூறு நம்பிக்கைச் சந்தைகள் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட ஏனைய முக்கிய கொள்கைகளாகும்.

## 1.3 உலகளாவிய பொருளாதாரச் சூழலும் தோற்றப்பாடும்

**பன்னாட்டு நாணய நிதியத்தின் உலகப் பொருளாதாரத் தோற்றப்பாட்டின்படி முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்களில் மிதமான மீட்சி காணப்பட்டமைக்கிடையிலும் தோற்றம்பெற்றுவரும் சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் சந்தைகளின் வளர்ச்சியில் காணப்பட்ட வீழ்ச்சியின் காரணமாக 2015இல் உலகளாவிய பொருளாதார நடவடிக்கைகள் குறைந்தளவில் காணப்பட்டன.** முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்களில் வெளியீட்டு இடைவெளிகள் சுருக்கமடைந்த வேளையில் தோற்றம்பெற்றுவரும் சந்தைகள் இவ்வாண்டுப் பகுதியில் புதிய சவால்களை எதிர்நோக்கியமையால் முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்களினதும் அவற்றின் தோற்றம்பெற்றுவரும் சந்தை இணைத்தரப்பினர்களினதும் செயலாற்றம் வேறுபட்டனவாகக் காணப்பட்டன. இதற்கு முக்கிய தோற்றம்பெற்றுவரும் சந்தைகளில் பொருளாதார நடவடிக்கைகளின் மீள்சமநிலைப்படுத்தலும் பண்ட விலைகளின் தாழ்ந்த மட்டங்களும் முக்கிய காரணங்களாக விளங்கின. எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான வீழ்ச்சி பெரும்பாலான பொருளாதாரங்களில் பணவீக்கத்தினை குறைந்த மட்டங்களில் பேணுவதற்கு உதவிய போதும் எண்ணெய் ஏற்றுமதி நாடுகளில் இறை மற்றும் வெளிநாட்டு வசதிகள் சுருங்கிய நிலையிலேயே காணப்பட்டன. நலிவடைந்த வளர்ச்சி வாய்ப்புக்கள், மோசமடைந்த வர்த்தக மாற்று விகிதம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் றிசேர்வினால் இறுக்கமாக்கப்பட்ட நாணயக் கொள்கைகளின் கசிந்த தாக்கம் என்பன இவ்வாண்டுப் பகுதியில் பல நாணயங்கள் பெறுமதி இழப்பு அழுத்தங்களை எதிர்நோக்குவதற்கு வழியமைத்தன.

**பாரிய தோற்றம்பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களின் செயலாற்றத்தின் அளவு குறைவடைந்தமையினால் உலகளாவிய வளர்ச்சி குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.** இதன்படி, உலகளாவிய வளர்ச்சி 2016இல் 3.2 சதவீதத்திலும் 2017இல் 3.5 சதவீதத்திலும் மதிப்பிடப்பட்டது. உலகளாவிய சூழ்நிலைகளின் காரணமாக சவால்கள் தோற்றுவிக்கப்பட்ட போதிலும், பெடரல் றிசேர்வ் வீட்டுத்துறையின் செலவிடல்களில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் தொழிலாளர் சந்தை வலுவடைந்து வருகின்றமை என்பனவற்றின் விளைவாக ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதாரம் தொடர்ந்தும் மிதமான வேகத்தில் விரிவடையுமென எதிர்பார்க்கிறது. ஐக்கிய இராச்சியத்தின் பொருளாதார மீட்சியில் ஏற்பட்ட உத்வேகம் இங்கிலாந்து வங்கியின் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கையினால் தூண்டப்பட்டதுடன் இது தனியார் உள்நாட்டுக் கேள்வியில் விரிவாக்கத்தினைத் தோற்றுவித்து இறைத்திரட்சியின் சுருக்கத் தாக்கத்தினை எதிரீடு செய்வதற்கு உதவியது. எனினும், ஐக்கிய இராச்சியப் பொருளாதாரத்தின் சாதகமான தோற்றப்பாடு 2016 நடுப்பகுதியில் நடாத்துவதற்கு அட்டவணையிடப்பட்டுள்ள ஐரோப்பிய ஒன்றிய உறுப்புரிமை மீதான சர்வசன வாக்கெடுப்பினைச் சுற்றிக் காணப்படும் நிச்சயமற்ற தன்மைகளினால் பாதிக்கப்படக்கூடுமென்ற கரிசனைகள் காணப்படுகின்றன. முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் வளர்ச்சி வாய்ப்புக்கள் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் பலயீனமாகக் காணப்படும் யப்பானிற்கான பொருளாதாரத் தோற்றப்பாட்டின் தரம் குறைவடைந்தமையினால் பாதிக்கப்பட்டன. மேலும், பணவீக்கம் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திலும் பார்க்க குறைவாக இருக்கின்றமை 2016இல்

**அட்டவணை 1.4 — உலகப் பொருளாதார அபிவிருத்திகளும் தோற்றப்பாடும் (அ)**

| விடயம் | 2014 | 2015 | 2016 (எறிவுகள்) | 2017 (எறிவுகள்) |
|---|---|---|---|---|
| **உலக வெளியீடு** | **3.4** | **3.1** | **3.2** | **3.5** |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 1.8 | 1.9 | 1.9 | 2.0 |
| ஐக்கிய அமெரிக்கா | 2.4 | 2.4 | 2.4 | 2.5 |
| யூரோ பகுதி | 0.9 | 1.6 | 1.5 | 1.6 |
| ஐக்கிய இராச்சியம் | 2.9 | 2.2 | 1.9 | 2.2 |
| யப்பான் | 0.0 | 0.5 | 0.5 | -0.1 |
| தோற்றம்பெற்று வரும் மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரங்கள் | 4.6 | 4.0 | 4.1 | 4.6 |
| அபிவிருத்தி அடைந்துவரும் ஆசியா | 6.8 | 6.6 | 6.4 | 6.3 |
| சீனா | 7.3 | 6.9 | 6.5 | 6.2 |
| இந்தியா | 7.3 | 7.3 | 7.5 | 7.5 |
| **உலக வர்த்தக அளவு** | **3.4** | **2.8** | **3.1** | **3.8** |
| **(பொருட்கள் மற்றும் பணிகள்)** | | | | |
| இறக்குமதிகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 3.4 | 4.3 | 3.4 | 4.1 |
| தோற்றம்பெற்றுவரும் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் | 3.7 | 0.5 | 3.0 | 3.7 |
| ஏற்றுமதிகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 3.4 | 3.4 | 2.5 | 3.5 |
| தோற்றம் பெற்றுவரும் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் | 2.9 | 1.7 | 3.8 | 3.9 |
| **விலை அசைவுகள்** | | | | |
| நுகர்வோர் விலைகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 1.4 | 0.3 | 0.7 | 1.5 |
| தோற்றம் பெற்றுவரும் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் | 5.1 | 4.7 | 4.5 | 4.2 |
| பண்டங்களின் விலைகள் (ஐ.அ.டொ.) | | | | |
| எண்ணெய் | -7.5 | -47.2 | -31.6 | 17.9 |
| எரிபொருள் அல்லாதவை | -4.0 | -17.5 | -9.4 | -0.7 |
| **ஐ.அமெ.டொ. வைப்புக்கள் மீதான ஆறுமாத இலண்டன் வங்கிகளுக்கு இடையிலான வழங்கல் வீதம் (சதவீதம்)** | **0.3** | **0.5** | **0.9** | **1.5** |

(அ) வேறுவிதமாகக் குறிப்பிட்டாலன்றி ஆண்டு சதவீத மாற்றம்.

மூலம்: உலகப் பொருளாதாரத் தோற்றப்பாடு (ஏப்பிறல் 2016), ப.நா.நிதியம்

யூரோ வலயத்தின் செயலாற்றத்தின் மீது எதிர்மறையான தாக்கமொன்றினை ஏற்படுத்தக்கூடும். முக்கிய வட்டி வீதங்களில் காணப்படும் அண்மைய குறைப்புக்கள் மற்றும் ஐரோப்பிய மத்திய வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்ட முறிகளின் விரிவாக்கம் என்பன மோசமடைந்துவரும் பணவீக்கத் தோற்றப்பாடுகளைக் கையாள்வதற்கு உதவக்கூடுமெனினும் பயங்கரவாதத்துடன் இணைந்த தளம்பல்கள் போன்ற அரசியல் நிகழ்வுகள் மற்றும் மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க நாடுகளிலிருந்தான அகதிகளின் படையெடுப்பு போன்றவை இப்பிராந்தியத்திற்கான வளர்ச்சித் தோற்றப்பாட்டினை குறைத்துவிடக்கூடும். தோற்றம்பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களுக்கிடையே முதலீடுகளின் ஒரு தூண்டலிருந்து உள்நாட்டு நுகர்வுகளின் இன்னொரு தூண்டுதலுக்கு சீனாவின் வளர்ச்சி உபாயத்தின் மீள்சமநிலைப்படுத்தலானது பரந்த செயல்விளைவுகளைக் கொண்ட தாக்கங்களை ஏற்படுத்தக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. குறுங்காலத்தில் இம்மாற்றங்களானது வர்த்தகம் மற்றும் நிதியியல் வழிப்படுத்தல்களினூடாக கசியும் தாக்கங்களை உருவாக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, தாழ்ந்த பணவீக்கச் சூழல், கணிசமான வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாய்ச்சல்கள் மற்றும் முன்கூட்டிய வழங்கல்பக்க வழிமுறைகள் என்பன வலுவான உள்நாட்டுக் கேள்வி மற்றும் தனியார் முதலீடுகளின் உத்தேவகம் என்பனவற்றின் துணையுடன் இனிவரும் ஆண்டுகளில் இந்தியா அதன் வளர்ச்சியை வலுப்படுத்துவதற்கு உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**2015 ஆண்டு முழுவதும் பண்ட விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி உலகளாவிய பொருளாதாரத்தின் மீட்சி வேகத்திற்குப் பல சவால்களைத் தோற்றுவித்தது.** பன்னாட்டு பண்ட விலைகளில் ஏற்பட்ட அண்மைய வீழ்ச்சி வலு, உலோகம் மற்றும் கனிப்பொருட்கள் மற்றும் வேளாண்மை உள்ளிட்ட அனைத்துப் பண்டத் துறைகளிலும் காணப்பட்டது. பொதுவாக தேறிய பண்ட ஏற்றுமதிப் பொருளாதாரங்கள் குறைந்த பொருளாதார வளர்ச்சி வாய்ப்புக்கள், நாணயத் தேய்வு, ஏற்றுமதி வருமானத்தில் வீழ்ச்சி மற்றும் நடைமுறைக் கணக்கில் தேய்வு என்பனவற்றை அனுபவித்தன. இப்பொருளாதாரங்கள் இறுக்கமான நாணயக் கொள்கைகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகளில் அதிகரித்த தலையீடுகள் என்பனவற்றின் மூலம் நாணயத் தேய்விற்கும் மூலதன வெளிப்பாய்ச்சலுக்கும் பதிலிறுத்தன. தேறிய பண்ட இறக்குமதியாளர்கள், குறைந்த பண்ட விலைகளிலிருந்து நன்மையடைந்த வேளையில் தேறிய ஏற்றுமதியாளர்களுக்கும் தேறிய இறக்குமதியாளர்களுக்குமான இணைப்புக்களின் காரணமாக விலை வீழ்ச்சிகளிலிருந்து கிடைத்த சேமிப்புக்கள், பணவனுப்பல்கள், சுற்றுலா வருவாய்கள், மூலதனப்பாய்ச்சல்கள் மற்றும் வெளிநாட்டு உதவிகள் என்பனவற்றின் நியதிகளில் தாழ்ந்த உட்பாய்ச்சல்களினால் இல்லாமல் செய்யப்பட்டது.

**உலகளாவிய பொருளாதாரச் சூழலில் ஏற்பட்ட தளம்பல்கள் 2015இல் இலங்கைக்கு பல சவால்களைத் தோற்றுவித்ததுடன் அவை 2016இலும் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது.** உலகளாவிய எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான வீழ்ச்சி, மத்திய கிழக்கு நாடுகளில் காணப்பட்ட மந்தமான வளர்ச்சி என்பன வெளிநாட்டுச் செலாவணியின் முக்கிய மூலங்களான தொழிலாளர் பணவனுப்பல்களிலும் தேயிலை ஏற்றுமதிகளிலும் எதிர்க்கணியமான தாக்கத்தினை ஏற்படுத்தியது. இப்போக்கு பணவனுப்பல்களிலும் இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களின் எதிர்கால வேலை வாய்ப்புக்களிலும் தொடர்ச்சியான தாக்கத்தினை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், 2015இல் குறிப்பிடத்தக்க வளர்ச்சி அவதானிக்கப்பட்ட போதும் இலங்கையின் பாரம்பரிய சுற்றுலா மூலங்களான ஐரோப்பா, ருஷியா மற்றும் சீனா ஆகிய நாடுகளினது பொருளாதாரங்களின் வளர்ச்சிப் போக்கில் காணப்படும் மந்தமான நிலைமை இனிவரும் ஆண்டுகளில் சுற்றுலா வருவாய்களில் வீழ்ச்சியை ஏற்படுத்தக்கூடும். இவ்வாண்டுப் பகுதியில் அனைத்து தோற்றம்பெற்றுவரும்

சந்தைகளிலும் அவதானிக்கப்பட்டவாறு ஐக்கிய அமெரிக்க பெடரல் றிசேர்வின் நாணயக் கொள்கை வழமைப்படுத்தலின் எதிர்பார்ப்புக்களின் காரணமாக உள்நாட்டு அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான முதலீடுகள் குறிப்பிடத்தக்களவிற்கு மீளப்பெறப்பட்டிருந்தன. பெடரல் றிசேர்வினால் 2015 திசெம்பரில் செய்யப்பட்ட வட்டி வீத உயர்வினைத் தொடர்ந்து 2016இல் மேலும் உயர்வுகள் எதிர்பார்க்கப்படுகின்றமையின் காரணமாக இப்போக்கு தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், அரசாங்கத்தினாலும் அரசிற்குச் சொந்தமாக தொழில்முயற்சிகளினாலும் தனியார் துறையினாலும் மாறுபடும் வட்டி வீத அடிப்படையில் பெறப்பட்டிருக்கும் வெளிநாட்டுக் கடன்கள் மீதான உயர்ந்தமட்ட வட்டிக் கொடுப்பனவுகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியிருக்கும். உலகளாவிய பொருளாதார வளர்ச்சியின் பலயீனமான வேகம், புவிசார் அரசியல் அபிவிருத்திகள் போன்ற காரணிகளின் காரணமாக உருவான உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகள் நாட்டிற்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளை நேரடியாகவும் குறிப்பாக சீனா மற்றும் இதன் முக்கிய பண்ட வர்த்தக பங்காளர் நாடுகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் என்பனவற்றிலிருந்தான கசிந்த தாக்கங்களினூடாகவும் பாதித்தது.

## 1.4 நடுத்தரகால பேரண்டப் பொருளாதாரத் தோற்றப்பாடு

**இலங்கையின் பொருளாதாரம் 2016இல் 5.8 சதவீதத்தினால் விரிவடையுமெனவும் ஏறத்தாழ 7 சதவீதம் கொண்ட உயர் வளர்ச்சி உத்வேகத்தினை எய்துவதற்கு நடுத்தர காலத்தில் வலுப்படுத்துமெனவும் எறிவுசெய்யப்பட்டுள்ளது.** இவ்வெதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சிப் பாதை முதலீட்டாளர்களின் மனோபாவத்தை மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், பொருளாதாரத்தின் அனைத்து முக்கிய துறைகளிலும் வளர்ச்சியைத் தூண்டுவதற்கும் முதலீட்டாளர் சிநேகபூர்வ சூழலொன்றினை உருவாக்குவதனூடாக தனியார் துறைப் பங்கேற்பினை அதிகரிப்பதற்குமான அரசாங்கத்தின் புதிய கொள்கை முன்னெடுப்புக்கள் நடுத்தர காலத்தில் பொருளாதாரத்தின் வளர்ச்சி உத்வேகத்திற்கு பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. உலகளாவிய பொருளாதாரத்தில் பங்கேற்பதற்கு சிறிய மற்றும் பாரியளவு தொழில்முயற்சியாண்மையாளர்களை ஊக்குவிப்பதற்கு கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதும் அதன் விளைவாக உலகளாவிய பெறுமதிச்சங்கிலியில் இலங்கை நிலைப்படுத்தப்படுவதும் கைத்தொழில், வேளாண்மை மற்றும் பணிகள் துறை இவ்வளர்ச்சி உத்வேகத்திற்கு பங்களிப்பதற்கு உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி, மேம்பட்ட தொழில்நுட்பங்களை பின்பற்றுதல் மற்றும் அதனைத் தொடர்ந்து பொருளாதாரத் தரவுகளை இலக்கமயப்படுத்தல், உலகத் தொழில்நுட்ப வருவாய்கள் உட்பட புதிய முதலீட்டு முன்முயற்சிகளைக் கவருதல் மற்றும் சமூகப் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை காத்திரமான முறையில் பயன்படுத்தல் என்பனவற்றினூடாக பொருளாதாரத்தின் உள்ளார்ந்த வளர்ச்சியை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. உலகளாவிய பொருளாதாரத்தின் படிப்படியான மீட்சி இலங்கையின் வெளிநாட்டுக் கேள்வியை சாதகமானதொரு மட்டத்தில் பேணுவதற்கு தேவையான தூண்டுதல்களை வழங்கும். எனினும், இம் மேம்படுத்தப்பட்ட வெளிநாட்டுக் கேள்விகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் வருமான மட்டங்களில் ஏற்படும் உயர்வு இலங்கை மேல் மத்திய வருமான அந்தஸ்திற்கு உயர்த்தப்படுவதற்கு ஆதரவளித்து "மத்தியதர வருமானப் பொறியினால்" விளக்கப்பட்டவாறு புதிய சவால்களையும் கொண்டுவரும். பொருத்தமான நாணய மற்றும் இறைக் கொள்கை வழிமுறைகள் முதலீடுகளுக்கான தூண்டுதலளிக்கும் சூழலொன்றினை உருவாக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி, பணவீக்கம் ஏறத்தாழ 4.0 சதவீதம் கொண்ட குறைந்த மட்டத்தில் மதிப்பிடப்பட்டது. இறைக் கொள்கையானது இறைத்திரட்சிச் செயன்முறைகளை வலுப்படுத்தும் நோக்குடன் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

**உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதாரங்களின் சாதகமான அபிவிருத்திகள் அண்மைய கொள்கை முன்னெடுப்புக்களுடன் இணைந்து நடுத்தர காலத்தில் வெளிநாட்டுத் துறைக்கான சாதகமான தோற்றப்பாடொன்றினை தோற்றுவிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.** நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு வணிகப் பொருட்கள் மற்றும் பணிகளின் வர்த்தகத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் பெருமளவு தூண்டுதலாக விளங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பன்னாட்டு எண்ணெய் விலைகளின் தாழ்ந்த மட்டம் மற்றும் உந்து ஊர்திகள் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவற்றின் விளைவாக 2016இல் இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்பட்ட போதும் அதன் பின்னர் இது பன்னாட்டுச் சந்தைகளில் மசகெண்ணெய் விலைகளில் எதிர்பார்க்கப்படுகின்ற அதிகரிப்பு மற்றும் புதிய வளர்ச்சி உத்வேகங்களுக்கு வசதியளிப்பதற்குத் தேவைப்படும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளில் ஏற்படும் வளர்ச்சி என்பவற்றுடன் செலாவணி வீதத்தின் நிர்ணயத்தில் உயர் நெகிழ்ச்சித் தன்மையின் விளைவாக உயர்வடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. 2015இல் வீழ்ச்சியைப் பதிவுசெய்த ஏற்றுமதிகள் உலகளாவிய கேள்வியில் எதிர்பார்க்கப்பட்ட மீட்சி மற்றும் உற்பத்தித்திறனில் ஏற்பட்ட முன்னேற்றங்களினால் தூண்டப்பட்ட வெளிநாட்டுப் போட்டித்தன்மையின் முன்னேற்றம் என்பனவற்றின் காரணமாக நடுத்தர காலத்தில் அவற்றின் மேல் நோக்கிய உத்வேகத்தினை மீண்டும் பெற்றுக்கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, உலகளாவிய

அட்டவணை 1.5

## நடுத்தரகால பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பு (அ)

| குறிகாட்டி | அலகு | 2014 (ஆ) | 2015 (இ) | எறிவுகள் 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|---|---|
| **உண்மைத் துறை** | | | | | | | |
| உண்மை மொ.உ.உ. வளர்ச்சி (ஈ) | % | 4.9 (இ) | 4.8 | 5.8 | 6.3 | 7.0 | 7.0 |
| சந்தை விலைகளில் மொ.உ.உ. (ஈ) | ரூ.பில் | 10,448 (இ) | 11,183 | 12,307 | 13,614 | 15,155 | 16,863 |
| ஆண்டுக்கான சராசரி பணவீக்கம் | % | 3.3 (இ) | 0.9 | 4.0 | 4.0 | 4.0 | 4.0 |
| தலைக்குரிய மொ.உ.உ. (ஈ) | ஐ.அ.டொ. | 3,853 (இ) | 3,924 | 4,008 | 4,298 | 4,704 | 5,181 |
| மொத்த முதலீடு (ஈ) | மொ.உ.உ. இன் % | 32.0 (இ) | 30.1 | 30.3 | 30.9 | 31.0 | 32.0 |
| உள்நாட்டு சேமிப்புகள் (ஈ) | மொ.உ.உ. இன் % | 24.0 (இ) | 22.6 | 23.8 | 24.6 | 25.3 | 26.7 |
| தேசிய சேமிப்புகள் (ஈ) | மொ.உ.உ. இன் % | 29.5 (இ) | 27.8 | 28.1 | 29.1 | 29.5 | 30.6 |
| **வெளிநாட்டுத் துறை** | | | | | | | |
| வர்த்தக இடைவெளி (ஈ) | மொ.உ.உ. இன் % | -10.4 | -10.2 | -9.5 | -9.7 | -9.7 | -9.6 |
| ஏற்றுமதிகள் | ஐ.அ.டொ. மில் | 11,130 | 10,505 | 10,853 | 11,542 | 12,057 | 12,589 |
| இறக்குமதிகள் | ஐ.அ.டொ. மில் | 19,417 | 18,935 | 18,920 | 20,500 | 21,940 | 23,387 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை (ஈ) | மொ.உ.உ.இன் % | -2.5 | -2.4 | -2.1 | -1.8 | -1.5 | -1.4 |
| வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் | இறக்குமதி மாதங்கள் | 5.1 | 4.6 | 4.0 | 4.2 | 4.5 | 4.6 |
| **இறைத் துறை (உ)** | | | | | | | |
| மொத்த அரசிறை மற்றும் கொடைகள் | மொ.உ.உ.இன் % | 11.5 | 13.1 | 12.7 | 13.5 | 13.9 | 14.9 |
| செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் | மொ.உ.உ.இன் % | 17.2 | 20.5 | 18.0 | 18.5 | 18.4 | 18.9 |
| நடைமுறை கணக்கு நிலுவை | மொ.உ.உ.இன் % | -1.2 | -2.2 | -1.4 | -0.7 | 0.0 | 0.6 |
| திரண்ட வரவு செலவு திட்டப் பற்றாக்குறை | மொ.உ.உ.இன் % | -5.7 | -7.4 | -5.4 | -5.0 | -4.5 | -4.0 |
| மத்திய அரச படுகடன் | மொ.உ.உ.இன் % | 70.7 | 76.0 | 74.0 | 70.0 | 66.0 | 63.0 |
| **நாணயத் துறை (ஊ)** | | | | | | | |
| விரிந்த பண வளர்ச்சி ($M_{2b}$) | % | 13.4 | 17.8 | 9.0 | 10.5 | 11.5 | 11.5 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி | % | 8.8 | 25.1 | 12.0 | 11.0 | 11.5 | 12.0 |

(அ) 2016 மாச்சு மாத நடுப்பகுதியில் கிடைக்கத்தக்கதாகவிருந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது
(ஈ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் மொ.உ.உ. மதிப்பீடு 2010 அடியாண்டை அடிப்படையாகக் கொண்டது.
(உ) நடுத்தரக்கால இறைக் குறிகாட்டிகள் நிதிஅமைச்சால் 2016ஆம் ஆண்டிற்காகத் திருத்தப்பட்ட இலக்கங்களை அடிப்படையாகக் கொண்டது
(ஊ) ஆண்டு இறுதிப் பெறுமதிகளின் அடிப்படையிலான ஆண்டுக்காண்டு வளர்ச்சி

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்
நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

பெறுமதிச்சங்கிலியில் இலங்கையை நிலைப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்படும் கொள்கைகளின் பெறுபேறுகள் நனவாகுமிடத்து பணிகளிலுள்ள வர்த்தகத்திலிருந்தான வருவாய்கள் படிப்படியான முன்னேற்றங்களைப் பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பா போன்ற பாரம்பரிய பிரதேசங்களில் காணப்படும் பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் நிச்சயமற்றதன்மைகள், உள்நாட்டுத் தொழில்வாய்ப்புக்களின் அதிகரித்த கிடைப்பனவு மற்றும் ஓரளவு தேர்ச்சிபெற்ற மற்றும் தேர்ச்சிபெறாத வகைகளின் புலம்பெயர்தலை ஊக்கமிழக்கச் செய்வதற்கு நடைமுறைப்படுத்தப்படும் கொள்கை வழிமுறைகள் என்பனவற்றின் விளைவாக வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பிற்கான புலம்பெயர்விலான வீழ்ச்சியின் காரணமாக தொழிலாளர் பணவனுப்பல்கள் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. திரண்ட சென்மதி நிலுவை நிலைமையும் நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்களில் எதிர்பார்க்கப்படும் உயர்வின் காரணமாக நடுத்தர காலத்தில் மேம்பாடடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. முதலீட்டாளர்களுக்கு தீங்கற்ற சுற்றாடலொன்றினை உருவாக்குவதற்காக முதலீட்டுச் சபையினால் நிறுவப்பட்ட "ஒரே கூரையின் கீழான கடைத்தொகுதி" உட்பட அரசாங்கத்தினால் பின்பற்றப்பட்ட பல கொள்கை வழிமுறைகள், வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் கணிசமான மட்டமொன்றினை கவருமென எதிர்பார்க்கப்படுகிறது. சென்மதி நிலுவையில் எதிர்பார்க்கப்படுகின்ற முன்னேற்றங்கள் வெளிநாட்டு ஒதுக்குகளை வலுப்படுத்தி வெளிப்புற அதிர்வுகளுக்கு நாடு தாக்குப்பிடிக்கும் விதத்தில் அதன் தன்மையினை முன்னேற்றுவதற்கு இயலச்செய்யும்.

**அரசாங்கத்தின் நடுத்தர கால இறை உபாயம் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை உறுதியானதொரு மட்டத்தில் பேணுவதன் மூலமும் மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துகின்ற பரந்த அடிப்படை அபிவிருத்தி குறிக்கோள்களைத் தூண்டுவதன் மூலமும் இறைத் திரட்சிப்படுத்தல் செயன்முறையினை வலுப்படுத்துவதன் மீது கவனத்தினைச் செலுத்தும்.** அரசிறையை உயர்த்துவதற்கும் செலவினத்தைச் சிக்கனப்படுத்துவதற்கும் அரசினால் முன்மொழியப்பட்ட கொள்கை வழிமுறைகள் நடுத்தர காலத்தில் இறைத்திரட்சிச் செயன்முறைக்கு வசதியளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 2015 நவெம்பரில் அரசினால் அறிவிக்கப்பட்ட மற்றும் திருத்தியமைக்கப்பட்ட 2003ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க இறை முகாமைத்துவ (பொறுப்பாண்மை) சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை 2020 அளவில்

மொ.உ.உற்பத்தியின் 3.5 சதவீதத்திற்குக் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் மொ.உ.உற்பத்திக்கான படுகடன் விகிதம் இதே காலப்பகுதியில் 60.0 சதவீதத்திற்குக் குறைக்கப்படும். அரசிறைப் பக்கத்தில் இலகுபடுத்தப்பட்ட வரி அமைப்பு, விரிவாக்கப்பட்ட வரித்தளம், அதிகரிக்கப்பட்ட வரி இணங்குவிப்புக்கள் மற்றும் வரி நிருவாகத்தில் காணப்பட்ட மேம்பாடுகள் என்பன அரசிறைத் திரட்சிகளை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை உள்நாட்டரசிறை திணைக்களத்தில் அரசிறை நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமையினை நடைமுறைப்படுத்தல், இலங்கைச் சுங்கத்தில் அனைத்து நடவடிக்கைகயையும் மேற்கொள்வதற்காக “தனியொரு மையம்” மற்றும் பொதுத் திறைசேரியில் ஒருங்கிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை என்பனவற்றின் நடைமுறைப்படுத்தல் அரசிறை நிருவாகச் செயன்முறைகளில் கணிசமான முன்னேற்றங்களைத் தோற்றுவிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது இடம்பெற்றுவரும் இறைத்திரட்சிச் செயன்முறைகளுக்கு உதவும் விதத்தில் நிதி அமைச்சின் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தில் வரவு செலவுத்திட்ட நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்புப் பிரிவொன்றினை நிறுவுதல் உட்பட குறிப்பிட்ட வழிமுறைகள், அரச செலவினங்களை சிக்கனப்படுத்துவதற்காகவும் உறுதியானதொரு மட்டத்தில் அரச முதலீடுகளை பேணுவதற்காகவும் அறிமுகப்படுத்தப்பட்டன. செலவினப் பக்கத்தில், அரசின் செலவினத்தினை சிக்கனப்படுத்தல் மற்றும் உற்பத்தித்திறனற்ற செலவினங்களைக் கட்டுப்படுத்தல் என்பன தொடர்பில் காணப்பட்ட அரசின் கடப்பாடுகள் நடுத்தர காலத்தில் மீண்டெழும் செலவினத்தினை மொ.உ.உற்பத்தியின் 15.0 சதவீதத்திற்குக் கீழே கட்டுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி, அரசின் சேமிப்பு நிலைமைய பிரதிபலிக்கும் நடைமுறை கணக்கு நிலுவை நடுத்தர காலத்தில் வலுவானதொரு பாதையில் படிப்படியாகக் மேம்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**நடுத்தர காலத்தில் நாணயக் கொள்கையின் நடத்தை நடு ஒற்றை இலக்க மட்டத்தில் பணவீக்கத்தைப் பேணும் வேளையில் பொருளாதாரம் அதன் உள்ளார்ந்த வளத்தினை பெற்றுக்கொள்ளும் விதத்தில் வசதியளிப்பதிலும் கவனம் செலுத்தியது.** இதனைத் தொடரும் விதத்தில், விலை உறுதிப்பாடு மற்றும் பொருளாதார உறுதிப்பாடு இரண்டின் மீதும் கவனத்தினைச் செலுத்துகின்ற நெகிழ்ச்சித்தன்மை கொண்ட பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பொன்றுடன் இணைந்த விதத்தில் மத்திய வங்கி உயர்த்தப்பட்ட நாணயக் கொள்கைக் கட்டமைப்பொன்றிற்குள் அதன் நாணயக் கொள்கையை நடத்தும். சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் உயர்த்தப்பட்ட இந்நாணயக் கொள்கைக் கட்டமைப்பின் கீழ் தொழிற்பாட்டு இலக்காக இருக்குமென்பதுடன் இலக்கிடப்பட்ட மட்டங்களுக்குள் பணவீக்கத்தினைப் பேணுவதற்கான விரும்பத்தக்க பாதையுடன் சேர்த்து சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணச் சந்தை வீதத்தை வழிநடத்துவதற்காக சந்தையை அடிப்படையாகக் கொண்ட சாதனங்களின் மீது குறிப்பாக, கொள்கை வட்டி வீதங்கள் மற்றும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மீது பெருமளவு வலியுறுத்தல்கள் மேற்கொள்ளப்படும். விரிந்த பணநிரம்பல் நாணயக் கொள்கையை வழிப்படுத்துவதற்கான முக்கிய குறியீட்டு இடைநிலை மாறியாக தொடர்ந்துமிருக்கும். இதன்படி, விரிந்த பணநிரம்பலில் ஏற்படும் வளர்ச்சியை கவனத்திலெடுக்கும் மத்திய வங்கியின் வருடாந்த நாணய நிகழ்ச்சித்திட்டம் பெயரளவு மொ.உ.உற்பத்தியின் எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சியுடன் இசைந்து செல்லும் விதத்தில் தயாரிக்கப்படும். அதேவேளை, 2015இல் அவதானிக்கப்பட்ட கொடுகடன் மற்றும் நாணயக் கூட்டுக்களின் உத்வேகம் மிக்க வளர்ச்சி பொருத்தமான கொள்கை வழிமுறைகளுக்கு ஆதரவளிக்கும் விதத்தில் நடுத்தர காலத்தில் மிதமடையுமென எதிர்பார்க்கப்படுவதுடன் இதன் மூலம் பணவீக்கம் எதிர்பார்க்கப்பட்ட நடு ஒற்றை இலக்க மட்டத்தில் தொடர்ந்துமிருப்பது உறுதிப்படுத்தப்படும். பணவீக்கக் குறிக்கோள்களை எய்துவதன் மீது கவனம் செலுத்தப்படுகின்ற வேளையில் மத்திய வங்கி உயர்ந்த வளர்ச்சி உத்வேகத்தினை நோக்கி பொருளாதாரம் மாற்றடைவதற்கு வசதியளிக்கும் விதத்தில் பொருளாதாரத்தில் போதுமான கொடுகடன் கிடைப்பதனை உறுதிப்படுத்தும். வங்கித்தொழில் துறையினால் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட கொடுகடன் இறைத்திரட்சிச் செயன்முறையினை வலுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சியுடன் இசைந்துசெல்லும் விதத்தில் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம், கூடியளவு உற்பத்தித்திறன் மிக்க தனியார் துறை முதலீடுகளுக்காக மேலதிக மூலவளங்கள் விடுவிக்கப்படுகின்றன. சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கிற்கான எதிர்பார்க்கப்பட்ட உயர்ந்த உட்பாய்ச்சல்கள் பெறப்பட்டமையுடன் நடுத்தர காலத்தில் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களும் மேம்பாடடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## 1.5 பிரச்சனைகளும் கொள்கைகளும்

**முக்கியமான சீர்திருத்தங்களினூடாக இறைத்துறை செயலாற்றத்தை மேம்படுத்துவதானது எதிர்வு கூறப்பட்ட நடுத்தரகால இறைத்திரட்சிப் பாதை, பொதுப்படுகடனைக் குறைத்தல், பிரகாசமான பேரண்டப் பொருளாதாரத் தோற்றப்பாட்டிற்காக வாய்ப்புக்களைப் பலப்படுத்தல் என்பவற்றை அடைவதற்கு பிரதானமானதொன்றாகும்.** இது, அரச நிதியியல் முகாமைத்துவம் மேம்பாடடைந்த அதேவேளையில் அரச அரசிறையை உயர்த்துதல், அரச செலவினத்தின் முகாமைத்துவத்தினை மேம்படுத்தல் மற்றும்

ஏனைய சீர்திருத்தங்களைக் குறிப்பாக அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளில் நடைமுறைப்படுத்தல் என்பனவற்றினை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். இறைத்திரட்சியை நோக்கி தொடர்ச்சியாக பதவிக்கு வந்த அரசாங்கங்கள் முயற்சிகளை மேற்கொண்ட போதும், அரச அரசிறை, குறிப்பாக மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வரி அரசிறை, கடந்த பல ஆண்டுகளாக வீழ்ச்சியடைந்திருந்த போதும் ஒரே தடவையிலான வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டமை மற்றும் உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் மீதான உற்பத்தித் தீர்வைகளிலிருந்தான அதிகரித்த அரசிறை என்பனவற்றின் முக்கிய காரணமாக 2015இல் அதிகரித்தது. இதற்கு வரி ஏய்ப்பு மற்றும் தவிர்ப்பு, மிகையான வரிச் சலுகைகள் மற்றும் விலக்கல்கள், அவ்வப்போது காலத்திற்குக் காலம் எடுக்கப்படும் அரசிறை வழிமுறைகள் மற்றும் அரசிறை நிருவாகத்தில் காணப்பட்ட பலயீனங்கள் என்பனவே பெருமளவிற்குக் காரணங்களாக அமைந்தன. ஆகவே, மொ.உ.உற்பத்தியின் விகிதமாக அரசிறையின் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கை வலுவானதொரு அடிப்படையில் மாற்றியமைக்கும் பொருட்டும் வரி முறைமையில் நெகிழ்ச்சித் தன்மையினை மேம்படுத்தும் பொருட்டும் நாட்டின் வரி அமைப்பிற்கு மேலும் ஒழுங்குமுறைப்படுத்தல்கள் தேவைப்படுகின்றன. இதனை அடையும் விதத்தில் அரசாங்கம் வரி அமைப்பினை இலகுபடுத்தல், வரித் தளத்தினை விரிவாக்குதல், வரி இணங்குவிப்புக்களை அதிகரித்தல், வரி விலக்கல்கள் மற்றும் சலுகைகளைக் குறைத்தல் மற்றும் வரி முறைமைகளை நியாயமாக்குதல் என்பனவற்றின் மீது அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டிய அதேவேளையில் வரி நிருவாகத்தினையும் வலுப்படுத்துதல் வேண்டும். குறிப்பாக, நேரடி மற்றும் மறைமுக வரிகளின் விகிதத்தினை மேம்படுத்துவதனை அரசாங்கக் கொள்கை நோக்கமாகக் கொண்டிருப்பதனால் வருமான வரிச் சேகரிப்புக்களை மேலும் வலுப்படுத்துதல் அவசியமாகும். அதேநேரம் வரிச் சட்டங்களை மீளவரையும் தற்போதைய இடம்பெற்றுவரும் செயல்முறைகளுக்கு உதவும் விதத்தில் சட்டக் கட்டமைப்பிற்குத் தேவையான மேம்பாடுகளைக் கொண்டு வருவதற்கு அவற்றின் பலவீனமான தன்மைகளையும் அதேபோன்று சிக்கலான தன்மைகளையும் அடையாளம் காண்பதற்கு சட்டங்களின் பல்வேறு அம்சங்களையும் திறனாய்வுடன் மதிப்பீடு செய்ய வேண்டியது அவசியமாகும். இறக்குமதியுடன் தொடர்பான வரிகளின் மீது ஒப்பீட்டு ரீதியில் அதிகளவில் தங்கியிருப்பது வெளிநாட்டுத் துறையின் செயலாற்றத்திற்கு நாட்டின் இறை துறை முறைமையை பாதிக்கச் செய்யுமாகையால் நாட்டின் வரிக் கொள்கையை வடிவமைக்கும் இம்முயற்சிகளின் போது இவற்றைக் கவனத்திலெடுப்பது அவசியமாகும். உள்நாட்டரசிறைத் திணைக்களத்தின் அரசிறை நிருவாகத்தின் முகாமைத்துவ தகவல் முறைமை உட்பட தன்னியக்க வரி முறைமையொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிகளை எடுத்தமை பாராட்டத்தக்கதாக இருக்கின்ற அதேவேளையில் கம்பனி மற்றும் கம்பனியல்லாத் துறைகளின் வரி இணங்குவிப்புக்களை மேம்படுத்துவதற்கு மேலும் முயற்சிகள் தேவைப்படுகின்றன. வரி முறைமைகளை இலகுபடுத்தலும் அதேபோன்று பிணக்குகளுக்கு தீர்வுகாணும் பொறிமுறைகளை விரைவுபடுத்தலும், அரசிறை உருவாக்கத்தின் மீது சாதகமான தாக்கமொன்றினை ஏற்படுத்துவதற்குப் புறம்பாக இலங்கையின் வியாபாரத்தைச் செய்யுங்கள் தரப்படுத்தலையும் மேம்படுத்தும். செலவினப் பக்கத்தில், செலவிடல் நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்துவதனூடாக உற்பத்தியாக்கமற்ற செலவினங்களைக் கட்டுப்படுத்துவது அரசாங்கத்தின் தேவையாகவுள்ள அதேவேளையில் தேவையுள்ள மக்களுக்கு அவசியமான ஆதரவுகளை வழங்குவதற்காக ஏற்கனவேயுள்ள உதவுதொகைத் திட்டங்களின் வலுவான தன்மையினை மதிப்பிடுதல் வேண்டும். அளவுக்கதிகமான மீண்டெழும் செலவினம் அரச முதலீடுகளுக்கான மூலவளங்களின் கிடைப்பனவினை மட்டுப்படுத்தி அதன் மூலம் நாட்டின் வளர்ச்சி வாய்ப்புக்களை பாதிக்கின்றது. மேலும், அரசின் உயர்ந்த படுகடன் சூழ்நிலையொன்றில் நிதியியல் மூலவளங்களின் பெரும்பங்கினை படுகடன் மீள்கொடுப்பனவுகளுக்கும் வட்டிக் கொடுப்பனவுகளுக்கும் ஒதுக்க வேண்டியிருக்குமாகையால் நாட்டின் இறை அளவிலும் குறிப்பிடத்தக்களவு குறைப்பு ஏற்படுகிறது. உயர்ந்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைகள் தனியார் துறை முதலீடுகளை வெளித் தள்ளுகின்ற அதேவேளையில் விரிவாக்கப்பட்ட நிதியீட்டமானது நாணய முகாமைத்துவத்திற்கும் நாணய மாற்ற வீத உறுதிப்பாட்டை பேணுவதற்கும் சவால்களை ஏற்படுத்தமுடியும். ஆகவே, இறைத்திரட்சி முயற்சிகளை வலுப்படுத்துவதற்கு அவசரமான படிமுறைகள் தேவைப்படுகின்றன.

**அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளில் சீர்திருத்தங்கள் இடம்பெறாமலிருப்பது சமனான முக்கியத்துவம் வாய்ந்ததொரு பிரச்சனையாக இருப்பதுடன், இதனை கவனமான சிந்தனை உபாயமொன்றின் அடிப்படையில் மேற்கொள்வது வேண்டுமென்பதுடன் இதனை நாட்டின் சமூகப் பொருளாதார மற்றும் அரசியல் பின்னணிகளில் நடைமுறைப்படுத்துகின்ற வேளையில் அத்தகைய சீர்திருத்தங்கள் இல்லாமையினால் நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலம் வரையிலும் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றி ஆர்வலர்களுக்கும் பொதுமக்களுக்கும் சிக்கனம் மற்றும் சாத்தியமான தன்மைகள் பற்றி போதுமான விளக்கங்களையும் அறிவூட்டல்களையும் வழங்குவது அவசியமானதொன்றாகும்.** பல ஆண்டுகளாக அநேகமான அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் செலவினை பிரதிபலிக்காத விலையிடல் பொறிமுறைகள் பலவீனமான நிதியியல் முகாமைத்துவம், சிறந்த ஆளுகையில்லாமை,

மனிதவள முகாமைத்துவத்தின் பலவீனங்கள், உள்ளகக் கட்டுப்பாடுகள் போதுமானளவில் இல்லாமை, அமைப்பியல் குறைபாடுகள் மற்றும் அரசியல் தலையீடுகள் என்பனவற்றை உள்ளடக்கிய பல்வேறு காரணிகளின் காரணமாக தொடர்ந்தும் இழப்புக்களை ஏற்படுத்தி வருகின்றன. அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் ஒன்றுசேர்ந்த இழப்புக்களின் குறிப்பிடத்தக்க தொகைகள் நாட்டின் பொருளாதார சுபீட்சத்திற்கு பெரும் சுமையாக தொடர்ந்தும் இருப்பதனால் குறிப்பாக, அவை கடுமையான கரிசனைக்குரியனவையாகக் காணப்படுகின்றன. இவ்விழப்புக்களையும் இவ்விழப்பிற்கான காரணங்களையும் சரியான முறையில் அடையாளம் காணுதல், தொடர்பான நிறுவனங்களை மீளெழுச்சிப்படுத்துவதற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள தேர்வுகளை கவனமாக மீளாய்வு செய்தல், செலவினை பிரதிபலிக்கின்ற விலையிடல் உபாயங்கள் உட்பட தேவைகளை அடையாளம் காணுதல், முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தல் நிபுணத்துவம், பொருத்தமான கட்டுப்பாடுகள், மீள்மூலதனமயமாக்கல் போன்ற நடைமுறைக்கேற்ற உபாயங்களைப் பின்பற்றுவது அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நிதியியல் ஆற்றலினை மேம்படுத்துவதற்கு மிக முக்கியமானதாகும்.

**வேறுபட்ட அதிர்வுகளுக்கு எதிராக வெளிநாட்டுத் துறையில் மீளெழுச்சியைப் பேணுவதற்கு வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் வளர்ச்சியைத் தூண்டும் நீண்ட கால நிதியியல் பாய்ச்சல்கள் போன்ற படுகடனை உருவாக்காத வெளிநாட்டு முதலீட்டு பாய்ச்சல்களை கவருவதிலுள்ள சவால்களை வெற்றிபெறுவதற்கு ஒருமுகப்படுத்தப்பட்ட முயற்சி தேவைப்படுகிறது.** அண்மைய ஆண்டுகளில் இதில் முன்னேற்றங்கள் காணப்பட்ட போதும் இலங்கை தொடர்ச்சியாக வெளிநாட்டு நாணயக் கணக்கில் பற்றாக்குறையினைப் பேணி வருவதனால் படுகடனை உருவாக்குகின்ற நிதியியல் பாய்ச்சல்களை அல்லது பற்றாக்குறையினை நிதியிடுவதற்கு வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளைப் பயன்படுத்துவதை அவசியமாக்கியிருக்கிறது. இலங்கை வயது முதிர்ந்தோரின் தங்கியிருப்பு விகிதம் உயர்வடைந்து வருகின்ற குடித்தொகை மாற்றமொன்றிற்கு இலங்கை உட்பட்டு வருவதனால் அரச துறை சேமிப்புக்கள் மீது எதிர்க்கணியமான தாக்கமொன்று ஏற்படும். மேலும் தற்போதுள்ள ஊழியப்படையினுடைய உற்பத்தித்திறன் மற்றும் கம்பனி சேமிப்புக்கள் என்பவை அதிகரிக்கப்பட்டாலொழிய தனியார் துறை சேமிப்புக்கள் கட்டுப்படுத்தப்பட்ட மட்டத்தில் காணப்படக் கூடும். எனவே, நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையை ஒத்ததான சேமிப்பு முதலீட்டு இடைவெளி மேலும் மோசமடைவதுடன் இடைவெளியினை வெளிநாட்டு மூலங்களினூடாக நிதியிட வேண்டியிருக்கும். உலகம் முழுவதிலுமுள்ள பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் அபிவிருத்திகள் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினை நிதியிடுவதற்கு தொழிலாளர் பணவனுப்பல்களிலும் வெளிநாட்டுக் கடன்பாடுகளிலும் முழுமையாகத் தங்கியிருக்க முடியாதென்பதனை நிரூபித்திருக்கிறது. ஏனெனில் மூலநாடுகளிலுள்ள பொருளாதார மற்றும் அரசியல் தளம்பல்களுக்கு இவை சுலபமாக பாதிக்கக்கூடியனவாக இருப்பதுடன் தாழ்ந்த எண்ணெய் விலைகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் அமைதியின்மை ஆகிய சூழ்நிலைகளில் 2015இல் பணவனுப்பல் பாய்ச்சலில் காணப்பட்ட கடுமையான மிதமான தன்மைகளிலும் இவ்வுண்மை எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. இலங்கை பல்புடை முகவர்களிடமிருந்து சலுகை நியதிகளில் கடன்களைப் பெறுவதில் வெற்றி பெற்றிருக்கின்ற போதும் இலங்கை உயர் நடுத்தர வருமான நாடொன்றாக மாற்றமடைந்து வருவதன் விளைவாக சலுகை ரீதியாக கிடைக்கும் கடன்களானது வீழ்ச்சியடையும். மேலும், முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் தற்பொழுது இடம்பெற்று வருகின்ற நாணயக் கொள்கை வழமைப்படுத்தல் தேறிய கடன்பாடுகளின் செலவினை அதிகரிக்கும். ஆகவே, வினைத்திறன் மிக்க வியாபார வசதிப்படுத்தல்கள், வெளிநாடுகளிலுள்ள முக்கிய உள்ளார்ந்த வளம் மிக்க சந்தைகளில் முதலீட்டு ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பான தகவல்களை சரியான முறையில் கிடைக்கச் செய்தல் என்பனவற்றினூடாக இனிவரும் ஆண்டு காலப்பகுதிகளில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளையும் ஏனைய நீண்ட கால தனியார் துறைப் பாய்ச்சல்களையும் கவருவதற்குரிய கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும். செலாவணிக் கட்டுப்பாட்டு தளர்த்தல், பேரண்டப் பொருளாதாரச் சூழலைப் பலப்படுத்தல் அதேபோன்று நாட்டின் அதிகரித்த அரசியல் உறுதிப்பாடு முதலீட்டுச் சூழலை மேலும் கவர்ச்சிப்படுத்துவதுடன் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதற்கும் நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகும். வியாபாரத்தைச் செய்யும் தரமிடலை முன்னேற்றுவதற்குத் தேவையான சீர்திருத்தங்களை நிறைவேற்றுவது, முதலீட்டுச் சூழலை உத்வேகப்படுத்துவதற்கும் பொருளாதாரத்தின் உள்ளார்ந்த வளத்தினை முழுமையாகப் பெற்றுக்கொள்வதற்கும் அவசியமானதாகும். உயர்ந்த வளர்ச்சி மற்றும் தாழ்ந்ததும் உறுதியானதுமான பணவீக்கம் போன்ற ஆரோக்கியமான பொருளாதாரக் குறிகாட்டிகளுக்குப் புறம்பாக, சிறந்த ஆளுகை மற்றும் நிலச் சொத்துடமை உட்பட சொத்துக்களின் உரிமைகளினது உத்தரவாதம் போன்றவையும் உள்நாட்டுப் பொருளாதாரத்தின் மீதான முதலீட்டாளர் நம்பிக்கையை உயர்த்தும். மேலும், சொத்துரிமைகள் மீதான சட்டவாக்கங்களிலுள்ள நிச்சயமற்ற தன்மைகள் போன்ற

## சிறப்புக்குறிப்பு 02

## இலங்கையின் வறுமை, வருமான ஏற்றத்தாழ்வு, குழைந்தைகளின் குறைந்த ஊட்டச்சத்தின் சமூகப் பொருளாதாரச் சவால்கள்

சுதந்திரமடைந்ததிலிருந்து, இன்று வரை வேளாண்மைப் பொருளாதாரத்தால் அதிகாரம் செலுத்தப்பட்ட குறைந்த வருமானத்திலிருந்து 2015 கூடியளவுக்கு பன்முகப்படுத்தப்பட்ட, பணிகள் சார்ந்த குறைந்த நடுத்தர வருமானமுள்ள பொருளாதாரமாக இலங்கை படிப்படியாக வளர்ச்சியடைந்துள்ளது. இப் பொருளாதார உருமாற்றம் கல்வி மற்றும் நலம் போன்ற குறிப்பாக சமூக அபிவிருத்தித் துறைகளிலான பல குறிப்பிடத்தக்க அபிவிருத்திகளால் பூர்த்தி செய்யப்பட்டது. அபிவிருத்திக் கொள்கை வட்டத்தில் இலங்கை வெற்றிகரமான வரலாறைக் கொண்டிருந்த போதிலும், தற்போது இடம்பெற்றுவரும் சமூக பொருளாதார உருமாற்றம் குறிப்பாக வறுமை, வருமான ஏற்றத்தாழ்வு மற்றும் ஊட்டச்சத்து குறைந்த பிள்ளைகள் ஆகிய துறைகளில் அத்தகைய அபிவிருத்திகளின் போசாக்கு தொடர்பான கரிசனைகளை அதிகரிக்கிறது. பொருளாதாரத்தின் அனைத்து பகுதிகளிலும் பல்வேறான சவால்கள் காணப்படுகையில், வறுமை, வருமான ஏற்றத்தாழ்வு மற்றும் பிள்ளைகளின் குறைந்த ஊட்டச்சத்துப் பிரச்சினைகள் பொருளாதார வளர்ச்சியை கடுமையாகப் பலவீனப்படுத்தி சமூக அமைதியின்மையை ஏற்றுபடுத்துமென்பதை ஆய்வுகள் காட்டுகின்றன. இம்மூன்று குறிப்பிட்ட துறைகளில் சவால்களைத் தீர்ப்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை அதிகரித்தலை மேம்படுத்தல் மற்றும் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்கு அத்தியாவசியமானதாகும்.

### வறுமை

> *"எனது வீட்டுக்கு வெளியே நீங்கள் வறுமையைச் சந்தித்துள்ளதால் வறுமை என்றால் என்ன என்று என்னிடம் கேட்கவேண்டாம், வீட்டைப் பார்த்து ஓட்டைகளின் எண்ணிக்கையை எண்ணுங்கள். எனது பாத்திரங்களையும் நான் அணிந்திருக்கும் உடைகளையும் பாருங்கள். எல்லாவற்றையும் பார்த்து நீங்கள் கண்டதை எழுதுங்கள் - நீங்கள் கண்டது வறுமை"*
>
> - ஒரு வறிய மனிதன், கென்யா 1997[1] -

குடும்ப அலகுகள் அல்லது தனிப்பட்டவர்கள் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமான மூலவளங்களையோ அல்லது ஆற்றல்களையோ கொண்டிருக்கின்றார்களா என வறுமை பொதுவாக வரைவிலக்கம் செய்யப்படுகிறது. வறுமையுடன் இணைந்த இழப்பின் பல்வேறுபட்ட தன்மை மற்றும் அபரிமிதத்துக்கு மத்தியிலும் வறுமை இருக்கிறது என்ற கருத்து உலக அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலில் முக்கிய ஸ்தானத்தில் வறுமை ஒழிப்பை தொடர்ச்சியாக வைத்திருந்தது./

இலங்கை வறுமையைக் குறைப்பதில் குறிப்பிடத்தக்க சுவடுகளைப் பதித்துள்ளமை 2015இல் கால எல்லைக்கு ஏழு ஆண்டுகள் முன்பாகவே தேசிய மட்டத்தில் வறுமையை அரைவாசியாக்கும் புத்தாயிரம் அபிவிருத்தி இயக்குகளில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு நாட்டை இயலச் செய்தது. பொதுவாகப் பயன்படுத்தப்பட்ட அளவீட்டின் கீழ், மொத்த குடித்தொகையின் சதவீதமாக வறுமைக் கோட்டுக்குக்[2] கீழ் வாழும் நபர்களின் மொத்த எண்ணிக்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைக்குரிய வறுமை விகிதம் 1995/96இன் 28.8 சதவீதம் 2009/10இன் 8.9 சதவீதத்திலிருந்தும் 2012/13இல் 6.7 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது. வறுமை எண்ணிக்கை விகிதத்தின் நியதிகளில் 2009/10இன் 1.8 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2012/13இல் கிட்டத்தட்ட 1.3 மில்லியன் ஆட்கள் வறுமையில் உள்ளனர். ஒப்பீட்டு நோக்கங்களுக்காக நாளொன்றுக்கு ஆளொருவருக்கு ஐ.அ.டொலர் 1.25 (2005 கொள்வனவு வலுச் சமநிலையில்) கொண்ட கடுமையான வறுமைக் கோட்டைப் பயன்படுத்தும் உலக வங்கியின் அறிக்கையின்படி இலங்கையின் வறுமை பன்னாட்டு நியமங்களை[3] விட குறைவானதாகும். இவ் வரைவிலக்கணத்தின் கீழ், இலங்கையில் கடுமையான வறுமை 2002இன் 13 சதவீதத்திலிருந்து 2012/13இல் 3 சதவீதத்துக்கு குறைவாக வீழ்ச்சியடைந்தது.

வறுமையிலான இக் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி, குறிப்பாக வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடித்தொகையின் பாதிப்புள்ளாகும் பிரிவினரின் வருமான மட்டங்களை உயர்த்துவதற்கு அடுத்தடுத்து வந்து அரசுகளால் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களின் வெளிப்பாடாகும். இவை, நேரடியான நிதியியல் உதவி, வாழ்வாதார உதவி நிகழ்ச்சித்திட்டங்கள், கிராமிய மற்றும் சமுதாயத்தை மையப்படுத்திய பொருளாதாரச் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்கான அதிகாரமளிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள், குறைந்த வருமானமுள்ள மக்களை மையப்படுத்தி பொதுவாக நெறிப்படுத்தப்பட்ட உதவுதொகை நிகழ்ச்சித்திட்டங்கள், உணவு உதவி நிகழ்ச்சித்திட்டங்கள், பொது மக்கள் நலன்புரி செலவின நிகழ்ச்சித்திட்டங்கள், உணவு உதவி நிகழ்ச்சித்திட்டங்கள், பொதுமக்கள் நலன்புரி செலவின நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற இலவசக்கல்வி மற்றும் நலத்தை உள்ளடக்குகின்றன.

கடந்த ஆண்டுகளின் வறுமையைப் படிப்படியாக குறைக்கக்கூடியதாக இருப்பதுடன் 2000 - 2015 இற்கிடையில் வறுமையை அரைவாசியாகக் குறைக்கும் புத்தாயிரம் அபிவிருத்தி இலக்குகளை அடைந்ததை தொடர்ந்து, 2030 அளவில் பூர்த்திசெய்ய எதிர்பார்க்கப்படும் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகளின் கீழ் எல்லா இடத்திலும் அனைவரது வறுமையை ஒழிப்பதிலான புதிய சவாலுக்கு இலங்கை முகம் கொடுக்கிறது. இலங்கையின் பின்னணியில், குறிப்பாக பின்தங்கிய மாவட்டங்களில் கடுமையான வறுமைக்குள்ளானோரை அடையும் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தேவையை இது வெளிப்படுத்துகிறது.

இலங்கையின் 2012இன் குடித்தொகை மற்றும் வீடமைப்பின் தொகை மதிப்பீட்டிலிருந்தான தரவின் அடிப்படையில் தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட வறுமை வழிகாட்டி மற்றும் உலக வங்கிக் குழுமத்தின் வறுமை தொடர்பான

1. "Can Anyone Hear Us? Voices From 47 Countries", Deepa Narayan with Raj Patel, Kai Schafft, Anne Rademacher and Sarah Koch-Schulte, Poverty Group, PREM, World Bank, December 1999, p.26.

2. இலங்கையின் அலுவல்சார் தேசிய வறுமைக்கோடானது 2005இன் கொள்வனவு வலு சமநிலை நியதிகளில் தனிநபரொருவரின் தலைக்குரிய உண்மை வருமானமானது மாதமொன்றிற்கு அன்னளவாக ஐ.அ.டொலர் 1.50இற்கு சமமான ரூ.3,624இனை விட குறைவாகக் காணப்படுமாயின் அவன் அல்லது அவள் 2012/13 குடும்ப அலகு வருமானம் மற்றும் செலவின அளவீட்டின்படி வறுமையானவர் என வரைவிலக்கணப்படுத்தப்படுவார். மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் குடும்ப அலகு வருமானம் மற்றும் செலவின அளவீட்டிலிருந்தான தகவலினைப் பயன்படுத்தி அடிப்படைத் தேவை செலவு முறையிலிருந்து வறுமையானது கணிப்பிடப்படுகிறது. பிந்திய குடும்ப அலகு வருமானம் மற்றும் செலவின அளவீடானது 2012/13 இற்கு உரியது.

3. Poverty and Welfare in Sri Lanka: Recent Progress and Remaining Challenges, World Bank, 2016, p.9.

**அட்டவணை சி.கு - 2.1 — மாவட்ட ரீதியில் தலைக்குரிய வறுமை விகிதம் 2009/10 மற்றும் 2012/13**

| மாவட்டம் | அளவீட்டுக் காலம் 2009/10* | 2012/13 |
|---|---|---|
| கொழும்பு | 3.6 | 1.4 |
| கம்பகா | 3.9 | 2.1 |
| களுத்துறை | 6.0 | 3.1 |
| கண்டி | 10.3 | 6.2 |
| மாத்தளை | 11.5 | 7.8 |
| நுவரேலியா | 7.6 | 6.6 |
| காலி | 10.3 | 9.9 |
| மாத்தறை | 11.2 | 7.1 |
| அம்பாந்தோட்டை | 6.9 | 4.9 |
| யாழ்ப்பாணம் | 16.1 | 8.3 |
| மன்னார் | - | 20.1 |
| வவுனியா | 2.3 | 3.4 |
| முல்லைத்தீவு | - | 28.8 |
| கிளிநொச்சி | - | 12.7 |
| மட்டக்களப்பு | 20.3 | 19.4 |
| அம்பாறை | 11.8 | 5.4 |
| திருகோணமலை | 11.7 | 9.0 |
| குருநாகல் | 11.7 | 6.5 |
| புத்தளம் | 10.5 | 5.1 |
| அநுராதபுரம் | 5.7 | 7.6 |
| பொலநறுவை | 5.8 | 6.7 |
| பதுளை | 13.3 | 12.3 |
| மொனறாகலை | 14.5 | 20.8 |
| இரத்தினபுரி | 10.5 | 10.4 |
| கேகாலை | 10.8 | 6.7 |
| **இலங்கை** | 8.9 | 6.7 |

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

* மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்கள் நீங்கலாக

உலக நடைமுறை மற்றும் 2012/13 குடும்ப அலகு வருமானம் மற்றும் செலவின அளவீடு பிரதேச செயலக மட்டத்தில்[4] வறுமை வீதங்களிடையே குறிப்பிடத்தக்க பூகோள ஏற்றத்தாழ்வுகள் இருப்பதை வெளிப்படுத்துகிறது. உதாரணமாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதேசங்களில் வறுமை எண்ணிக்கை விகிதம் 5.3 சதவீதத்திலிருந்து 45.1 சதவீதத்துக்கு கூடியளவில் வேறுபடுகிறது. குறிப்பாக, மொனராகலை மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களும் தொடர்ந்தும் கூடிய வறுமையுடையதாகவே காணப்படுகின்றன. ஒட்டுமொத்த அடிப்படையில் குறிப்பிட்ட மாவட்டங்களில் வறுமையின் பிரசன்னம் மிகவும் குறைவாகக் காணப்படுகையில் கண்டி மாவட்டத்திலுள்ள அக்குரன பிரதேச செயலகம் மற்றும் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிண்ணியா பிரதேச செயலகம் வறுமையைக் கொண்டிருந்தன. நாட்டின் மிகக் குறைந்த வறுமையுடைய கொழும்பு மாவட்டத்தின் தெகிவளை பிரதேச செயலகத்தில் பதிவுசெய்யப்பட்ட 0.6 சதவீதத்துக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கில் பதிவுசெய்யப்பட்ட 45.1 சதவீதம் கொண்ட வறுமை எண்ணிக்கை வீதத்துக்கும் இடையேயான இடைவெளியில் மிகவும் குறிப்பிடத்தக்க ஏற்றத்தாழ்வு அவதானிக்கப்பட்டது. வறுமையின் பரப்பளவிலான பகிர்ந்தளிப்பும் குடித்தொகையின் உயர் வீதமானவை வறுமையாக இருப்பதை உயர்ந்தளவிலான வறுமை எண்ணிக்கை வீதம் எப்போதும் எடுத்துக்காட்டமாட்டாதென்பதை தெளிவாகக் காட்டுகிறது. இது முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் முறையே 28.8 மற்றும் 20.1 சதவீத வறுமை எண்ணிக்கை வீதங்களால் பிரதிபலிக்கப்படுவதுடன் நாட்டின் வறிய குடித்தொகையின் 3.4 சதவீதத்துக்கு மட்டும் வகைகூறுவதுடன் குருணாகல் 6.5 சதவீதம் கொண்ட வறுமை எண்ணிக்கை வீதத்துடன் நாட்டில் வறிய குடித்தொகையின் 7.6 சதவீதத்துக்கு வகைகூறியது.

4. The Spatial Distribution of Poverty in Sri Lanka, Department of Census and Statistics - Sri Lanka and Poverty Global Practice, World Bank Group, August 2015.


இப் பிராந்திய ஏற்றத்தாழ்வுகள் ஒட்டுமொத்த வறுமைக் குறைப்பு நியதிகளில், இதுவரை நாட்டில் சாதனைகளை பலவீனப்படுத்துவதால் நாட்டில் எஞ்சியுள்ள பகுதியை கவனிக்காது விடப்பட்ட மற்றும் மோசமான வறுமையைத் தீர்ப்பதற்கு மையப்படுத்திய கொள்கை முயற்சிகள் அவசியமாகும். வருமானத்துக்கு மட்டுப்படுத்தாது வறுமை பல குணாதிசயங்களில் அளவிடப்படுவதை ஆய்வுகள் காட்டுவதால் வறுமையின் பல்புடைத்தன்மையில் கவனம் செலுத்துவது கொள்கைகளுக்கு முக்கியமானதாகும். இது குறைந்த கல்வியைப் பெற்றிருத்தல், அடிப்படை வசதிகளைப் பெறுவதற்கான குறைந்த வசதி (பாதுகாப்பான நீர், சுகாதாரம், நலக் கவனிப்பு மற்றும் ஊட்டச்சத்து) நலிவடைந்த தொழிலாளர் சந்தை இணைப்புக்கள் மற்றும் ஆக்கபூர்வமான பொருளாதாரச் சொத்துக்களை பெறுவதற்கான வாய்ப்பின்மை என்பனவற்றை உள்ளடக்குகின்றது. நாட்டின் சமூக பொருளாதார உட்கட்டமைப் பெறுவதற்கு விநியோகருக்கு சட்ட பூர்வமான உரிமை இருப்பதால் அரசு ஒழுங்கான அடிப்படையில் அவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பொறுப்பைக் கொண்டுள்ளது. வறியோரின் கீழேயுள்ள பிரிவினரின் தேவையைத் தீர்ப்பதற்கு அரசின் நலன்புரி உதவி நிகழ்ச்சித்திட்டத்தை அதிகரிப்பதற்கு மேலதிகமாக அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் பயனுறுதியை மேம்படுத்துவதற்கு உரிய இலக்கிடலை உறுதிப்படுத்தல் முக்கியமாகும். மற்றைய பேரண்ட மட்ட முன்னெடுப்புகள் வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களை உருவாக்கல், உட்கட்டமைப்பில் அதிகரித்த அரச முதலீடு, கிராமப் பிரதேசங்களில் பொதுவான பண்டங்களின் மேம்பாடடைந்த வழங்கல் மற்றும் முப்படையும் குடித்தொகையை இலக்கிடும் சமூகப் பாதுகாப்பு உபாயங்களை வடிவமைத்தலும் முக்கியமானதாகும்.

### வருமான ஏற்றத்தாழ்வு

*"பகிர்ந்தளிப்பு அளவுக்கு மிஞ்சியதை இல்லாமல் செய்தல் மற்றும் ஒவ்வொரு மனிதனும் போதுமானதை வைத்திருத்தல்"*

\- வில்லியம் வேடிக்ஸ்பியர், ஆங்கில நாடக ஆசிரியர் மற்றும் கவிஞன் (1564-1616) -

**வரைபடம் சி.கு 2.1 — இலங்கையில் வறுமையின் இடம்சார் பரம்பல் - 2012/13**




மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**அட்டவணை சி.கு - 2.2**

**தொகுதிக் குழுமங்கள் மற்றும் வருமானத்தின் பங்கு**

| தொகுதிக் குழுமம் அனைத்து குழுமங்கள | தொகுதிக் குழுமம் திரண்ட (%) | வருமான குழுமம் (ரூ) | வருமானத்தின் பங்கு (%) | வருமானத்தின் பங்கு (%) திரண்ட |
|---|---|---|---|---|
| 1 | 10 | 10,836 இற்கு கீழ் | 1.5 | 1.5 |
| 2 | 20 | 10,836 - 16,531 | 3.0 | 4.5 |
| 3 | 30 | 16,532 - 21,286 | 4.1 | 8.6 |
| 4 | 40 | 21,287 - 25,903 | 5.1 | 13.7 |
| 5 | 50 | 25,904 - 30,814 | 6.2 | 19.9 |
| 6 | 60 | 30,815 - 36,758 | 7.3 | 27.2 |
| 7 | 70 | 36,759 - 45,000 | 8.9 | 36.1 |
| 8 | 80 | 45,001 - 57,495 | 10.9 | 47.0 |
| 9 | 90 | 57,496 - 83,815 | 14.9 | 61.9 |
| 10 | 100 | 83,815 இற்கு மேல் | 38.0 | 100.0 |

மூலம்: வீட்டுத்துறை வருமான மற்றும் செலவின அளவீடு, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களம்


குடித்தொகையிடையே வருமானம் பகிர்ந்தளிப்பு, நுகர்வு மற்றும் ஏனைய குணாதிசயங்களிலான ஏற்றத்தாழ்வு கவனத்தை வேண்டிநிற்கும் இன்னுமொரு முக்கிய குணாதிசயமாகும். ஒக்ஸ்பாமின்படி, 2014இல் உலகில் உள்ள 1 சதவீதம் பணக்கார மக்கள் மொத்த செல்வத்தில் 48 சதவீதத்தை வைத்திருப்பதுடன் 52 சதவீதத்தை ஏனைய 99 சதவீத வயதுவந்தோர்களிடையே பகிர்ந்துகொள்கிறது[5]. தோற்றம் பெற்றுவரும் நாடுகளிலான வளர்ச்சி காரணமாக நாடுகளுக்கிடையேயான ஏற்றத்தாழ்வுகள் சிறிதளவு வீழ்ச்சியடைந்துள்ளதுடன் நாடுகளுக்குள்ளேயான ஏற்றத்தாழ்வே அநேக மக்களின் கரிசனைக்குரிய விடயமாகும். உலகைச் சுற்றியுள்ள நாடுகளில் பணக்காரரான சிறுபான்மையினர் அவர்களது நாட்டின் வருவாயில் முன்னெப்போதுமில்லாத அதிகரித்த பங்கை பெற்றக்கொள்கின்றனர். இப்போக்கின் சிக்கல்களைக் கருத்திற்கொண்டு, நாட்டினுள்ளேயும், நாடுகளுக்கிடையேயும் ஏற்றத்தாழ்வைக் குறைத்தல் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகளின் கீழ் முக்கிய இலக்குகளில் ஒன்றாக இனங்காணப்பட்டுள்ளது.

இலங்கையின் தலைக்குரிய வருமானம் 2003இன் ஐ.அ.டொலர் 981 இலிருந்து 2015இல் ஐ.அ.டொலர் 3,924 இற்கு முன்னேறியதற்கு மத்தியிலும் குறிப்பிடத்தக்க வருமான ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்து விடாப்பிடியாக இருக்கிறது. தொகைமதிப்பு புள்ளிவிபரத்தின் ஆகப்பிந்திய 2012/13 குடும்ப அலகு வருமானம் மற்றும் செலவின அளவீட்டின்படி மாதாந்த குடும்ப அலகு வருமானங்களின் சராசரி மற்றும் இடையம் முறையே ரூ.45,878 ஆகவும், ரூ.30,814 ஆகவும் காணப்படுகிறது. மாவட்டமட்ட எண்தொகையைக் கருத்திற் கொள்கையில் கொழும்பு மாவட்டம் ஆகக்கூடிய மாதாந்த சராசரி குடும்ப அலகு வருமானத்தை (ரூ.77,723) பதிவு செய்திருக்கையில் முல்லைத்தீவு மாவட்டம் மிகக் குறைந்த வருமானத்தைப் (ரூ.23,687) பதிவுசெய்தது. இதன்படி, தொகுதிக் குழுமங்களின் நியதிகளில் ஆகக்கூடிய தொகுதிக் குழுமங்கள் நாட்டின் குடும்ப அலகு வருமானத்தின் 38 சதவீதத்தையும் ஆகக்கூடிய 20 சதவீதம்

5. Oxfam Issue Briefing, Wealth: Having it All and Wanting More, January 2015

**வரைபடம் சி.கு 2.2**

**வருமானச் சமத்துவமின்மை வருமானத்தின் பங்கு**




மூலம்: வீட்டுத்துறை வருமான மற்றும் செலவின அளவீடு 2012/13, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களம்

குடும்ப அலகு வருமானத்தின் 53 சதவீதத்தையும் கொண்டுள்ளது, இதற்கு மாறாக, குடும்ப அலகுகளின் 50 சதவீதம் மொத்த குடும்ப அலகு வருமானத்தின் 20 சதவீதத்துக்கு மட்டுமே வகைகூறி நாடு முழுவதுக்குமான வருமானப் பகிர்ந்தளிப்பில் குறிப்பிடத்தக்க ஏற்றத்தாழ்வைப் பிரதிபலிக்கிறது.

மிகவும் பூரணமாக பகிர்ந்தளிப்பிலிருந்து, விலகி பொருளாதாரத்தினுள் தனிப்பட்ட நபர்கள் அல்லது குடும்ப அலகுகளிடையே வருமானப் பகிர்ந்தளிப்பு அளவை அளவிடும் இலங்கையில் குடியிருப்பாளர் வருமானத்தின் கினி குணகம்[6] வீட்டுத்துறை வருமான மற்றும் செலவின அளவீட்டின் 2012/13 இற்கமைய, 0.48 ஆக 2012/13இல் விளங்கியது. இது 2009/2010இல் முன்னைய குடும்ப அலகு வருமானம் மற்றும் செலவின அளவீடு 0.49 உடன் ஒப்பிடுகையில் வருமானப் பகிர்ந்தலில் சிறு முன்னேற்றத்தைப் பிரதிபலித்த போதிலும் வருமான சமத்துவத்தை மேம்படுத்துவதற்கு உரிய கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு பலமான தேவை காணப்படுகிறது.

### குழந்தைகளின் குறைந்த ஊட்டச்சத்து[7]

*“பசி மற்றும் ஊட்டச்சத்தின்மை குழந்தைகளுக்கு அழிவை ஏற்படுத்தும் விளைவுகளைக் கொண்டுள்ளதுடன் இது குறைந்த பிறப்பு நிறை மற்றும் பிறப்பு குறைபாடுகள், பருத்த உடம்பு, மனோநிலை மற்றும் தேக சம்பந்தான பிரச்சினைகள் மற்றும் மோசமான கல்வி வெளிப்பாடுகளுடன் இணைந்துள்ளது”*

- மறியன் றைற்எடில்மன், குழந்தைகள் பாதுகாப்பு நிதியத்தின் நிறுவுனர்/ தலைவர், ஐக்கிய அமெரிக்கா”[8] -

6. கிணிக்குணகம் பொருளாதாரம் ஒன்றின் தனிநபர்கள் அல்லது வீட்டுத்துறையினர் என்போருக்கிடையேயான வருமானத்தின் பங்கீடு எந்தளவிற்கு பூரணமான சமத்துவ பங்கீட்டில் இருந்து விலகிச் செல்கின்றது என்பதை அளவிடுகின்றது. லோரன்ஸ் வலையி பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானத்தின் திரண்ட சதவீதத்திற்கு எதிராக வறுமையான தனிநபரிலிருந்து அல்லது வீட்டுத்துறையிலிருந்து ஆரம்பித்து பெற்றுக்கொண்ட திரண்ட நபர்கள் எண்ணிக்கை என்பவற்றை காட்டுகின்றது. கிணிக்குணகம் லோரன்ஸ் வலையிற்கு இடையேயான பரப்பு மற்றும் கோட்டின் கீழான உயர்ந்தபட்ச பரப்பு என்பவற்றின் சதவீதமாக குறித்துரைக்கப்பட்ட முழுமையான சமத்துவமுடைய கற்பனையான கோடு என்பவற்றிற்கிடையேயான பரப்பை அளவிடுகின்றது. ஆகையால் கிணிக்குணகம் 0ஆனது பூரணமான சமத்துவத்தையும் 1ஆனது பூரணமான சமத்துவமற்ற தன்மையையும் காட்டுகின்றது.

7. Based on “The Challenge of Child Under-nutrition in Sri Lanka” (Unpublished), Dr. Renuka Jayatissa, Consultant Medical Nutritionist, Ministry of Health, Colombo, Sri Lanka.

8. “Preventable Hunger in Our Land of Plenty”, Children’s Defence Fund, USA

தாராளமான உணவைக் கொண்ட உலகத்தில் பட்டினி மற்றும் குறைந்த ஊட்டச்சத்து காணப்படுதல் போசனைக் குறைந்தமைக்கான காரணத்தை எடுத்துக் காட்டும் கடுமையான வறுமையை எடுத்துரைக்கிறது. எனினும், குறிப்பாக ஊட்டச்சத்துப் பற்றாக்குறைகள் உள்ளிட்ட குறைந்த ஊட்டச்சத்து வறுமைக்கான முக்கிய காரணங்களாகும். ஏனெனில், இவை வறுமையிலிருந்து தப்புவதற்கு தனிப்பட்ட ஆட்களின் ஆற்றலைப் பாதிக்கிறது. பௌதிக ரீதியான மற்றும் மனோநிலையை அபிவிருத்தி செய்வதில் குழந்தைகளின் ஆற்றலிலுள்ள குறைபாடு பாடசாலை வரவு மற்றும் செயலாற்றத்தை கடுமையாகத் தடுப்பதால் கல்வியிலான முதலீடுகளின் பயனுறுதியை பலவீனப்படுத்தி இவர்கள் தொழிற்படையில் நுழையும் இறுதியாக உற்பத்தி உள்ளார்ந்த வளத்தைக் குறைக்கிறது. அத்தகைய தனிப்பட்ட நபர்கள் பசி, குறைந்த உற்பத்தித்திறன் மற்றும் தீராத பசியில் சிக்குகின்றனர்.

இலங்கை குழந்தைகளின் குறைந்த ஊட்டச்சத்தின் கணிசமமான சுமையை எதிர்கொள்கிறது. இங்கு 5 வயதுக்குக் குறைந்த அனைத்துக் குழந்தைகளின் 13 சதவீதம் வளர்ச்சி குன்றியதாக அறிவிக்கப்பட்டிருக்கையில் 2012இல் 24 சதவீதம் குறைந்த நிறையுள்ளவர்களாக காணப்பட்டனர். நியமக் குறிகாட்டிகளின் வீச்சில் - இரத்தச்சோகை, குறைவான பிறப்பு நிறை, வளர்ச்சி குன்றல், குறைந்த நிறை மற்றும் உடல் உருக்கும் வீதங்கள் - பொதுவாக சுகாதாரச்சாதனை வரிசையில் இருக்கும் நாடுகளை விட மோசமான சுகாதார வெளிப்பாடுகளை கொண்ட நாடுகளுடன் இலங்கையின் செயலாற்றம் கூடிய அளவுக்கு ஒப்பிடத்தக்கது. பொருளாதார வளர்ச்சியின் உறுதியான வீதம் மற்றும் அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைத் தரங்களுக்கு மத்தியிலும் கடந்த தசாப்தத்திலான மேம்பாடுகள் மெதுவாகவும், சிறிதாகவும் விளங்கின.

ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியமும் இலங்கையில் குழந்தைகள் ஊட்டச்சத்து தொடர்பாக பின்வரும் முக்கிய அவதானிப்புகளை மேற்கொண்டுள்ளது[9]:

- இலங்கையில் குறைந்த ஊட்டச்சத்து தொடர்ந்தும் முக்கிய கரிசனையாக இருந்து வருகிறது.
- வளர்ச்சி குன்றல் வீதங்கள் (5 வயதுக்கும் குறைந்த அனைத்து குழந்தைகளின் 13 சதவீதம்) ஆப்கானிஸ்தான மற்றும் பாகித்தான் உள்ளிட்ட பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளை விட குறைவாக விளங்குகையில் இவை சீனா, தாய்லாந்து மற்றும் மலேசியா போன்ற ஏனைய நடுத்தர வருமானமுள்ள ஆசிய நாடுகளை விட உயர்ந்து காணப்பட்டன.
- ஆபத்தான விதத்தில், குழந்தைப் பருவ உடல் உருக்கும் மற்றும் குறைந்த நிறை ஆகிய இரண்டும் காணப்படுதல் 2009 இலிருந்து அதிகரிப்பதுடன் 25 மாவட்டங்களில் 24இல் (5 வயதுக்கும் குறைவான அனைத்துக் குழந்தைகளின் 15 சதவீதத்துக்கும் கூடியவை) உடல் உருக்கல் கடுமையான கரிசனைக்குரிய விடயமாக இருப்பதை போக்குகள் காட்டுகின்றன.
- வளர்ச்சி குன்றிய குழந்தைகளில் அரைவாசிப்பேர் மற்றும் உடல் உருக்கும் குழந்தைகளின் 27 சதவீதம் இரண்டு வயதை விடக் குறைவானவர்களாகும்.
- 5 வயதுக்கும் குறைந்த குழந்தைகளில் கிட்டத்தட்ட 2.3 சதவீதம் (40,000) மோசமான ஊட்டச்சத்துப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டிருக்கையில் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்ளிட்ட 4 மில்லியனுக்கும் கூடுதலான இலங்கையர்கள் இரத்தக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- இந் நிலைமைகள் இருப்பதால், பிரதேசங்களிடையே மற்றும் வருமான கால்பங்குகளில் குறிப்பிடத்தக்க ஏற்றத்தாழ்வு காணப்படுகிறது.

இலங்கையில் ஊட்டச்சத்து குறைந்த பிள்ளைகளின் பிரச்சினை வறிய குடும்பங்கள், மத்திய மலைநாடு மற்றும் வட மத்திய மாகாணம், கிளிநொச்சி மற்றும் மொனராகலை உள்ளிட்ட உலர் வலயங்களின் சில பகுதிகள் என்பவற்றில் செறிந்து காணப்படுகின்றன. குறைந்த பிறப்பு நிறை மற்றும் குழந்தைகளின் குறைந்த ஊட்டச்சத்து பணக்காரரை விட வறிய குடும்பங்களிலும் நாட்டின் எஞ்சியபகுதிகளை விட பெருந்தோட்டங்களிலும் மூன்று மடங்குகள் உயர்ந்து காணப்படுகிறது.

ஊட்டச்சத்துக் குறிகாட்டிகளில் இலங்கையின் நலிவான செயலாற்றத்துக்கான முக்கிய காரணிகளாக வறுமை, உணவுப் பாதுகாப்பின்மை, இது தாய்மார்களின் குறைவான நலத்திற்கு இட்டுச் சென்றுள்ளது. இதில், இலங்கையில் தனியொரு மாற்றியமைக்கத்தக்க மிகவும் முக்கிய காரணியாக வறுமை விளங்குவதுடன் வறுமையிலிருந்து ஏற்பட்ட உணவுப் பாதுகாப்பின்மையுடன் சேர்த்து குறைந்த பிறப்பு நிறை ஏற்படும் சம்பவத்தின் மூன்றில் இரண்டு பகுதிக்கும் கூடியளவுக்கு பங்களிப்புச் செய்தது. உணவு நுகர்வை மட்டும் பிரதிபலிக்காது நலரீதியாக பன்முகப்பட்ட உணவைப் பெறுவதிலான இயலாத்தன்மையையும் பிரதிபலிக்கிறது.

1993இற்கும் 2012இற்கும் இடையேயான அனைத்துத் தேசிய அளவீடுகளின் பகுப்பாய்வு வறுமை மட்டங்களுடன் இணைந்து செல்லும் விதத்தில் வளர்ச்சி குன்றல் மற்றும் குறைந்த பிறப்பு நிறை ஏற்படும் சம்பவத்தின் அதிகரிப்புடன் இலங்கையில் குறைந்த பிறப்பு நிறை மற்றும் வளர்ச்சி குறையின் முன்னணியிலுள்ள மாற்றியமைக்கத்தக்க தீர்மானிக்கும் காரணியாக குடும்ப அலகு வருமானம் இருப்பதை தொடர்ச்சியாகக் கண்டுபிடித்துள்ளது. ஒவ்வொருவரும் ஆகக் குறைந்த ஏற்புடையதான சக்தியை உள்ளெடுப்பதை அடைவதை உறுதிப்படுத்துவதற்கு அநேகமான வறிய குடும்ப அலகுகளில் உணவின் கிடைப்பனவு குறைவாகவே காணப்படுகிறது. இதன்படி, ஊட்டச்சத்து பற்றாக்குறை வருமானத்துடன் நெருக்கமாக தொடர்புபட்டுள்ளது. மிக வறுமையான குடும்ப அலகுகள் கூடிய பணக்கார குடும்ப அலகுகளிலான ஊட்டச்சத்து உள்ளெடுத்தலின் மூன்றில் இரண்டு பங்குகளை மட்டுமே உள்ளெடுப்பதால் நாளொன்றுக்கு குடும்பமொன்றுக்கு 2,000 - 3,500 கலோரிகள் கொண்ட ஊட்டச்சத்து பற்றாக்குறையை எதிர்கொள்கிறது. வறிய குடும்பங்கள் அவர்களது வருமானத்தில் அநேகமானவற்றை உணவில் செலவழிப்பதை பரிசீலனையில் கொள்கையில் இவ் இடைவெளியை அவர்களால் பூர்த்தி செய்ய இயலாதுள்ளது. மேலும் இது உயிரியல் ரீதியாக நேரிடும் என்று எண்ணஇடமில்லை - சிறந்த மருத்துவ கவனிப்புடன் - வறிய குடும்பங்களில் குழந்தைகள் சாதாரண வளர்ச்சி நியமங்களை அடைவார்கள் என எதிர்பார்க்கலாம், அல்லது கலோரி குறைந்த தாய்மார்கள் சாதாரணமான நிறையுள்ள குழந்தைகளைப் பிரசவிக்கலாம் என எதிர்பாக்கலாம்.

ஊட்டச்சத்து குறைந்த குறிகாட்டிகளில் மிதமான முன்னேற்றம் 1990களிலிருந்து இலங்கையில் அவதானிக்கப்பட்ட தலைக்குரிய வருமானத்திலான 5 - 6 சதவீத வளர்ச்சியுடன் முரண்படுகிறது.

9. Nutrition, UNICEF, http://www.unicef.org/srilanka/Nutrition(1).pdf

இது பகுதியளவில் பொருளாதார வளர்ச்சியின் சமமற்ற பகிர்வால் ஏற்பட்டிருக்கக்கூடும். இவ் உயர் வளர்ச்சிப் பாதையிலிருந்து பெறப்பட்ட நன்மைகள் வறியோருக்கான சிறிது சிறிதான கசிவுடன் வறியோர் அற்றோரை நன்மை பெறச்செய்தன. இது வறியோரின் வாழ்க்கைத் தரங்களை பின்னடையச் செய்தன. வளர்ச்சியடைந்துவரும் ஏற்றத்தாழ்வுகள் இலங்கையில் 40 சதவீதம் கொண்ட கூடிய வறுமையுமையோரால் பெறப்பட்ட வருமானத்தின் பங்கில் வீழ்ச்சியை ஏற்படுத்தியதுடன் இது 1996/97இன் 15.3 சதவீதத்திலிருந்து 2012/13இல் 13.7 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது. இது அரச உதவியின் மோசமான இலக்கிடலுடன் சேர்ந்து இலங்கையில் வறியோரின் உணவுப் பாதுகாப்பு மீது எதிர்க்கணிய தாக்கத்தைச் செலுத்தியது.

அரசால் மேற்கொள்ளப்பட்ட தற்போது இடம்பெற்றுவரும் முயற்சிகளுக்கு மேலதிகமாக நாட்டில் ஊட்டச்சத்து இருப்பதைக் கோடிட்டுக்காட்டும் பிரச்சனைகளின் சமூக பொருளாதார முக்கியத்தைக் கவனத்திற் கொள்கையில், வறியோரிடையே முன்னேற்றமடைந்த ஊட்டச்சத்து வெளிப்பாடுகளை ஊக்குவிப்பதற்கு பல்துறை ரீதியிலான அணுகுமுறை தேவைப்படுகிறது. மேலும் பயனுறுதிமிக்க தேசிய உபாயம் இடர்நேர்விலுள்ள குடும்பங்களுக்கு வினைத்திறன் மிக்க மற்றும் போதுமான உணவு நிறைவுபடுத்துவதற்காக வழங்குவதற்கு மூலாதாரமான தலையீடுகளைக் கொண்டிருக்க வேண்டும், பன்முகப்படுத்தல் மற்றும் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும் வேளாண்மைக் கொள்கைகள் அத்தகைய மூலாதாரமான தலையீடுகளுக்கு உதவும், தெரியப்படுத்தும் மற்றும் பூர்த்தியாக்கும் ஏனைய நுண்ணிய மட்டத்திலான தலையீடுகள் என்பவற்றை உள்ளடக்கியிருக்க வேண்டும். மேலும் ஊட்டச்சத்துத் துறையில் நலப் பணியாளர்களின் இயலளவைக் கட்டியெழுப்புவதற்கான போதிய நிதியிடலை வழங்குதல் போன்ற நலமல்லாத தலையீடுகளும் இப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு அத்தியாவசியமாகும். இத்துடன், எதிர்காலத்தின் குடித்தொகையிடையே நீரிழிவு நோய் மற்றும் இருதய நோய் போன்ற நிலைமைகள் அதிகரித்துச் செல்வதைத் தவிர்க்கும் பொருட்டு ஊட்டச்சத்து மட்டங்களில் ஏற்றத்தாழ்வு விரிவடைந்து செல்வதை எடுத்துக்காட்டும் குழந்தைகளிடையேயான அளவுக்கதிகமான ஊட்டச்சத்தின் அதிகரித்துச் செல்லும் பிரச்சினையும் விரைவான கவனத்தை வேண்டிநிற்கிறது.

**முன்னோக்கிய பாதை**

உயர் வளர்ச்சிப் பாதையை இலங்கை அடையுமென எதிர்பார்க்கப்படுவதுடன் நடுத்தர காலப்பகுதியில் இது நீடித்து நிலைத்திருந்து குடித்தொகையின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பல வாய்ப்புக்களை முன்வைக்கும். எனினும், பொருளாதாரத்தின் அமைப்பு ரீதியிலான பெயர்ச்சி குடித்தொகையின் பாதிப்புக்குள்ளாக்கக்கூடிய குழுவினரை வறுமையிலிருந்து, தரமுயர்த்துவதற்கு பொருளாதார வளர்ச்சியின் நன்மைகளின் "சிறிது சிறிதாக குறைத்தல்" மீது முழுமையாகத் தங்கியிருப்பதற்கு கொள்கை வாய்ப்பாளர்களுக்கு சாத்தியமற்றதாக்கியது. எனவே, வளர்ச்சிச் செயல்முறையை உருவாக்கும் அரசின் முயற்சிகளை ஒருங்கிணைப்பதற்கும், தொடந்து மேற்கொள்வதற்கும் அரசுக்கு இது இன்றியமையாததாகும். இங்கு, முழுக்குடித்தொகையும் இதற்குப் பங்களிப்புச் செய்வது மட்டுமன்றி உள்ளடக்க வளர்ச்சியின் ஊடாக சுபீட்சத்தைப் பகிரும் வளர்ச்சிச் செயல்முறையிலிருந்தும் நன்மையடையும்.

முரண்பாடான கொள்கைகளைத் தவிர்ப்பதற்கு மிகுந்த கவனம் தேவைப்படுவதுடன் முன்னுக்குப் பின் முரணான பின்னோக்கிய வரிக் கொள்கைகள், பலயீனமான சட்ட விதிகள் மற்றும் பொறிமுறைகளை நடைமுறைப்படுத்தல் என்பன வெளிநாட்டு முதலீடுகளை ஊக்கமிழக்கச் செய்துவிடும்.

**வெளிநாட்டுத் துறையின் மீளெழுச்சியைப் பலப்படுத்துவது பொருட்கள் மற்றும் பணிகள் ஆகிய இரண்டினதும் வெளிநாட்டு வர்த்தகத்தின் செயலாற்றம் என்பனவற்றின் மீது பெருமளவிற்குத் தங்கியிருந்து அதிகரித்த போட்டித் தன்மையினால் பின்தள்ளப்படுகிறது.** இறக்குமதிகளின் வளர்ச்சிகளுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதிகளின் வளர்ச்சி குறைவாக இருப்பதன் காரணமாக இலங்கை தொடர்ச்சியாக உயர்ந்த வர்த்தகப் பற்றாக்குறைச் சுமையினை அனுபவித்து வருகிறது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக பெயரளவு நியதிகளில் இலங்கையின் வணிகப் பொருள் ஏற்றுமதிகளில் அதிகரிப்புக்கள் காணப்படுகின்ற போதும் ஏற்றுமதிகள் 2000ஆம் ஆண்டின் 33.3 சதவீதத்திலிருந்து 2015இல் 12.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் உலகளாவிய ஏற்றுமதிகளின் பங்கும் இதே விதத்தில் சுருக்கமடைந்து நாட்டின் ஏற்றுமதிகள் மற்றைய போட்டியிடும் நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த போட்டித்தன்மையுடையதாக இருப்பதை எடுத்துக்காட்டியது. எனவே, நாட்டின் வெளிநாட்டுப் போட்டித்தன்மையினை மேம்படுத்துவது வெளிநாட்டு வர்த்தகப் பற்றாக்குறையை குறுக்கமடையச் செய்வதற்கு அவசியமானதாகும். நாடு மட்டுப்படுத்தப்பட்ட மூலவளத் தளத்தினை கொண்டதாகவும் சிறிய உள்நாட்டுச் சந்தை மற்றும் முதலீட்டு இயலாற்றலை உடையதாகவும் இருப்பதனால் இலங்கை ஏற்றுமதி சார்ந்த உபாயங்களின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகளில் போதுமானதற்ற முதலீடுகள் குறிப்பாக ஏற்றுமதிகளுக்கான நிதியிடல் போதுமானளவில் காணப்படாமை, போதுமானதற்ற சந்தை ஊக்குவிப்புக்கள், வர்த்தகக் கண்காட்சியில் பங்கேற்றல் மற்றும் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான உதவியின் அளவு குறைவாக இருக்கின்றமை மற்றும் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்கள் இல்லாமையின் காரணமாக குறைந்த உற்பத்தித்திறன் மற்றும் வலுவின் உயர்ந்த செலவு என்பன பன்னாட்டுச் சந்தையில் இலங்கை உற்பத்திகளின் போட்டித்தன்மையினை குறைத்துவிடுகின்ற பொதுவான பிரச்சனைகளாகக் காணப்படுகின்றன. மேலும், ஏற்றுமதி உற்பத்திகள் மற்றும் சந்தை சேரிடங்கள் குவிந்திருப்பது ஏற்றுமதி வருவாய்களின்

உறுதிப்பாடின்மைக்கு வழிவகுக்கக் கூடுமாகையால் இது இன்னொரு கரிசனைக்குரிய விடயமாகக் காணப்படுகிறது. போட்டித்தன்மை கொண்ட செலாவணி வீதங்களைப் பேணுவதற்குப் புறம்பாக அரச மற்றும் தனியார் துறைகள் இணைந்து பல் நோக்கு அணுகுமுறையொன்றினைப் பின்பற்றுவது ஏற்றுமதிக் கைத்தொழில்கள் பெறுமதிச் சங்கிலிகளை நோக்கி நகர்வதற்கு இன்றியமையாததாகும். இது தொடர்பில் ஒப்பீட்டு ரீதியில் உலகளாவிய பெறுமதிச் சங்கிலிக்குள் புகுவதற்கான அநுகூலங்களை அனுபவிக்கின்ற உயர்ந்த ஏற்றுமதி உள்ளார்ந்த வளங்களுடன் கைத்தொழில்களை ஒருங்கிணைக்கின்ற சாத்தியங்களைக் கண்டறிந்து ஊக்குவிக்கின்ற அதேவேளையில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளையும் இத்துறையிலுள்ள ஏனைய முதலீட்டாளர்களையும் ஊக்குவித்தல் வேண்டும். ஆகவே, இலங்கை போட்டித்தன்மை கொண்ட கைத்தொழில்களை ஊக்குவிக்கின்ற அதேவேளையில் மூலதனத்தை மட்டுமின்றி நவீன தொழில்நுட்பம், முகாமைத்துவத் தேர்ச்சி, தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் உத்தரவாதப்படுத்தப்பட்ட சந்தைகளையும் கொண்டுவரும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவருதலும் வேண்டும்.

**அதிகளவு சந்தைகளை அணுகுதல் மற்றும் உற்பத்தி பன்முகப்படுத்தல் என்பனவற்றிற்காக, ஏற்றுமதியாளர்கள் தற்போதுள்ள வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் வர்த்தக ஏற்பாடுகளை வசதிப்படுத்தல் என்பனவற்றை உச்சளவில் பயன்படுத்தல் வேண்டும்.** இலங்கை ஐரோப்பா மற்றும் ஐக்கிய அமெரிக்கச் சந்தைகளில் பெருமளவிற்குத் தங்கியிருக்கிறது. இவை மொத்த ஏற்றுமதிகளில் மூன்றில் இரண்டு பங்கிற்கு வகைகூறுவதுடன் பாரம்பரிய ஏற்றுமதிச் சந்தைகளில் தொடர்ந்தும் தங்கியிருப்பது இலங்கை வெளிப்புற அதிர்வுகளினால் பாதிக்கப்படக்கூடிய தன்மையையும் ஏற்படுத்தும். அண்மைய ஆண்டுகளில் வர்த்தக தடைகளில் பரஸ்பர குறைப்புக்களை ஏற்படுத்துவதனூடாக முக்கியமாக பன்னாட்டுச் சந்தைகளை மீள்வலிமைப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் உலகளாவிய சந்தையில் பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகள் முக்கியத்துவம் பெற்றனவாக மாறிவருகின்றன. இலங்கை பிராந்திய ரீதியில் முக்கியத்துவம் பெற்ற இருபுடை மற்றும் பல்புடை வர்த்தக உடன்படிக்கைகளில் கையெழுத்திட்டிருக்கிறது. எனினும், நடைமுறையிலுள்ள நான்கு முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளில் மாத்திரம் பங்குபற்றியிருப்பதன் மூலம் பின்தங்கியதொன்றாக இருக்கிறது. சாத்தியமான ஏற்றுமதிச் சந்தைகளாக பாரிய பொருளாதாரங்களை பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு சீனாவுடனான சுதந்தர வர்த்தக உடன்படிக்கை கண்டறியப்பட்டு இருக்கிறது எனினும் சீனாவுடனான ஏற்றுமதி வர்த்தகத்தை காத்திரமான முறையில் உயர்த்தும் பொருட்டு இதனைக் கவனமாக வரைவது அவசியமானதொன்றாக இருக்கிறது. இதன்மூலம் சீனாவுடனான வர்த்தக இடைவெளி குறைந்துவிடும். தென்னாசிய பிராந்திய வர்த்தக உடன்படிக்கை குறைந்தளவிலான தீர்வைச் சலுகைகள், எதிர்மறையான பட்டியல்கள், தீர்வையற்ற தடைகள், கட்டம் கட்டமான அணுகுமுறை இல்லாமை, ஒரே விதமான உற்பத்தி அமைப்பு மற்றும் நுகர்வு மாதிரிகள் மற்றும் சட்டத்திற்கு மாறான வர்த்தகம் என்பனவற்றின் விளைவாக மட்டுப்படுத்தப்பட்ட வெற்றியைக் கொண்டுள்ளமையை ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. தீர்வையற்ற தடைகள், துறைமுகக் கட்டுப்பாடுகள், மூலம் தொடர்பான பிரச்சனைகள் பற்றிய விதிகள், அனுமதிப் பங்குக் கட்டுப்பாடுகள், இறக்குமதி உரிமம் வழங்கல் தேவைப்பாடுகள், சுட்டுத்துண்டிடும் தேவைப்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப இணங்குவிப்புக்களுடன் தொடர்பான செலவினங்கள் மற்றும் தாமதங்கள் என்பன இலங்கை - இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினால் வழங்கப்பட்ட உள்ளார்ந்த நன்மைகளின் பயனைப் பெறுவதற்கு முட்டுக்கட்டையாக விளங்கின. அத்தகைய பிரச்சனைகள் ஏற்கனவேயுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் மீதான ஏற்றுமதியாளர்களின் நம்பிக்கையை இழக்கச் செய்கிறது. எனினும், அதன் அளவு மற்றும் இலங்கை ஏற்றுமதியாளர்கள் பயன்படுத்தப்படாத பெருமளவு உள்ளார்ந்த வளங்களைக் கொண்ட இந்தியச் சந்தைகளின் வளர்ச்சி என்பனவற்றினைக் கவனத்தில் கொண்டு தடைகளற்ற வர்த்தகத்தின் பிரச்சனைகளைத் தீர்வு காண்பதற்கு பொருத்தமான வழிமுறைகள் எடுக்கப்பட வேண்டும். இதனைப் பொறுத்தவரை இந்திய துறைமுகங்களில் எதிர்நோக்கப்படும் தடைகளைக் குறைப்பதற்காக இணங்குவிப்பு மதிப்பீட்டு நடைமுறைகளின் மீது பரஸ்பர அங்கீரிப்பு உடன்படிக்கையொன்றினை பரிசீலிப்பது நன்மை பயப்பதாக இருக்கும் அதேவேளையில் ஏற்றுமதியாளர்கள் பன்னாட்டு/ இறக்குமதி நாடுகளின் நியமங்களை பூர்த்திசெய்வதனையும் செலவுச் சிக்கனப்படுத்துவதனையும் உறுதிப்படுத்துவதற்கு இயலளவினைக் கட்டியெழுப்பும் வழிமுறைகள் எடுக்கப்படுகின்றன. அதேநேரம் இந்தியாவுடனான இருபுடைப் பேச்சுவார்த்தைகள் தொடரப்படவேண்டிய அதேவேளையில் இதனுடன் தொடர்பான ஆர்வலர்களுக்கு தகவல்கள் காத்திரமான முறையில் பரப்பப்படுதலும் வேண்டும். இலங்கை உலகளாவிய உற்பத்திச் சங்கிலியில் அதன் பங்களிப்பினை அதிகரிப்பதற்கு பல்புடை சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளிலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பில் ஆசிய வழங்கல் சங்கிலியில் தென்கொரியா, யப்பான், சிங்கப்பூர், மலேசியா போன்ற முக்கிய சில தொழிற்பாட்டாளர்களுடன் பங்குடமையில் அல்லது சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் நுழைவது பயன்மிக்கதாக இருக்கும்

வேளையில் அத்தகைய உடன்படிக்கைகளை வர்த்தகத்தை உயர்த்தும் பொருட்டு ஆசியாவிற்கு வெளியேயுள்ள ஏற்றுமதி நாடுகளுடனும் தொடர்வது அவசியமானதாக இருக்கும். அத்துடன் இலங்கை தகவல் தொழில்நுட்பச் சாதனங்களின் ஏற்றுமதி அதிகரித்து வருகின்றதொரு பின்னணியில் உலக வர்த்தக அமைப்பின் தகவல் தொழில்நுட்ப உடன்படிக்கையில் கையெழுத்திடுகின்றமையின் தாக்கத்தினை மதிப்பீடு செய்வது பயன்மிக்கதாக இருக்கும். மேலும், இலங்கையின் உள்ளார்ந்த வளம் மிக்க சந்தைகளுடன் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகள் இல்லாமலிருக்குமிடத்து இலங்கையின் போட்டியாளர்கள் முன்னுரிமையுள்ள தீர்வைத் திட்டங்களின் கீழ் அவற்றைப் பெற்றிருப்பது இன்னொரு கரிசனைக்குரிய விடயமாக இருக்கும். இது எமது ஏற்றுமதியாளர்கள் பன்னாட்டுச் சந்தைகளில் சமமான வாய்ப்புக்கள் இல்லாமல் போட்டியிட வேண்டிய நிலைமையைத் தோற்றுவிப்பதுடன் இலங்கையை பிரதிகூலமானதொரு நிலைமைக்கும் தள்ளிவிடுகிறது. சந்தை வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்வதற்கு சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளை ஆரம்பிப்பதும் அதனைப் பயன்படுத்திக் கொள்வதும் போட்டியாளர்களிடையே போட்டித்தன்மை மிக்க அநுகூலங்களை இலங்கை பெற்றுக்கொடுக்கின்ற அதேவேளையில் பன்னாட்டுச் சந்தைகளுக்குள்ளும் ஒருங்கிணைக்கிறது. அதேவேளை பொதுவாக்கப்பட்ட முன்னுரிமையளிக்கப்பட்ட வரிச்சலுகை முறைமையை மீளப்பெறுதல் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான மீன் ஏற்றுமதிகள் மீதான தடையை நீக்குதல் போன்ற முயற்சிகள் துரிதப்படுத்தப்பட வேண்டும்.

**சமூகப் பொருளாதார உட்கட்டமைப்பில் அரச முதலீடுகள் தொடர்ந்தும் காணப்படுகின்ற போதும் மத்திய தர வருமானப் பொருளாதாரத்திற்குள் நாடு மாறிச் செல்வதிலிருந்தும் தோன்றுகின்ற அபிவிருத்திச் சவால்களை பொருத்தமான முறையில் இலக்கிடப்பட்டதும் வளர்ச்சியை உருவாக்கும் மையமொன்றாகவும் அனைத்தையுமுள்ளடக்கிய முன்கூட்டிய செயற்பாடுசார்ந்த கொள்கைகளினூடாக கையாள வேண்டியிருக்கும்.** இப்பிராந்தியத்திலுள்ள இதன் அயல் நாடுகளுடனும் குறைந்த நடுத்தர வருமானப் பொருளாதாரங்களுடனும் ஒப்பிடும் பொழுது இலங்கை புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகளில் நிர்ணயிக்கப்பட்ட பல இலக்குகளையும் நிறைவேற்றியதில் முன்னணி நாடாக விளங்குகிறது. இவற்றில் பலவற்றை இலக்கிடல் ஆண்டான 2015இற்கு முன்னரே எய்தியிருக்கிறது. இருப்பினும்கூட, மோசமான கல்வி அடைவு, நல மற்றும் ஊட்டச்சத்துக் குறிகாட்டிகளின் குறைந்த செயலாற்றம், மற்றும் பாதுகாப்பான குடிநீர், சுகாதாரம் மற்றும் மின்வலு அதேபோன்று நிதியியல் அறிவு மற்றும் நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்வது போன்ற அடிப்படை உட்கட்டமைப்பை அடைவதில் போதுமான தன்மையில்லாமை என்பனவற்றின் விளைவாக நாட்டின் சில பகுதிகளும் குடித்தொகையின் குறிப்பிட்ட தொகையினரும் தொடர்ந்தும் பாதிக்கப்படும் தன்மையுடையவர்களாக இருப்பதனை ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. 2015இல் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் உலக வங்கி 2002 மற்றும் 2012/13 இடைப்பட்ட காலப்பகுதியில் வறுமையில் கடுமையான குறைப்பொன்று காணப்பட்ட போதும் அலுவல்சார் வறுமை கோட்டிற்கு மேலே வாழ்பவர்கள் என வரைவிலக்கணம் செய்யப்பட்டவர்களில் 2005இன் கொள்வனவு வலுச் சமநிலை நியதிகளில் நான்கில் ஒருவர் நாளொன்றுக்கு ஐ.அ.டொலர் 2.50 இற்குக் குறைவான வருமானத்தினைப் பெறுவதனை கவனித்திருக்கிறது. இது குடித்தொகையில் கணிசமானளவினர்கள் குறிப்பாக பொருளாதார அதிர்வுகள் மற்றும் இயற்கை அனர்த்த காலப்பகுதியில் உயர்ந்தளவு பாதிக்கக்கூடிய தன்மையினை எடுத்துக்காட்டியது. மாகாணங்களுக்கிடையேயான அவதானிக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகளைக் கொண்ட வறுமை நிலை, மோதலுக்குப் பின்னரான காலப்பகுதியில் பௌதீக உட்கட்டமைப்பில் விரைந்த அபிவிருத்திகள் காணப்பட்டமைக்கிடையிலும் பிரதான வளர்ச்சிச் செயற்பாடுகளுக்கு வெளியே குறிப்பிட்ட சில மாகாணங்கள் தொடர்ந்தும் இருந்தமையையும் அவை நாட்டின் உத்வேகம் மிக்க உயர்ந்த வளாச்சிக்குப் பங்களிக்கக்கூடியனவாகவோ அல்லது அதிலிருந்து நன்மைகளைப் பெறக்கூடியனவாகவோ இருக்கவில்லை என்பதனையும் எடுத்துக்காட்டியது. மொ.உ. உற்பத்திக்கான மாகாணங்கள் ரீதியான பங்களிப்பில் காணப்பட்ட சமநிலையற்ற தன்மைகளின் மூலம் இது மேலும் ஊர்ஜிதப்படுத்தப்பட்டதுடன் அனைத்தையுமுள்ளடக்கிய தன்மைகளைக் கொண்ட வளர்ச்சிச் செயற்பாடுகளை உருவாக்குவதற்குப் புதிதாக வடிவமைக்கப்பட்ட கொள்கைகளின் தேவைகளை எடுத்துக்காட்டியது. அத்தகைய கொள்கைகள் கல்வி மற்றும் நலம், உட்கட்டமைப்பு மற்றும் இணைப்புக்கள், தொழிற்சந்தைகளை அணுகுதல் மற்றும் தொழில் வாய்ப்புக்களின் கிடைப்பனவு போன்ற அரச பணிகளை வழங்குவதில் காணப்படும் பிராந்திய ரீதியிலான இடைவெளிகளிலிருந்து தோன்றுகின்ற சவால்களைக் கட்டுப்படுத்துதல் வேண்டும். அத்தகைய தலையீடுகளின் பயன், பின்தங்கிய மாகாணங்களின் தனிப்பட்ட தேவைகளை அடையாளம் காண்பதிலும் குறிப்பிட்ட சவால்களைக் கையாளக்கூடிய பல்துறை தலையீடுகளை விருத்தி செய்வதிலும் பெருமளவிற்குத் தங்கியிருக்கும். இத்தலையீடுகளை சரியான

முறையில் இலக்கிடுவது விரும்பத்தக்க பெறுபேறுகளை விரைவாக எய்துவதனை உறுதிப்படுத்துவது மட்டுமன்றி நிதியியல் வினைத்திறனையும் உறுதிப்படுத்தும்.

**உயர்தர மனித மூலதன தேவைகளுக்கான வளர்ந்துவரும் கேள்வியினை அடைவதற்கு வினைத்திறன் மிக்க அளவீடுகள் அவசியமாகும்.** கடந்த காலத்தில் உயர்ந்தளவு வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்திலிருந்து கைத்தொழில் மற்றும் பணிகள் துறை சார்ந்த பொருளாதாரமொன்றிற்கு நாடு அமைப்பியல் ரீதியாக மாற்றமடைந்து சென்றிருப்பதன் காரணமாக தயாரிப்பு மற்றும் பணிகளின் கூட்டப்பட்ட பெறுமதியினை உயர்த்துவது இவ்விலக்குகளை அடைவதற்கு முக்கியமானதொன்றாக இருக்கிறது. உயர்ந்த செயலாற்றத்தினைக் கொண்ட பணிகள் துறை நீங்கலாக பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்திகளில் மிகப் பெரிய வளர்ச்சியை எய்துவதற்கு முன்னேற்றம் கண்ட கைத்தொழில் துறை தவிர்க்கமுடியாதது என்பது பொதுவாக அவதானிக்கப்பட்டிருக்கிறது. மொ.உ.உற்பத்தியில் வேளாண்மைத் துறையின் பங்கு குறைவாக இருக்கின்ற போதும் அது இன்னமும் முக்கிய தொழில்வழங்குநராக விளங்கி தொழில்வாய்ப்பில் ஏறத்தாழ 28.2 சதவீதப் பங்கிற்கு வகைகூறுகிறது. மேலும், அரச துறை மொத்தத் தொழில்நிலையில் ஏறத்தாழ 15 சதவீதத்திற்கு வகைகூறுகிறது. இது ஒப்பீட்டு ரீதியில் தாழ்ந்த உற்பத்தித்திறன் கொண்ட நன்மைகளை வழங்குகின்ற வேளையில் மற்றைய துறைகளில் தொழிலாளர் பற்றாக்குறைகளைத் தோற்றுவிக்கிறது. வேளாண்மைத் துறையின் தொழில்வாய்ப்பில் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டதுடன் இது தொடருமென எதிர்பார்க்கப்படுகின்றதெனினும் கைத்தொழில்கள் மற்றும் பணிகள் தொடர்பான நடவடிக்கைகளில் இவ்வேலையாட்களின் நேரடி தொழில்வாய்ப்புகளின் பிரச்சனைகள், தொழிலாளர் நகர்வுகள் தொடர்பான கரிசனைகளைத் தோற்றுவிக்கிறது. உயர்ந்த வளர்ச்சி உத்வேகத்தினை அடைவதற்குத் தேவையான எதிர்பார்க்கப்படும் தரங்களில் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்கள் போதுமானதாக இல்லாமை அவதானிக்கப்பட்டிருப்பதுடன் பல கைத்தொழில்கள் மற்றும் பணிகள் துறையினால் எதிர்நோக்கப்படும் விடாப்பிடியான பிரச்சனைகளில் இதுவுமொன்றாகும். இதன் பின்னணியில் கைத்தொழில் உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் உயர் பெறுமதி, உயர் தொழில்நுட்ப உற்பத்திகள் மற்றும் பணிகள் என்பனவற்றினூடாக போட்டித்தன்மையை உத்வேகப்படுத்தும் பொருட்டான மனித மூலதன அபிவிருத்தி உயர் நடுத்தர வருமானப் பொறியினைத் தவிர்க்கின்ற முயற்சியின் முற்தேவைப்பாடாக விளங்குகிறது. பெருமளவிற்கு எதிர்பார்க்கின்ற தேர்ச்சி வகைகளில் குறிப்பாக ஏற்றுமதித் துறைகளை இலக்காகக் கொண்ட வகைகளில் தேவையான அறிவையும் பயிற்சிகளையும் வழங்கும் பொருட்டு அவுஸ்திரேலியாவிலுள்ள தொழில்நுட்ப மற்றும் மேலதிகக் கல்வி நிறுவனங்கள் அல்லது ஐக்கிய அமெரிக்காவிலுள்ள சனசமூகக் கல்லூரிகள் போன்ற உதாரணங்களைப் பின்பற்றி தொழில்பயிற்சி அல்லது தொழில்நுட்பக் கல்லூரிகளை ஏற்படுத்துவது பற்றி பரிசீலித்தல் நன்மை பயப்பதாகவிருக்கும். மேலும், தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் சாத்தியமானளவிற்கு வெளிநாட்டு ஒத்துழைப்புடன் ஏற்கனவேயுள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளை விரிவாக்கித் தரமுயர்த்துவது, தேர்ச்சி இடைவெளிகளைப் பூர்த்திசெய்வதற்கு பயனளிப்பதாக இருக்கும் அதேவேளையில் உள்ளூர் பல்கலைக்கழகங்களுக்கு நுழையமுடியாதவர்களுக்கு வாய்ப்புக்களை உருவாக்குவதாகவும் இருக்கும். மேலும், உலகளாவிய பொருளாதாரத்தில் இடம்பெற்றுவருகின்ற தொழில்நுட்பத்தின் உயர்ந்த முன்னேற்றங்கள் உள்ளூர் கைத்தொழில்களுக்கும் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. இவ்வபிவிருத்திகள் நெகிழ்ச்சித்தன்மை கொண்ட பணித் தேர்வுகளை அறிமுகப்படுத்தும் சாத்தியங்கள் உட்பட உலக வாய்ப்புக்களிலிருந்து தோன்றுகின்ற பெருந்தொகையான புதிய சவால்களையும் கொண்டுவரும். மற்றைய சில போட்டியிடும் ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் உயர்வடைந்த கூலிகள் மற்றும் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த தயாரிப்புச் செலவுகள் என்பனவற்றின் காரணமாக ஏற்றுமதிப் போட்டித்தன்மையை உயர்த்துவதற்கு கைத்தொழில்களை அதிகளவில் தன்னியக்கப்படுத்துவதற்கான தேவை அதிகரிக்கிறது. இலங்கையிலுள்ள ஒரு சில கம்பனிகள் அதிகரிக்கப்பட்ட தன்னியக்கப்படுத்தல்களுக்கு ஏற்கனவே விருப்பம் கொண்டிருந்ததுடன் அவற்றின் பொறிகளில் இயந்திர மனிதர்களையும் உபயோகித்து வருகின்ற இப்பின்னணியில் இலங்கையின் தொழிற்படை இத்தொழில்நுட்பவியல் தூண்டுதல் அபிவிருத்திகளினால் தேவைப்படுத்தப்படும் உயர்ந்தமட்ட தேர்ச்சித் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யும் விதத்தில் நன்கு பயிற்றப்பட்டதாகவும் இயக்கவாற்றல் நிறைந்ததாகவும் இருப்பது இன்றியமையாததாகும். மேலும், இலங்கைக்கு வெளியேயுள்ள தொடர்பான நிபுணத்துவமும் கைத்தொழில் அறிவினையும் கொண்ட வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய அதேவேளையில் வெளிநாட்டில் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் தொழில்சார்நிபுணத்துவத் தகைமைகளையும் அனுபவத்தினையும் பெற்றுக்கொண்டு ஏற்கனவே நாடு திரும்பியவர்கள் அவர்களது அறிவாற்றலைப் பகிர்ந்து கொள்வதற்கும் உதவி மனோபாவங்கள் மற்றும் உள்ளூர் கைத்தொழில்களின் சிறந்த வேலை நடைமுறைகளை பதியச் செய்வதற்கும் ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.

**தற்போதைய கல்வி முறைமையின் பரிணாமத்தினை கேள்வியினால் தூண்டப்பட்டதொன்றாக மாற்றுவது கல்வித் துறையில் சுதந்திர காலப்பகுதிக்கு முன்னிருந்து செய்யப்பட்ட கணிசமான முதலீடுகளை பயன்படுத்திக் கொள்வதற்கும் அதன் சாதனைகளை வலுப்படுத்திக் கொள்வதற்கும் இன்றியமையாததாகும்.** அனைவருக்குமான கல்வியை பெறுவதற்கான ஏற்பாடுகளை வழங்குவதற்கான தொடர்ந்துவந்த அரசாங்கங்களின் கடப்பாடுகள் ஆரம்ப மற்றும் இரண்டாந்தரக் கல்வியில் ஏறக்குறைய அனைவருக்குமான உள்ளடக்கத்தைப் பெறுவதற்கு நாட்டிற்கு உதவின. இலங்கை உயர்ந்தளவு கல்வியறிவைக் கொண்ட குடித்தொகையைக் கொண்டிருந்த போதும் மொழி மற்றும் பல்வேறு எண்ணியல் தேர்ச்சிகளில் உயர் வருமானம் தரும் பொருளாதாரங்களைவிட நாடு பின்தங்கியே இருக்கிறது. முறைமையினால் வழங்கப்படும் கல்வியானது மாணவர்களின் போட்டித்தன்மையை பட்டை தீட்டுவதாகவும் வாழ்க்கைத்தேர்ச்சி நன்மைகளை அவர்கள் பெறுவதற்கு உதவக்கூடியதாகவும் இருக்கவேண்டிய வேளையில் பரீட்சை சார்ந்த பாடவிதானங்களைக் கொண்ட கடுமையான கல்வி முறைமைகளை பின்பற்றுவதிலும் பார்க்க சுயாதீனமான சிந்தனைகளை ஊக்குவிப்பதாகவும் இருத்தல் வேண்டும். இது சந்தை சார்ந்த தேர்ச்சியை அதாவது சரளமான பாஷை, தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப அறிவு மற்றும் தொடர்பூட்டல், தலைமைத்துவம், படைப்பாற்றல் மற்றும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதல் போன்ற மென் தேர்ச்சிகளின் அபிவிருத்திக்கும் வசதியளிக்கும். மூன்றாந்தரக் கல்வி மட்டத்தில் நீடித்த பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் விதத்தில் தேவையான உயர்மட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வெளியீடுகள் இல்லாமையானது சவால்களைத் தோற்றுவிக்கிறது. உலகளாவிய வர்த்தகம் மற்றும் பணிகளின் உச்சப் போட்டித்தன்மையை எய்துவதனை நோக்கி இலங்கையின் உயர் கல்வியிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட அநுகூலங்களைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை அடைவதற்கு பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் ஆராய்ச்சி வெளிப்படுத்துகைகள் தவறிவிட்டன. இது கைத்தொழிலுக்கும் கல்வியியல் நிறுவனங்களுக்குமிடையே வலுவான புத்தாக்கம் சார்ந்த நிறுவன ரீதியான இணைப்புக்களைத் தேவைப்படுத்துவதுடன், இது பல்கலைக்கழகக் கட்டமைப்பினை சுயாதீனமாகவே நீடிக்கும் மாதிரிக்கு மாற்றுவதற்கும் உதவும். மேலும், உயர் கல்வியில் சேர்ந்து கொள்பவர்களின் நியதிகளில் இலங்கை அதன் நடுத்தர வருமான இணைத்தரப்பினர்களைவிட மிகப் பின்தங்கியே காணப்படுகிறது. இதற்கு அரச கல்வி முறைமையின் மட்டுப்படுத்தப்பட்ட இயலளவு பெருமளவிற்குக் காரணமாகவிருக்கின்ற வேளையில் கிடைப்பனவு மற்றும் தாங்கக்கூடிய தன்மை போன்ற பிரச்சனைகள் தனியார் கல்வித் துறையிலிருந்து கிடைக்கத்தக்க வாய்ப்புக்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துகிறது. இறை வசதிகள் மீதான தடைகளைப் பரிசீலனையில் கொள்கையில் தனியார் துறை பங்கேற்பினை அதிகரிப்பது கல்வி முறைமையிலிருந்தான வெளியீடுகளின் உற்பத்தித்திறனையும் தரத்தினையும் மேம்படுத்துவதற்குத் தேவையான முதலீடுகளை வழங்க உதவுமென்பதுடன் இது பாடசாலையிலிருந்து விலகுவோர் மற்றும் பட்டதாரிகளின் தேர்ச்சியை மேம்படுத்தவும் உதவும்.

**நோய் முதலியல் தெரியாத நீண்ட கால சிறுநீரக நோய் கடந்த இரு தசாப்தங்களாக இலங்கையின் கடுமையான நலப் பிரச்சனையாக இருந்து வருகிறது.** கடுமையான சிறுநீரக நோய் முதல் தடவையாக 1990களின் தொடக்கப் பகுதியில் வடமத்திய மாகாணத்தில் கண்டறியப்பட்டதுடன் இம்மாகாணத்துடன் இணைந்துள்ள மாகாணங்களான வடமேல், கிழக்கு, மத்திய மற்றும் வடக்கு மாகாணங்களிலுள்ள ஏறத்தாழ 10 மாவட்டங்களில் விரைந்து பரவி வருவதன் காரணமாக தற்பொழுது பாரிய சவால்களையும் தோற்றுவித்திருக்கிறது. இலங்கைக்குப் புறம்பாக கடுமையான சிறுநீரக நோய், இந்தியா, எல்சல்வடோர் மற்றும் நெக்கராகுவாவில் காணப்படுகிறது. இலங்கையில் கடுமையான சிறுநீரக நோய்க்கான காரணமும் இன்னமும் உறுதிசெய்யப்படவில்லை. எனினும், வேளாண் இரசாயனங்கள் உயர்ந்தளவில் பயன்படுத்தப்பட்டமை, கல்சியம் மற்றும் புளோரைற்றினை உயர்ந்தளவில் உள்ளடக்கிய கெட்டியான நீர், போதுமானதற்ற குடிநீர் மற்றும் வெப்பம் போன்றவற்றால் ஏற்படும் நீரிழப்புக்கள், உயர்மட்ட ஆசனிக் மற்றும் கட்மியம் மற்றும் குறைந்தமட்ட செலனியம் போன்ற குறிப்பிட்ட இரசாயனக் கலவைகள் காணப்படுகின்றமை அல்லது காணப்படாமலிருக்கின்றமை போன்ற பல ஏதுக் காரணிகளின் இந்நோய்க்குக் காரணமாக விளங்கின. எனினும், நீண்ட கால சிறுநீரக நோயினால் பெண்கள் மற்றும் சிறுவர்கள் அதிகளவு எண்ணிக்கையில் பாதிக்கப்படுகின்ற போதும் குடும்பங்களின் வருமானத்தை ஈட்டுபவர்களான ஆண் நெற்செய்கையாளர்களும் வேளாண் செய்கையாளர்களுமே பெருமளவிற்கு பாதிக்கப்படுகின்றனர். நோயின் காரணமாக ஏற்படும் வருமான இழப்புக்கள் முழுக் குடும்பத்தினதும் சமூகப் பொருளாதார நிலைமைகளை கடுமையாகப் பாதிக்கிறது. அனைத்தையுமுள்ளடக்கிய முறையான சமூக ஆதரவு முறைமை எதனையும் இலங்கை போதுமானளவில் கொண்டிராததமையினால் நோய்களிலிருந்தான உற்பத்தித்திறன் இழப்புக்கள், வைத்திய ஆலோசனைகள், மருந்துகள், இரத்த மாற்றுச் சிகிச்சைகள் மற்றும் சிறுநீரக மாற்றுச் சிகிச்சைகள் என்பனவற்றின் நியதிகளில் நலக் கவனிப்புச் செலவுகள் குடும்பத்தையும் சமூகத்தையும் பொருளாதார ரீதியான உறுதியற்றதொரு நிலைக்குத் தள்ளிவிடுகிறது. நீண்ட கால

சிறுநீரக நோயினைக் கண்டறிவதற்காக உயர் இடர்நேர்வினைக் கொண்ட குடித்தொகையினரைப் பரிசோதிக்கும் வேலைகள் 2008இல் சுகாதார அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டதுடன் இதுவரையில் நீண்ட கால சிறுநீரக நோயுடனான 28,594 நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர். நலம் மீதான அரசின் செலவினத்தினைத் தொடர்ச்சியாக அதிகரிக்கக்கூடிய நீண்ட கால நிலைமைகளான உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு போன்ற பிறநோய்களைக் கட்டுப்படுத்துவதனூடாக நேரகாலத்துடன் கண்டறிதலானது நோயாளர்களின் வாழ்நாளை அதிகரிக்கிறது. அதேவேளை சில ஆராய்ச்சியாளர்கள் நீண்ட கால சிறுநீரக நோய்க்கு வேளாண்மை இரசாயனங்களே காரணம் என்பதனைக் கண்டறிந்தமையினைத் தொடர்ந்து 2014 ஏப்பிறலிலிருந்து தடுக்கும் வழிமுறையொன்றாக அரசாங்கம் குளோபிறிபோஸ், புறோபனில் மற்றும் வபர்லி ஆகிய மூன்று பூச்சிக்கொல்லிகளின் இறக்குமதியினைத் தடைசெய்திருக்கிறது. அரசாங்கம் வளமாக்கிகளின் மிகையான பயன்பாட்டை ஊக்கமளிக்கச் செய்வதற்கும் சேதன வளமாக்கிகளை ஊக்கப்படுத்துவதற்கும் தற்போதுள்ள வளமாக்கிகள் மானிய நிகழ்ச்சித்திட்டத்தில் சீராக்கங்களை அறிமுகப்படுத்துகின்றது. மேலும், அரசாங்கம் இரத்த உறைவினைத் தடுத்தல், சிறுநீரக மாற்றுச் சிகிச்சை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மருந்து வழங்கல் என்பன உள்ளிட்ட சிகிச்சை முறைகளினூடாக நீண்ட காலச் சிறுநீரக நோயாளர்களுக்கு தொடர்ந்தும் ஆதரவினை வழங்கி வருகின்றது. மேலும், நோய் அடையாளம் காணப்பட்ட பொருளாதாரத்தில் பின்தங்கிய சிறுநீரக நோயாளர்களுக்கு மாதாந்த படியாக ரூ.3,000 இனை வழங்குவதற்கு சமூகப் பணிகள் திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்தது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நேர்மாற்று சுத்திகரிப்பு தொழில்நுட்ப பொறிகளினூடாக, குழாய்வழி நீர் கிடைக்காத இடங்களுக்கு தற்காலிக வழிமுறையொன்றாக சுத்தமான நீரை வழங்குகின்றதெனினும் அனைத்து வதிவோருக்கும் குறிப்பாக, சிறுநீரக நோயின் அச்சுறுத்தலுக்கு உட்படக்கூடிய பிரதேசங்களிலுள்ளவர்களுக்கு சிறுநீருக நோய்க்கு எதிரான நடவடிக்கையாக மட்டுமல்லாது நாட்டிலுள்ள குடியிருப்பாளர்கள் அனைவரும் சுத்தமான குடிநீரைப் பெறுவதை இயலச்செய்யும் ஒரு முயற்சியாகவும் பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கான நீர் வழங்கும் செயற்றிட்டங்களுக்கான வலுவான தேவை காணப்படுகின்றது. மேலும், நோய் பரவுவதனைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் நீரின் தரத்தினைப் பரீட்சித்தல் மற்றும் ஆய்வுகூட வசதிகள், பாடசாலைகளுக்கும் வைத்தியசாலைகளுக்கும் பாதுகாப்பான குடிநீர் வழங்கல், கைப்பம்பிகளையும் மற்றும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஏற்கனவேயுள்ள நீர்வழங்கல் திட்டங்களையும் புனரமைத்தல் என்பன இன்றியமையாத நடவடிக்கைகளாகும்.

**வீதி போக்குவரத்து நெரிசலின் காரணமாக பொருளாதாரத்திற்கு ஏற்படும் இழப்புக்களைக் கட்டுப்படுத்துவதற்கு அரச போக்குவரத்திற்கு உடனடி முன்னேற்றங்கள் தேவைப்படுகின்றன.** நாட்டின் போக்குவரத்து வலையமைப்பானது பொருளாதார வளர்ச்சி, நகரங்களில் அதிகரித்துவரும் குடித்தொகை அத்துடன் நகரங்களுக்கும் நகர்புறங்களுக்கும் மற்றும் கிராமியத் துறைக்குமிடையிலான அதிகரித்த நகர்வுகள் என்பனவற்றிற்குத் துணைபுரியக்கூடியதாக இருத்தல் வேண்டும். வினைத்திறனற்ற அரச பயணிகள் போக்குவரத்து முறைமை ஊர்தியொன்றுக்கு மிகக் குறைந்த பயணிகளைக் கொண்டு செல்லும் தனியார் ஊர்திகளின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்குக் காரணமாகி பாரிய போக்குவரத்து நெரிசல்களுக்கு வழிவகுத்து, குடியிருப்பாளர்களுக்கும் பொருளாதாரத்திற்கும் அதிகரித்த எரிபொருள் செலவுகளுக்கு காரணமாகியதுடன் உற்பத்தித்திறனான தொழிலாளர் மணித்தியாலங்களிலும் கணிசமான இழப்புக்களை ஏற்படுத்துகிறது. இது நாட்டின் உள்ளார்ந்த வளத்தின் வளர்ச்சியையும் குறைத்துவிடுகின்றது. நெரிசல்களுடன் இணைந்த பொருளாதார இழப்புக்கள் வருமான அதிகரிப்புக்களின் காரணமாக ஊர்திகளின் சொத்துடமைகளில் எதிர்பார்க்கப்படுகின்ற அதிகரித்த போக்குடன் மேலும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. வீதிகளின் கட்டுமானம் மற்றும் பேருந்துகளின் தொகுதிகள் அதிகரிக்கப்பட்டமை போன்ற பாரிய போக்குவரத்து உட்கட்டமைப்பு அபிவிருத்திகளில் அரசாங்கம் முதலீடு செய்திருக்கின்ற போதும் சிறந்த தர மற்றும் நம்பகமான பொதுமக்கள் போக்குவரத்து தேர்வுகள் இல்லாமை காரணமாக நெரிசல் பிரச்சனை தொடர்ந்தும் காணப்படுகிறது. இதனால், தற்போதுள்ள வீதிகள் மற்றும் புகையிரதப் போக்குவரத்து முறைமைகளை குறிப்பாக, நகர்ப் பிரதேசங்களில் மேம்படுத்துவதற்காக பொருத்தமான வழிமுறைகளை மேற்கொள்வது முக்கியமானதாகக் காணப்படுகிறது. பாதுகாப்பானதும் தெளிவானதுமான ஈருருளிப் பாதைகளை அடையாளமிடுவது போன்ற மாற்றுப் போக்குவரத்து முறைகளை ஊக்குவிப்பதும் பொதுமக்கள் போக்குவரத்திற்காக கால்வாய் வலையமைப்புக்களை காத்திரமான முறையில் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதும் நெரிசல்களை ஓரளவிற்குக் குறைப்பதற்கு உதவும். நடுத்தர காலத்தில் வினைத்திறனான அரச போக்குவரத்து முறைகளை மேம்படுத்துவதற்காகவும் தனியொருவர் பயணம் செய்யும் தனியார் ஊர்திகளிலிருந்தான பயணக் கேள்வியைக் குறைப்பதற்கும் அல்லது இக்கேள்வியை இடம் அல்லது நேரத்தை மாற்றுவதனூடாக மீளப் பகிர்ந்தளிப்பதற்குமென உபாயங்களையும் கொள்கைகளையும் பிரயோகிப்பதற்கு கொள்கை வகுப்போர் போக்குவரத்துக் கேள்வி முகாமைத்துவச் செயன்முறைகளைப் பின்பற்றுவதும் முக்கியமானதாகும்.

**தற்பொழுது இடம்பெற்றுவரும் வானிலைத்தன்மையின் மாற்றங்கள் மற்றும் எரிபொருளின் விலைகளுடன் இணைந்த தளம்பல்கள் புதுப்பிக்கத்தக்க வலு அபிவிருத்தி மீதான தேசிய கொள்கையொன்றினை வலுப்படுத்துவதற்கான தேவையினை வலியுறுத்தும் அதேவேளையில் இலங்கையில் குறைந்த செலவினைக் கொண்ட வலு உருவாக்கத்தில் நீடித்து நிலைத்திருக்கும் தன்மையினை அதிகரிப்பிற்கான தடைகளை வெற்றி கொள்வதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.** இலங்கை அனைத்து முக்கிய நீர் மூலவளங்களினதும் வலு உற்பத்தி உள்ளார்ந்த வளங்களை பயன்படுத்தியிருக்கின்ற போதும் வலுக் கலப்பிற்கு மதிப்பிட முடியாத பங்களிப்பினை வழங்கக்கூடிய இயலாற்றலைக் கொண்டுள்ள, நீர்ப்பாசன வலையமைப்புக்கள் உள்ளிட்ட பல ஏனைய நீர்மூலவளங்கள் இன்னமும் பயன்படுத்தப்படாமலேயே இருக்கின்றன. நாட்டில் குறிப்பாக, மன்னார், புத்தளம் மற்றும் யாழ்ப்பாணம் அதேபோன்று மலைநாட்டுப் பிரதேசங்களில் குறிப்பிடத்தக்களவு காற்று வலு உள்ளார்ந்த வளங்கள் காணப்படுவது அடையாளம் காணப்பட்டிருக்கிறது. மேலும், உடனடியாகக் கிடைக்கத்தக்கதாகவுள்ள உயிரியல் வாயு மூலவளங்கள், வேளாண்மைக் கழிவுகள் மற்றும் மாநகரசபை திண்மக்கழிவுகள் என்பனவும் குறிப்பிடத்தக்களவு வலுவை உருவாக்கத்தக்க அளப்பரிய உள்ளார்ந்த வளத்தினைக் கொண்டிருக்கின்றன. உடனடியாகக் கிடைக்கத்தக்க இன்னொரு மின்வலு மூலமான சூரியவலு, உயர்ந்த மட்ட அளவு உயர்ந்த மட்ட அணுகுதன்மை மற்றும் சூழலுக்கு சாதகமான வலுவிற்கான பங்களிப்பு என்பவற்றைக் கொண்டிருக்கின்ற போதும் இலங்கை அதனைப் போதுமானளவு பயன்படுத்துவதில்லை. அத்தகைய புதுப்பிக்கத்தக்க வலு மூலவளங்களின் உள்ளார்ந்த வளங்களை மதிப்பீடு செய்வதற்கும் அத்தகைய மூலவளங்களைப் பயன்படுத்துவதிலுள்ள தொழில்நுட்பவியல், நிதியியல் மற்றும் பொருளாதாரத் தடைகளை வெற்றிகொள்ளும் விதத்தில் புத்தம் புதிய விடயங்களை புலனாய்வு செய்வதற்கும் தொழில்துறை நிபுணர்களையும் கொள்கை வகுப்போரையும் ஒன்றாக இணைத்துக் கொள்வது அவசியமானதாகும். அத்தகைய கொள்கைகள் நுண்பாக மட்டச் செயற்றிட்டங்களுக்காக தனியார் துறைப் பங்கேற்பாளர்களைக் கவருதல், நீண்ட கால உதவுதொகை வழங்கப்படாத போட்டி மூலவளங்களின் பொருளாதார செலவு பகுப்பாய்வுகள், இயக்கவாற்றல் வாய்ந்த முன்னுரிமைப்படுத்தல் பொறிமுறைகள் மற்றும் நீண்ட கால அத்துடன் குறைந்த செலவினைக் கொண்ட நிதியிடலில் கிடைப்பனவு என்பனவற்றின் மீது கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும். இது புதுப்பிக்கத்தக்க வலுவினால் வழங்கப்படும் நன்மைகளை நாடு பெற்றுக்கொள்வதனை இயலச்செய்யும். இதேவேளை, வதிவிடம் மற்றும் வியாபாரம் ஆகிய இரு துறைகளிலும் வலுச்சேமிப்பு நடைமுறைகளை ஊக்குவிப்பதற்கு தொடர்ச்சியான முயற்சிகள் அவசியமாகும்.

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக ரீதியான ஆற்றலை உறுதிப்படுத்த உள்நாட்டுப் பெற்றோலிய உற்பத்திகளுக்காக உத்வேகம் மிக்க விலையிடல் சூத்திரமொன்றினைக் கொண்டிருப்பது இன்றியமையாததாகவுள்ள வேளையில் உலகளாவிய எண்ணெய் விலைகளின் வேறுபாடுகளின் தாக்கமானது வெளிப்படையாகவே உள்நாட்டுப் பயன்படுத்துநரிடம் சுமத்தப்படுகிறது.** உலக மசகெண்ணெய் விலைகள் உலகளாவிய நிரம்பல் மற்றும் கேள்வி அதிர்வுகளுக்கும் எதிர்பார்ப்புக்களுக்கும் தொடர்ச்சியாக உட்பட்டு வருவதுடன் பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விலைகளை நீண்ட காலத்திற்கு குறிப்பிட்டதொரு விலை மட்டத்தில் பேணுவது உள்நாட்டு எண்ணெய் நிரம்பலர்களின் மீது அல்லது வாடிக்கையாளர்களின் மீது சுமையை உருவாக்கும். கப்பலேற்றல் பெறுமதி விலைகள், கப்பற்சரக்குக் கட்டணம் மற்றும் காப்புறுதிச் செலவு, செலாவணி வீதம், துறைமுகக் கட்டணங்கள், வரிகள் மற்றும் தீர்வைகள், உள்ளூரில் சுத்திகரிக்கப்பட்ட மற்றும் சுத்திகரிக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட அளவுகள் அத்துடன் விற்பனை மற்றும் நிருவாகச் செலவுகள் என்பனவற்றைக் கணக்கிலெடுக்கின்ற விலையிடல் சூத்திரம் இவ்வெளிவாரி விளைவுகளை மிகக் குறைக்கும். விலையிடல் சூத்திரமானது கால இடைவெளிகள், திருத்தத்திற்கான தூண்டல் மட்டம் மற்றும் பெரும்பாலும் மொத்தச் செலவின் சதவீதமாக நடைமுறை சில்லறை விலைகளின் மீது விதிக்கப்படவுள்ள மாற்றத்தின் அளவு என்பனவற்றின் மூலமாக வலுப்படுத்தப்பட முடியும். ஆகவே, உள்நாட்டுப் பெற்றோலிய உற்பத்திகளுக்கு விலையிடல் சூத்திரமொன்றினை அறிமுகப்படுத்துகின்ற அரசாங்கத்தின் தற்போதைய முயற்சி சரியான திசையில் எடுக்கப்பட்டதொரு நடவடிக்கையாக ஊக்குவிக்கப்படுதல் வேண்டும். அதேநேரத்தில் அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் நட்டத்தைக் குறைப்பதற்கு ஏனைய முக்கிய அரச பயன்பாடுகளுடன் தொடர்புடைய கிரய பிரதிபலிப்பு விலையிடல் பொறிமுறையைப் பின்பற்றுவது அத்தியாவசியமானதாகும்.

**வேளாண்மைத் துறையானது தாழ்ந்த உற்பத்தித்திறன், பன்முகப்படுத்தல் போதாமை, உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் வினைத்திறனற்ற நீர் முகாமைத்துவம் அதேபோன்று காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் இயற்கைச் சவால்கள் போன்ற பாரிய பிரச்சனைகளினால் நெருக்கடிக்குள்ளாகி வருகிறது. ஆகவே, வேளாண்மை ஆராய்ச்சி, நீர் மூலவளங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி ஆகிய துறைகளில் பாரிய முதலீடுகளை மேற்கொள்வதன் மூலம்**

**இத்துறையினை மீளெழுச்சிப்படுத்துவதன் அவசியம் குறித்து அடிக்கடி எடுத்துக்காட்டப்படுகிறது.** மேம்பட்ட பன்முகப்படுத்தல், உற்பத்தித்திறன் மற்றும் போட்டித்தன்மை, இத்துறையினை உயர் வளர்ச்சி உத்வேகத்திற்கு உட்படுத்தும் விதத்தில் தற்போதைய வேளாண்மைக் கொள்கைகளைச் சீர்திருத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளுதல் என்பனவற்றுடன் இணைந்து குறைந்த பெறுமதியைக் கொண்ட பாரம்பரிய முறையிலிருந்து உயர் பெறுமதி கொண்ட நவீன வேளாண்மைக்கு மாறுவதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதன் மூலம் உணவுப் பாதுகாப்பினை அதிகரித்துக் கொள்ளலாம். மேலும், விஞ்ஞானபூர்வமான பயிர்ச்செய்கையினை ஊக்குவித்தல், வேளாண்மையினை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களை ஊக்குவித்தல் மற்றும் வேளாண்மையாளர் அமைப்புக்கள் மற்றும் தனியார் துறையினரின் பங்கேற்புடன் வர்த்தக ரீதியான வேளாண்மையினை ஆரம்பித்தல் என்பன நியாயமான அடிப்படையிலான அபிவிருத்திக்கும் மேம்பட்ட விளைவுகளுக்கும் இன்றியமையாததாகும். அதேநேரம் குறிப்பாக மழைநீரை நம்பிய பகுதிகளில் உயர் பெறுமதிகூட்டப்பட்ட வேளாண்மை உற்பத்திகளுக்கு பன்முகப்படுத்தலை மேற்கொள்வது வேளாண்மை வளர்ச்சியை உயர்த்துவதற்கான குறிப்பிடத்தக்க காரணியாக இருக்கும். இது தொடர்பில், வேளாண்மைப் பதனிடலை விரிவுபடுத்துவதற்கும் உற்பத்தியாளர்களிலிருந்து நகர மையங்கள் மற்றும் ஏற்றுமதிச் சந்தைகள் வரையான பெறுமதிச் சங்கிலிகளைத் தரமுயர்த்துவதற்கும் வழிமுறைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இத்துறையின் விரிவாக்கத்திற்காக உட்கட்டமைப்பிற்குப் போதுமான நிதியில்லாமையின் காரணமாகவும் அதிநவீனத்துவம் வாய்ந்த தொழில்நுட்பங்களைப் பெறுவதற்கான வசதிகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையினாலும் பல ஆண்டுகளாகப் பாதிக்கப்பட்டிருக்கும் வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளைப் பலப்படுத்துவதில் கவனம் செலுத்துதல் வேண்டும். அதேவேளை, கைத்தொழில், வீட்டுத்துறை மற்றும் வேளாண்மைத் துறைகள் என்பன உள்ளிட்ட பல்வேறு ஆர்வலர்களினாலும் அதிகரித்த நீருக்கான போட்டியானது நீர்ப்பாசனத்தின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக நீர்மூலவள முகாமைத்துவத்தினை மேம்படுத்துதல், கூடிய வினைத்திறனான நீர்வழங்கல் பொறிமுறை மற்றும் நீர்ப்பாசன முறைமை என்பனவற்றிற்கான தேவையை வலியுறுத்தியது.

**அதிகரித்த உற்பத்திச் செலவு, பழமைவாய்ந்த பொறிகள், குறைந்த விளைச்சல், வயது முதிர்ந்த பயிர்கள், குறைந்தளவிலான பெறுமதிகூட்டல்கள் மற்றும் போதுமானதற்ற பன்முகப்படுத்தல் என்பன பெருந்தோட்டத் துறையின் முக்கிய பிரச்சனைகளாகக் காணப்படுகின்றன.** இப்பிரச்சனைகள் மீள்பயிரிடுகை, சிறந்த வகைப் பயிர்களைப் பயிரிடல், வளமாக்கிகளின் காத்திரமான பயன்பாடு, பூச்சிக்கொல்லி முகாமைத்துவ நடைமுறைகள், பன்முகப்படுத்தல், மேம்பட்ட தயாரிப்பு மற்றும் பெறுமதிகூட்டல் மற்றும் காத்திரமான சந்தை வழிப்படுத்தல்களை நிறுவுதல் என்பனவற்றிற்கான தேவையினை எடுத்துக்காட்டுகின்றன. அதேவேளை, பண்ட விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி உயர்வடைந்த உற்பத்திச் செலவுகளுடன் சேர்ந்து இறப்பர் மற்றும் தேயிலை இரண்டு தொழில்களினதும் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையை ஏற்படுத்தும் முக்கிய சவாலாகக் காணப்படுகிறது. இலங்கையில் பயிர் செய்யப்படும் பயிர்களில் பெரும் எண்ணிக்கையானவை பல்வேறுபட்ட வேளாண்மைப் பதனிடல் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யக்கூடிய விதத்தில் கணிசமான உள்ளார்ந்த வளத்தினைக் கொண்டிருக்கின்ற போதும் பெரும்பாலான பயிர்கள் கூடியளவு பெறுமதிகூட்டல்கள் இல்லாமல் மூலப்பொருள் வடிவிலேயே ஏற்றுமதியாகின்றமை அவதானிக்கப்பட்டிருக்கின்றது. எனவே, அனைத்து ஆர்வலர்களும் பெருந்தோட்டத் துறையினை மிக இலாபம் மிக்கதாகவும் உறுதியானதாகவும் மாற்றுவதற்கு பெருமளவு முயற்சிகளை மேற்கொள்வது அவசியமாகும்.

**அரச மூலவளங்கள் மீதான தடைகளுக்கு மத்தியிலும் சமூக பொருளாதார உட்கட்டமைப்பினை இலாபம் தரும் வாழ்வாதார வாய்ப்புக்களை இயலுமைப்படுத்தும் பொருட்டு உயர்வடைந்துவரும் நிதியிடல் இடைவெளியினை ஈடுசெய்வதற்கு அரச தனியார் பங்குடமை போன்ற புத்தம்புதிய பொறிமுறைகளை அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலனையில் கொள்ள வேண்டியிருக்கும்.** கல்வி, நலம், மின்வலு, வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் போன்ற இன்றியமையாத உட்கட்டமைப்பில் செய்யப்படும் உறுதியான அரச முதலீடுகள் இலங்கை மத்தியதர வருமான நாடாக விரைந்து மாற்றமடைவதற்கு அதற்குப் பங்களித்தன. எனினும், மாற்று நிதியிடல் மாதிரிகளிலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் அபரிமிதமான உள்ளார்ந்த வளத்தினை நாடு கொண்டிருக்கிறது. இது தனியார் துறை மூலதனங்களையும் பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளினதும் நிபுணத்துவத்தையும் உயர்த்த உதவும். தனியார் துறை நிதியிடல் அரச துறையின் கடனையும் செலவினச் சுமையினையும் தளர்த்த உதவும் வேளையில் அரச தனியார் பங்குடமையில் தனியார் நிதியிடுவது தனியார் துறைக்கு முதலீடுகளைக் கிடைக்கச்செய்யும் என்பதுடன் வெற்றிகரமான அரச தனியார் பங்குடமை நிறுவன ரீதியான ஒழுங்குபடுத்தல்களின் உத்வேகம் மிக்க அபிவிருத்திகளுக்கு உதவுவதுடன் மற்றைய துறைகளுக்கிடையே நடவடிக்கைகளைத் தூண்டக்கூடிய நம்பிக்கையினையும் உருவாக்குகிறது. தனியார் துறையினரின் இயல்பான போட்டித்தன்மை காரணமாக அதன் ஈடுபாடு கூடியளவு பயன்மிக்க தன்மைகளுக்கும் வினைத்திறன் மிக்க பணிகளை வழங்குவதற்கும் வழிவகுக்கும். எனினும், தனியார் துறைப் பங்கேற்பினை வெற்றிகரமாக கவர்கின்ற

பொறுப்பும் அத்தகைய உபாயம் மிக்க பங்கேற்பிலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்வதும் பொருத்தமான பாதுகாப்பு, தரமான பணிகள் மற்றும் விலையிடல் என்பனவற்றை உறுதிப்படுத்தும் நியமங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தும் அரசாங்கத்தின் இயலாற்றலிலேயே தங்கியிருக்கிறது. ஆகவே, அரச துறை ஒழுங்குமுறைப்படுத்துநர், வசதிப்படுத்துநர் மற்றும் இறுதியாக கொள்கை வகுப்பவர் என்ற அதன் வகிபாகத்தில் சிறந்த ஆளுகையினையும் பற்றிப்பிடிக்க வேண்டியிருக்கும். உட்கட்டமைப்பு முறிகள் இன் வழங்கலுக்கு வசதியளிக்கக்கூடிய உட்கட்டமைப்பு படுகடன் நிதியங்களை உருவாக்குவதற்கான உள்நாட்டு முறிகள் சந்தையினை அபிவிருத்தி செய்வதனூடாகவும் கொள்கை முன்னெடுப்புக்களூடாகவும் இம்முன்னெடுப்புக்களுக்குப் பங்களிக்கும் விதத்தில் நிதியியல் துறையினை அரசாங்கம் தீவிரமாக ஊக்குவித்தல் வேண்டும். தனியார் துறைப் பங்கேற்பினை வெற்றிகரமாக கவர்வதும் அரச தனியார் பங்கேற்பு நன்மைகளைப் பெற்றுக்கொள்வதும் அரசாங்கத்தின் நிலையான கொள்கை மற்றும் கடப்பாடுகளின் மீதும் தூண்டுதலளிக்கும் சட்ட மற்றும் பேரண்டப் பொருளாதாரச் சூழலை உருவாக்குவதன் மீதும் பெருமளவிற்குத் தங்கியிருக்கும்.

**வயது முதிர்ந்த குடித்தொகை விரைந்து அதிகரித்து வருவதன் காரணமாக அரச துறை ஓய்வூதியத் திட்டத்தின் உறுதித்தன்மையினை உறுதிப்படுத்தும் அதேவேளையில் விரிவான தொழிற்படையை உள்ளடக்கிய சந்தை சார்ந்த ஓய்வூதியம் மற்றும் ஓய்வுகால நிதியத் திட்டத்தினை அறிமுகப்படுத்துவதும் அவசியமானதாகவுள்ளது.** ஓய்வூதியம்பெறுவோரின் எண்ணிக்கை மற்றும் ஓய்வூதியப் படிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன அரச வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடத்தக்க மீண்டெழும் செலவினமாகக் காணப்படுகின்றது. படிப்படியாக அதிகரித்துச் செல்லும் வயது முதிர்ந்தோர் குடித்தொகை மற்றும் அதிகரித்துச் செல்லும் வாழ்நாள் எதிர்பார்ப்புக் காலம் என்பனவற்றின் விளைவாக நடுத்தர காலத்தில் இணைந்த நிதியியல் சுமை குறைவடையுமென எதிர்பார்க்கப்படவில்லை. ஓய்வூதிய வயதினை அடைகின்ற குடித்தொகையின் அதிகரித்த பங்கின் தேவைப்பாடுகளை நிறைவேற்றும் விதத்தில் சேமிப்பு மற்றும் ஓய்வூதிய சாதனங்களை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தினை மாற்றமடைந்துவரும் குடித்தொகையியல் வலியுறுத்துகின்றது. இச்சாதனங்களை அபிவிருத்தி செய்வதற்கான அவசியம், ஒப்பீட்டு ரீதியில் சந்தையில் நிலவும் குறைந்தமட்ட வட்டி வீதங்களின் மூலமும் அநேக ஓய்வூதியம்பெறுவோர் வட்டி வருமானங்களில் பெருமளவிற்கு தங்கியிருப்பதன் மூலமும் தீவிரமடைந்திருக்கிறது. ஒரு சில நிதியியல் நிறுவனங்கள் சில சாதனங்களை ஏற்கனவே அறிமுகப்படுத்தியுள்ள வேளையில் நீண்ட கால சேமிப்பாளர்களின் தேவைகளை ஈடுசெய்ய வருடாந்த இலாபங்கள், ஓய்வூதிய நிதியத் திட்டங்கள் மற்றும் ஓய்வூதியத் திட்டங்கள் போன்ற மாற்று சேமிப்பு மற்றும் ஓய்வூதிய சாதனங்களை மேலும் அபிவிருத்தி செய்வது அவசியமானதாகும். அத்தகைய சாதனங்களை அறிமுகப்படுத்துவது ஓய்வுபெற்றோருக்கு பாதுகாப்பொன்றினை வழங்கும் வேளையில் நிதியியல் துறையின் அபிவிருத்திக்கும் வசதியளிப்பதுடன் நீண்ட முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்டிருப்பதனால் செயற்றிட்டங்களுக்கான நீண்ட கால நிதியிடல் மூலமாகவும் விளங்கும். அதேவேளையில், அரச துறையில் புதிதாக இணைவோருக்கான அரசதுறை ஓய்வூதியத் திட்டத்தின் உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்தும் விதத்தில் 2016இற்கான வரவு செலவுத்திட்டத்தில் பங்களிப்பு ஓய்வூதிய திட்டமொன்று முன்மொழியப்பட்டிருக்கிறது.

**நிதியியல் இடையேற்பாடுகளின் வினைத்திறனை உயர்த்துவதனூடாக நிதியியல் துறையினை ஆழப்படுத்தல், பல்வகைப்பட்ட நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகளை அறிமுகப்படுத்தல் மற்றும் முறைசார் நிதியியல் வசதிகளைப் பெற்றுக்கொள்வதனை மேம்படுத்தல் என்பன பொருளாதாரத்தின் உயர்ந்த வளர்ச்சி உத்வேகத்திற்கு ஊக்கமளிப்பதற்கு இன்றியமையாத ஒன்றாக விளங்கும்.** நிதியியல் அபிவிருத்திகள் பொருளாதாரத்தின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை அதிகரிக்கின்ற வேளையில், சேமிப்புக்களைத் திரட்டுதல், தகவல் பரிமாற்றங்களை மேம்படுத்துதல், மூலவள ஒதுக்குகளின் மேம்பாடு மற்றும் பன்முகப்படுத்தல் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கு வசதியளித்தல் என்பனவற்றினூடாக பொருளாதார வளர்ச்சியையும் உத்வேகப்படுத்துகின்றது. பன்முகப்படுத்தப்பட்ட சாதனங்களுடனான ஆழமானதும் திரவத்தன்மை வாய்ந்ததுமான நிதியியல் முறைமைகள் அதிர்வுகளின் தாக்கத்தினை இல்லாமல் செய்வதனால் நிதியியல் அபிவிருத்தியானது நிதியியல் உறுதிப்பாட்டினையும் மேம்படுத்துகிறது. இதன்படி, கம்பனி மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறைகளுக்கான முக்கியமான கடன் வழங்குநராக வங்கித்துறை தொடர்ந்துமிருக்கின்ற வேளையில், பொருளாதாரத்தின் பன்முகப்படுத்தப்பட்ட தேவைகளைப் பூர்த்திசெய்யும் விதத்தில் நீண்ட கால நிதியிடல் போதுமானளவில் கிடைப்பதனை உறுதிப்படுத்துவதற்காக சந்தையினை அடிப்படையாகக் கொண்ட மாற்று நிதியிடல் முறைகளை அறிமுகப்படுத்தி ஊக்குவிப்பதற்கான தேவை காணப்படுகின்றது. தனியார் துறை முதலீட்டு நடவடிக்கையினை உத்வேகப்படுத்துவதற்கு இலக்கிடப்பட்ட கொள்கை வழிமுறைகளை காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு இது இன்றியமையாததாகும். இதன்படி, நடுத்தர காலத்தில் ஆழமானதும் திரவத்தன்மை மிக்கதுமான கம்பனி படுகடன் சந்தைகளை அபிவிருத்தி செய்வதன் மீது கூடியளவு கவனம் செலுத்தப்படுகின்ற வேளையில் உள்நாட்டு

மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் அதிகரித்த சந்தைப் பங்கேற்பினூடாக பங்குரிமைச் சந்தைகளின் ஆழத்தினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிராந்திய நிதியியல் மையமொன்றாக தோற்றம் பெறுவதற்கு நாடு ஆர்வம் காட்டுவதனால் சிக்கலான நிதியியல் சாதனங்களை உள்ளடக்கும் விதத்தில், திறன்வாய்ந்ததும் திரவத்தன்மை மிக்கதுமான நாணய, பெறுதி மற்றும் பண்டச் சந்தைகளைப் படிப்படியாக அபிவிருத்தி செய்வதும் இயக்கத்தன்மை வாய்ந்த உலகளாவிய ஒழுங்குமுறைப்படுத்தல் அமைப்பொன்றினை அபிவிருத்தி செய்வதும் முக்கியமானதாகும். அதேவேளை, நன்கு அபிவிருத்தியடைந்த தனியார் பங்குரிமை மூலதனம் மற்றும் துணிகர மூலதனத் தொழில்துறை போன்றன போதுமானளவில் அபிவிருத்தியடையாமலிருப்பது கரிசனைக்குரியதொன்றாகக் காணப்படுகிறது. ஏனெனில் மலேசியா, வியட்நாம், பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தோனேசியா போன்ற தோற்றம்பெற்று வருகின்ற சந்தைகளுக்கான துணிகர தொழில்முயற்சி மூலதனப் பாய்ச்சல்களில் காணப்படுகின்றவாறு அத்தகைய தொழில்துறைகளின் பிரசன்னம் அறிவினால் தூண்டப்பட்ட ஒன்றாக மாற்றமடையும் பொருளாதாரத்தின் முயற்சிக்கு ஊக்கியாக விளங்க உதவும். நிதியியல் துறையின் அபிவிருத்தியானது, பொருளாதார ரீதியில் பின்னடைந்துள்ள பிரதேசங்களுக்கு நிதியியல் வசதி கிடைக்கச் செய்வதனை மேம்படுத்துதல், நீண்ட கால சேமிப்பாளர்களின் தேவைகளை நிறைவுசெய்யும் விதத்தில் மாற்றுச் சேமிப்பு மற்றும் ஓய்வூதிய சாதனங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் புதுப்பிக்கத்தக்க மற்றும் மாற்று வலுவுடன் தொடர்பான புத்தம்புதிய முயற்சிகளுக்கு நிதியிடல் போன்ற பொருளாதாரத்தின் பூர்த்தி செய்யப்படாத பல தேவைகளையும் நிறைவுசெய்யும்.

**சீனாவிலிருந்து ஐரோப்பாவிற்கான கடல்பட்டுப் பாதையின் மத்தியில் இந்து சமுத்திரத்தின் நடுவே கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடத்தில் அமைந்துள்ள இலங்கைத் தீவு நாட்டின் உள்ளார்ந்த வளத்தினை பயன்படுத்தத்தக்கதாக இருத்தல் வேண்டும்.** அமைவிட அநுகூலங்களுக்கு புறம்பாக, கல்விகற்ற தொழிற்படை, மேம்பட்ட பௌதீக உட்கட்டமைப்பு, இப்பிராந்தியத்தில் ஒப்பீட்டு ரீதியில் இலகுவாக வியாபாரத்தினை செய்யக்கூடிய தன்மை, ஒப்பீட்டு ரீதியில் குறைந்த வரி அமைப்பு, பேரண்டப் பொருளாதாரப் பிரச்சனைகள் மீதான பரந்த கொள்கை நோக்கில் அரசியல் இணக்கத்தன்மை அதேபோன்று பிராந்தியத்தின் விரைந்த வளர்ச்சி என்பனவற்றை உள்ளடக்கிய இலங்கையின் பலத்தினை இப்பிராந்தியத்தின் முக்கிய முதலீட்டாளர் நாடாக இலங்கையினை மேம்படுத்துவதற்குப் பயன்படுத்த முடியும். தென்னாசிய பிராந்தியத்தின் ஒரு பகுதியாக இலங்கை அடையாளம் காணப்பட்ட போதும், சமூக பொருளாதார அபிவிருத்தி நியதிகளில் அது இப்பிராந்தியத்திலுள்ள மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் பொதுவான தன்மைகளைவிட பெருமளவு வேறுபாடுகளைக் கொண்டிருக்கிறது. இது, இப்பிராந்தியத்தில் நாடு சிறந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கு இயலச்செய்திருந்ததுடன். கிழக்காசிய பொருளாதார ஜாம்பவான்களுடனும் அதேபோன்று மேற்கில் முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்களுடனும் இணைப்புக்களை ஏற்படுத்தக்கூடிய தனித்துவமான வாய்ப்பினை வழங்கியிருக்கிறது. இலங்கை உலகளாவிய பெறுமதிச் சங்கிலியில் உள்ளார்ந்த வளம் மிக்க தவிர்க்கமுடியாததொரு பகுதியாகவும் இருப்பதனால் ஏற்பாட்டுப் பணிகளில் இலங்கை மிகச் சிறந்த போட்டித்தன்மையினையும் அநுகூலங்களையும் கொண்டிருக்கும். இதனைப் பொறுத்தவரை, முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மேம்படுத்துவதற்கும் இலங்கையை நடுத்தர காலத்தில் தென்னாசியாவின் மிகச் சிறந்த, உலகளாவிய மற்றும் போட்டித்தன்மை கொண்ட பொருளாதார நாடாக அடையாளப்படுத்துவதுடன் வர்த்தக மற்றும் முதலீடுகளுக்கான இந்து சமுத்திரத்தின் மையம் என்ற அதன் நிலையினை மீளவும் பெறுவதற்கு ஒருங்கிணைந்த முயற்சிகள் அவசியமானவையாகும்.

**2015ஆம் ஆண்டு கடந்த காலங்களில் கட்டியெழுப்பப்பட்ட பொருளாதாரத்தின் அமைப்பியல் பாதிக்கப்படக்கூடிய தன்மையினை எடுத்துக்காட்டியதுடன் உயர்ந்த வளர்ச்சியும் - தாழ்ந்த பணவீக்கத்தினையும் கொண்ட பாதையில் நாட்டின் முன்னேற்றத்தினை உறுதிப்படுத்துவதற்கு இப்பாதிக்கப்படக்கூடிய தன்மையினை சீர்செய்வதற்கு தீர்க்கமான நடவடிக்கைகள் இன்றியமையாததாகவுள்ளது.** குறுங்கால இறை மற்றும் நாணயத் தூண்டல்கள் பொருளாதார வளர்ச்சிக்குத் தொடர்ச்சியாக ஆதரவளிப்பதற்குப் போதுமானதாக இல்லாததுடன் இறுக்கமான கொள்கை ஏற்பாடுகள் மற்றும் மூலவளத் தடைகள் என்பன அத்தகைய தூண்டல்கள் நீண்ட காலத்திற்கு தாக்குப்பிடிக்கக்கூடியதாக இல்லையென்ற உண்மையினையும் சுட்டிக்காட்டியது. எனவே அரசிறை மற்றும் செலவினப்பக்கத்திலும் அதேபோன்று அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மீதும் இறைச் சீர்திருத்தங்களை ஏற்படுத்துதல், நிலையான கொள்கையினை உறுதிப்படுத்துதல், படுகடன் உருவாக்க மூலதனப் பாய்ச்சலைக் கவரும் பொருட்டு இலகுவாக வியாபாரத்தினை மேற்கொள்வதனை மேம்படுத்துதல் என்பனவற்றினை உள்ளிட்ட பொருத்தமான கலவையுடன் கூடிய அமைப்பியல் சீர்திருத்தங்களைப் பின்பற்றுவது நாட்டிற்கு அவசியமானதாகவுள்ளது. இத்தகைய சீர்திருத்தங்கள் தனியார் துறையின் பாரிய பங்கேற்புடன் மனித மூலதனம் உள்ளிட்ட நாட்டின் பலத்தினை சரியான விதத்தில் பயன்படுத்துவதனையும் ஒருங்கிணைப்பதனையும் நோக்காகக் கொண்டிருக்கின்றது.